விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 29 ஞாயிற்றுக்கிழமை (12.02.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 055

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## எரிபொருள் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோல் விலை லீற்றருக்கு 12 ரூபாயினாலும் டீசல் விலை லீற்றருக்கு 31 ரூபாயினாலும் மண்ணெண்ணெய் விலை லீற்றருக்கு 35 ரூபாயினாலும் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியத் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்விலை அதிகரிப்பையடுத்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (சி.பி.சி) எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒரு லீற்றர் 90 ஒக்டேன் பெற்றோல் விலை 149 ரூபாயாகவும் 95 ஒக்டேன் பெற்றோல் விலை 167 (02ஆம் பக்கம் பார்க்க)


## ஏப்ரலுக்கு முன் பொன்சேகாவுக்கு விடுதலை அனோமாவிடம் அமெரிக்கா கூறியதாம்!

(கொழும்பு)

சிறை வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளை அமெரிக்காவும் இந்தியாவும் கூட்டாக மேற்கொண்டுவருவதாக கூறப்படுகின்றது.

அத்துடன் சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில் அரசாங்கத்திடம் மன்னிப்புக் கோர வேண்டாம் எனவும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் அவரை விடுதலை செய்வதற்கான அழுத்தங்களை அரசுக்குக் கொடுப்பதாக அமெரிக்கத் தரப்பால் அனோமா பொன்சேகாவிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரைவில் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் என்றும் அவரின் உரையில் சரத்பொன்சேகாவின் விடுதலைப் பற்றியும் குறிப்பிடப்படலாம் என்றும் அரசியல் வட்டாரத்தில் பரவலாக பேசப்படுகின்றது. (ந-8,11)



# வெள்ளைக்கொடியுடன் வரும் புலிகளைக் கொல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தகவல்கள் அம்பலம்!

## அமெரிக்காவின் கையில் ஒலிப்பதிவு நாடா

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்தாலும், அனைவரையும் கொல்வது என்பது தொடர்பில் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும், களமுனை படைத்தளபதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலின் ஒலிப்பதிவு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் போர்க் குற்ற விவகாரங்களுக்கான பிரிவுக்கு கிடைத்துள்ளதாக தெரிய வருகின்றது. (23ஆம் பக்கம் பார்க்க)



பாகிஸ்தான் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்நாட்டு ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மற்றும் பிரதமர் யூசுப் ரசா கிலானியை இஸ்லாமாபாத்தில் நேற்று சந்தித்த போது அவருக்கு வழங்கப்பட்ட இராணுவ மரியாதையை ஏற்று நிற்பதை படத்தில் காணலாம்.

## இலங்கையின் போக்கில் இந்தியா அதிருப்தி ஜெனிவாவில் பாடம் புகட்ட விருப்பம்

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருவதாக இந்திய ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்படுமாக இருந்தால், அதனை இந்தியா எதிர்த்து இலங்கை அரசை காப்பாற்றும் என கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கை அமைச்சர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டுவருவதில் அமெரிக்கா அதிக கவனம் செலுத்திவருவதுடன், இதனை இந்தியாவின் ஒத்துழைப்புடன் மேற்கொள்வதற்கான முயற்சிகளையும் அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது.

நிலைமை இதுவாக இருக்க இலங்கை அரசு இந்தியாவுடனான உறவு என்பதற்கு அப்பால் இந்தியாவின் பகைமை நாடுகளான சீனா மற்றும் பாகிஸ்தானுடன் நெருங்கிய உறவை பலப்படுத்தி வருவதானது இலங்கை அரசு மீது இந்தியாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதனால் ஐ.நா. மனித உரிமை (23ஆம் பக்கம் பார்க்க)

## மாலைதீவுப் புரட்சி இலங்கையிலும் ஏற்படும்!



(மாலே)

மாலைதீவில் ஏற்பட்ட புரட்சி போன்று இலங்கையிலும் மிக விரைவில் புரட்சி ஒன்று ஏற்படும் என (23ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தமிழக விடுதியில் மது போதையில் ரகளை


### பொலிஸார் தூக்கிச்சென்று அறைக்குள் பூட்டினர்

(சென்னை)

தமிழ் நாட்டில் உள்ள விடுதி ஒன்றில் மது போதையில் குழப்பம் விளைவித்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானை பொலிஸார் தூக்கிச் சென்று அவரது அறைக்குள் பூட்டிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிராமிய தொழில்துறை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் நண்பர் இல்லத் திருமணம் நேற்று முன்தினம் திருச்சியில் நடந்தது.

இதில் பங்கேற்ற (24ஆம் பக்கம் பார்க்க)



## பாக். ஜனாதிபதி, பிரதமருடன் இலங்கை ஜனாதிபதி சந்திப்பு

### ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகின

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அந்நாட்டு ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, பிரதமர் யூசுப் ரசா கிலானி ஆகியோரைச் சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு இஸ்லாமாபாத்தில் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, இரு நாடுகளுக்கிடையேயான ஊடக ஒத்துழைப்பு, தொழில்பயிற்சி உள்ளிட்ட (23ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள்...

ரூபாயாகவும், ஒரு லீற்றர் டீசல் விலை 115 ரூபாயாகவும், மண்ணெண்ணை விலை லீற்றருக்கு 106 ரூபாயாகவும் இருக்கும்.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் நேற்று நள்ளிரவு முதல் பெற்றோல் விலையை லீற்றருக்கு 12 ரூபாயினாலும் டீசல் விலையை லீற்றருக்கு 31 ரூபாயினாலும் அதிகரித்துள்ளதாக அறிவித்துள்ளது.

(ந-8,11)

## துடுப்பாட்ட சுற்றுப் போட்டி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் விக்ரம்-ராஜன் -கங்கு துடுப்பாட்ட சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆர்.சிவசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் திருநெல்வேலிக் கிளை முகாமையாளர் ரி.சந்திரகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (ந-6)

# அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கு எதிராக தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்



தமிழகம் கோயம்புத்தூரில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

விடுதி ஒன்றில் தங்கியிருந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மதுபோதையில் அங்குள்ளவர்களுடன் பிரச்சினைப்பட்டதாக தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் அமைச்சர் விடுதியில் வன்முறைகளில் ஈடுபடவில்லை என்று அமைச்சரின் ஊடகப் பிரிவு இலங்கையில் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அரசியல் பின்னணியாக இருக்கலாம் என்று இலங்கையின் பிரதி அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டம் தொடர்பில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கெனவே கடந்த மாதத்திலும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் வெளிநாடு ஒன்றில் குடிபோதையில் விடுதி ஒன்றில் உள்ளவர்களுடன் மோதலில் ஈடுபட்டு காயமடைந்தார்.

இதன்போது அவரின் கையில் முறிவும் ஏற்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானை எச்சரித்திருந்தார். (ந-8 11)

# பொலிகண்டியில் கொள்ளைச் சம்பவம் சந்தேக நபர்கள் அறுவர் கைது

(கரவெட்டி)

வடமராட்சி பொலிகண்டிப் பகுதியில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய 6 சந்தேக நபர்களை வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் விற்பனை செய்ய முயன்றபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் நால்வர் சுன்னாகம் பகுதியையும் இருவர் யாழ்ப்பாணத்தையும் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர் நகையை விற்க முற்பட்ட பெண் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னொரு சந்தேகநபர் கொழும்பிற்கு தப்பியோடியுள்ள நிலையில் பொலிஸார் அவரைத் தேடி வருகின்றனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டபோது இவர்களிடம் இருந்து ரூ.45000 மீட்கப்பட்டுள்ளது.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ள பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு உள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட அறுவரும் இன்று பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (ந-8,24)

## அல்வாய் தெற்கில் வீடு புகுந்து திருட்டு

அல்வாய் தெற்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள்புகுந்ததிருடர்கள் அங்கிருந்த கணனி மற்றும் வீட்டு உபகரணப் பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த ப.செல்வராசா என்பவரின் வீட்டிலேயே குடும்பத்தினர் திருமண வைபவம் ஒன்றிற்காக திருகோணமலை சென்றிருந்தபோதே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-8,24)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை வள்ளிப்பிள்ளை

*கரவெட்டி மத்தொளியை சேர்ந்த சின்னத்துரை வள்ளிப்பிள்ளை 11.02.2012 நேற்று காலமானார்.*

*அன்னார் அமரர் சின்னத்துரையின் அன்பு மனைவியும், அமரர் வீரகத்தி-சிவகாமியின் மகளும், அமரர் கந்தசாமியின் அன்புச் சகோதரியும், விஜயகுமார்( சிரேஷ்ட விரிவுரையாளர் பொருளியல் துறை- யாழ். பல்கலைக்கழகம்), நந்தகுமார் (ஜேர்மனி), சிவாஜினி (முகாமைத்துவ உதவியாளர்- வலி.கிழக்குப் பிரதேசசபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயகுமாரி, மதியழகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்ஷிகா,சதுர்த்திகா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.*

*அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று காலை 10 மணியளவில் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்ல ப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.*

(7480)

மத்தொளி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

### குப்புசாமி ஞானசேகரம்

[இளைப்பாறிய காணி உத்தியோகத்தர்]



இளைப்பாறிய காணி உத்தியோகத்தர்

குப்புசாமி ஞானசேகரம் அவர்கள்

10.02.2012 வெள்ளிக்கிழமையன்று காலமான செய்தி அறிந்து மிகவும் கவலையடைகின்றோம்.

அன்னாரின் இழப்பால் துயரடைந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- பிரிவால் துயருறும்
மாகாண காணி ஆணையாளரும்
உத்தியோகத்தர்களும்
வடமாகாண காணி நிர்வாகத்
திணைக்களம்.

(C-5835)


வர்த்தகப் பெருமக்களே
வியாபாரத்தை பதிவு செய்தல்
BUSINESS REGISTRATION

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL Management Services (Pvt) Ltd
No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-9994777/011-7902938/
011-4343339

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

STUDY MEDICINE IN RUSSIA

KURSK STATE MEDICAL UNIVERSITY
SLMC, WHO, UNESCO, AMC, US MEDICAL COUNCIL etc..
ஆல் அங்கிகரிக்கப்பட்டது

- ரஷ்யாவில் ஆங்கில மொழிமூல மருத்துவக்கற்கைக்கான முதற்தர சான்றிதழ் பெற்றது.
- 6 வருட முழுநேர ஆங்கில கற்கைநெறி.
- வருடத்தின் பெப்ரவரி, செப்டம்பர் ஆகிய மாதங்களில். புதிய கல்வியாண்டு ஆரம்பமாகும்.
- மிகக்குறைந்த தவணைமுறைக் கட்டணம்.
- 70 ற்கும் அதிகமான இலங்கைத்தமிழ் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

தகமை

- குறைந்தது க.பொ.த உயர்தரத்தில் 2 "C" , "S" பெற்றிருக்கவேண்டும்.

இன்றே விண்ணப்பியுங்கள்.....!



தொடர்புகளுக்கு :
S.Sanjey
0773946686 / 0079202610460 (RUS)

மலேசியா வேலை வாய்ப்பு

யாழ் மக்களுக்காக
Green Which Business Academy
நிறுவனத்ினரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினரும் இணைந்து நடாத்தும் நேர்முகத்தேர்வு.

காலம் :- 13.02.2012 - 14.02.2012
நேரம் :- காலை 09 மணிமுதல் 4.30 மணி வரை

இடம் :- இல. 235 பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி
யாழ்ப்பாணம்.

தகமைகள்

- 18வயது முதல் 35வயதுக்கு உட்பட்டவர்கள்
- எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருத்தல் அவசியம்
- கலந்து கொள்ளும் இளைஞர்கள் தங்கள் ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தொடர்புகளுக்கு :- 077 3483438,
021 567 2727

இச் சந்தர்ப்பத்தை நழுவவிடாது பயன் பெற்றுக் கொள்ளுங்கள்.

அனுமதிக்கு முந்துங்கள்
அனுமதிகள் முற்றிலும் இலவசம்.
(7479)

# சண்டேஸ்வரர் குருபூசை விழா

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களமும் கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் அறநெறி பாடசாலையினரும் இணைந்து நடத்தும் சண்டேஸ்வரர் குருபூசை விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தில்லையம் பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத்தலைவர் பேராசிரியர் ம.வேதநாதன் கலந்து கொள்வார். (அ-2)

# மாநகர சபை இலாப நோக்கம் கொண்டு செயற்படுவதில்லை

## யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் செப்பனிடப்படும் வீதிகளை விட யாழ்.மாநகர சபையினரால் செப்பனிடப்படும் வீதிகள் தரம் வாய்ந்தவையாக உள்ளதாக யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணத் தொழிலாளர் சங்கத்தின் ஒன்று கூடல் அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், யாழ். மாநகரசபையின் முதுகெலும்பாக விளங்குபவர்கள் பணிபுரியும் ஊழியர்களே. இன்று யாழ்.மாநகரசபையில் 250 தொழிலாளர்கள் கடமை புரிகின்றனர். ஆனால், இக்கலந்துரையாடலில் 100 இற்கும் குறைவான தொழிலாளர்களே கலந்துள்ளனர்.

யாழ்.மாநகரசபையானது இலாபத்தினை எதிர்பார்க்காது மக்களுக்கு சிறந்ததொரு சேவையாற்ற வேண்டுமென்ற கொள்கையுடன் முன்னின்று உழைக்கின்றது.

யாழ்.மாநகரசபையினால் செப்பனிடப்படும் வீதிகள் மற்றும் கட்டடங்கள் அனைத்தும் தரம் கொண்டவையாகவே காணப்படுகின்றது.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கும் மாநகரசபையினாலேயே திட்டமிட்டு கட்டப்பட்டு இன்றுவரை நிலைத்து நிற்கின்றது.

நகரத்தின் சனத்தொகை அதிகரித்து செல்வதால் மாநகரசபையும் தனது சேவையை துரிதகதியில் முன்னெடுக்கவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# இராசி பலன்

12.02.2012

(தை 29, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு

பஞ்சமி முன்னிரவு 7.28 மணிவரை

அத்தம் முன்னிரவு 7.28 மணிவரை

இராகுகாலம் 5.04-6.34 மணிவரை

சுபநேரம் 9.34-11.04 மணிவரை

நல்லைக் குருமணி பரமாச்சாரியார் நினைவு தினம்.

**மேடம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், உடல் நலம் சீராகும், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** விருந்தினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடுப்பீர்கள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், புத்திரரால் நன்மையுண்டு.

**மிதுனம்** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்லபெயர் கிடைக்கும், விருந்தினர் வருகையுண்டு, வாகன பழுதுச் செலவுகள் குறையும்.

**கடகம்** பெரியோர்களின் ஆசி கிடைக்கும், சகோதர ஒற்றுமை பலப்படும், பிரயாண நன்மையுண்டு, இல்லத்தில் இனிமை தரும் சம்பவங்கள் நடைபெறலாம், பொருளாதார நிலை மேம்படும்.

**சிங்கம்** சிறப்பான நாள், பொருளாதார வளர்ச்சி கூடும், சுப செய்தியொன்று சுற்றத்தார் மூலம் வந்து சேரும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் தொடர்பால் சில காரியங்கள் நிறைவேறலாம், உடல் நலம் சீராகும், மாலையில் திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**துலாம்** சுப விரயங்கள் ஏற்படும் நாள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், பிரியமானவர்களுடன் சேர்ந்து பயணங்களை மேற்கொள்வீர்கள், மனச்சஞ்சலமான நாள்.

**விருச்சிகம்** உறவினர் பகை அகலும், விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தொழில் முன்னேற்றமுண்டு, வருமானங்களை அதிகரிக்கும் நிலையை அறிந்து கொள்வீர்கள்.

**தனுசு** செல்வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகளால் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், வெற்றிச் செய்திகள் வந்தடையும் நாள்.

**மகரம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், தொழிலை விரிவுபடுத்தி எதிர்பார்த்த கடன் உதவி கிடைக்கும், தேக நலனில் தெளிவு பிறக்கும், பிரயாணங்களால் நன்மையுண்டு.

**கும்பம்** வழிபாட்டால் சிறப்பினைக்காண வேண்டிய நாள், வரவு வருவதற்கு முன்னே செலவுகள் வந்து சேரும், நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** வரவு திருப்தி தரும் நாள், வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்து செல்வது நல்லது, ஆலய வழிபாடு ஆனந்தம் வழங்கும், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

வளவன்

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் மின் விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின் விநியோகம் தடைப்படும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடிய பாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி பிரதேசம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த.உயர்தரத்தில் வணிகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச்செயலமர்வானது வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளது. இச்செயலமர்வில் வளவாளர்களாக கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையா ளர்கள், க.பொ.த.உயர்தரப்பரீட்சை வினாத்தாள் தயாரிப்புக்குழுவில் உள்ள பேராசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளையும் பாடம் தொடர்பான பயன்மிக்க கருத்துக்களையும் வழங்கவுள்ளனர்.

எனவே, இச்செயலமர்விற்கு பாடசாலை அதிபர்கள் க.பொ.த.உயர்தரத்தில் வணிகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை தவாறது பங்குபற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# வாரம் ஒரு தகவல்

## ஞான மார்க்கம்

"சுவாமி அடியேனை ஆசீர்வதித்து இந்த ஆச்சிரமத்திலேயே ஒருவராக என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்"

"யார் நீ?"

"நான் யார் என்பதை தெரிந்து கொள்வதற்காகத்தான் சுவாமி உங்களை நாடி வந்திருக்கிறேன்"

"இப்படி அமர்ந்து; உண்மையைப் புரிந்துகொள். ஞானம் என்பது மூன்று வகைப்படும். ஒன்று உபாய ஞானம். இன்னொன்று உண்மை ஞானம். மற்றொன்று- அனுபவ ஞானம் ஆகும்!"

"எனக்கு விளக்கம் வேண்டும் சுவாமி"

"நட்சத்திரப் பிரகாசம் போல் தோன்றிய ஜீவ அறிவே உபாய ஞானம். சந்திரப்பிரகாசம் போல் தோன்றி அறிவும் ஆன்ம அறிவே உண்மைஞானம். சூரியப்பிரகாசம் போல் எந்தப் பொருளையும் தெரிந்து அனுபவிக்கச் செய்கின்ற கடவுளறிவே அனுபவஞானம்"

"இதுபோன்ற உண்மைகளையெல்லாம் புரிந்து கொண்டு வாழ்வின் தத்துவத்தை உணரவேண்டும் என்பதற்காகவே உங்கள் திருவடிகளைத் தேடிவந்து பற்றிக் கொண்டிருக்கின்றேன்"

"உனக்கு எல்லா நன்மைகளும் உண்டாவதாக எனது ஆசீர்வாதம் உனக்கு என்றும் ஏற்படுவதாக" என்று கூறினார்.

"நன்றி சுவாமி. இன்னொரு சந்தேகம் எனக்கு. கேட்கலாமா?"

"கேள்" என்றார் சுவாமி.

"உங்களைப் போன்றவர்கள் ஞானம் வந்தபின்னரும் துறவியாகிறார்களா? அல்லது துறவியான பின்னர் ஞானத்தைப் பெறுகிறார்களா சுவாமி?"

"நல்ல கேள்வி. நான் ஞானம் வந்த பின்னர்தான் துறவியானேன்"

"அப்படியா?"


"ஆமாம். 'ஞானம்' என்பது என் மனைவியின் பெயர்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 20 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 75 |
| தக்காளி | 25-30 | 40 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 20 | 30 |
| கோவா | 30 | 30 | 50 |
| கரட் | 40 | 50 | 50 |
| பூசணி | 35 | 30 | 30 |
| புடோல் | 30 | 60 | 20 |
| வாழைக்காய் | 40 | 30 | 35 |
| சின்ன வெங்காயம் | 55-60 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 70 |
| பாகற்காய் | 60 | 80 | 40 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 30 |
| கரணைக்கிழங்கு | -- | 40 | -- |
| பயற்றங்காய் | 120 | 100 | 90 |
| லீக்ஸ் | 70 | 80 | 70 |
| பீற்றூட் | 45 | 30 | 50 |
| கறிமிளகாய் | 120 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 280 |
| போஞ்சி | 20 | 30 | 30 |
| கத்தரி தம்புள்ள | 15 | 15 | 15 |
| கீரை - 1 பிடி | 5 | 15 | 10 |
| தேசிக்காய் | 35 | 40 | 35 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 20 |
| வெங்காயப் பூ | 90 | 90 | 80 |

# உற்பத்தியைப் பெருக்குவோம்...



வட மாகாணத்தின் உற்பத்தியை பெருக்கும் முகமாக இலங்கை மத்திய வங்கியின் வட மாகாண அலுவலகம் பல்வேறு கோணங்களில் எடுத்துவரும் நடவடிக்கைகளில் ஒன்றாக கிளிநொச்சி கோணாவில் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தும்பு உற்பத்தி பயிற்சிகளை வழங்கியுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களையே படத்தில் காண்கிறீர்கள்.

## குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் வவுனியாவில்

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் கடந்த வாரம் வவுனியாவில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ் ஹெட்டியாராச்சியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் திறக்கப்பட்டுள்ள குடிவரவு குடியல்வுத் திணைக்களத்திற்கான முதலாவது அலுவலகம் இதுவாகும்.

இதன்மூலம் வட பகுதி மக்கள் விரைவாகவும்,இலகுவாகவும் கடவுச்சீட்டினை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## ஏ.ரி.எம். உருவான வரலாறு

ஒவ்வொரு கருவிக்கும் ஒவ்வொரு வரலாறு இருக்கிறது. எனினும்ஏ.ரி.எம்இயந்திரங்கள்உருவான கதை கொஞ்சம் சுவாரஸ்யமானது.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜோன் ஷெப்பர்ட் பாரோன் தன் மனைவிக்கு பிறந்தநாள் பரிசளிக்க விரும்பி பணத்தை எடுக்க வங்கியில் வரிசையில் நின்றார்.

தன்முறை வந்தபோது பணத்தைக் கொடுக்க வேண்டிய காசாளர், நேரம் முடிந்து விட்டது என்று கருமபீடத்தை பூட்டிவிட்டுச் சென்று விட்டார். ஜோன் வெறுங்கையோடு மனைவியைப் பார்க்க விரும்பவில்லை.

கையில் இருந்த கொஞ்ச நஞ்ச சில்லறையை வைத்து, கொஞ்சம் சொக்லேட்டுக்களை வாங்கிக் கொடுத்து மனைவியை சமாதானப் படுத்தலாம் என்று நினைத்து சொக்லேட் வெண்டிங் இயந்திரத்தை தேடிச் சென்றார். அப்போதைக்கு அவர் மனைவியை சமாதனப்படுத்தினாலும், சாத்திய வங்கி கருமபீடமும் காசு போட்டால் உதிர்ந்த சொக்லேட்டுக்களும் அவர் மனதில் திரும்ப திரும்ப வந்து போனது. அதன் விளைவுதான் முதல் ஏ.ரி.எம் உருவாக்கத்துக்கான வித்து.

ATM இயந்திரத்தின் செயல்பாட்டு முறையை விவரிக்கும் முயற்சியின் விளைவுதான் இந்த பதிவு என்றாலும் முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது ATM (Automatic Teller Machine) என்பது ஒரு வெற்றுக் கணனி மட்டு (dump system) உங்கள் அட்டையினை உள்வாங்கிக் கொண்டதும், அட்டையின் தகவலினைப் படித்து உங்கள் வங்கிக் கணக்கு விபரங்கள் அடங்கிய வலையமைப்பின் வழங்கியினைத் தொடர்பு கொண்டு உங்கள் அட்டை எண் மற்றும் உங்கள் கடவுச்சொல் ஆகியவை சரிதானா என்று உறுதி செய்யும்.

பின்னர் தம் பணப்பறிமாற்றத்தினை உங்கள் வங்கிக் கணக்கின் பண இருப்பினை வைத்து உறுதி செய்யும் பணத்தினை வழங்கும். இந்த மொத்த நடவடிக்கைகளும் முடியும் வரை மட்டும் உங்கள் அட்டை எண் மற்றும் உங்கள் கடவுச்சீட்டு சொல் தற்காலிகமாக ATM கணனியில் சேமிக்கப்பட்டிருக்கும்.

அதன்பின் அவை அழிக்கப்பட்டு விடும். பணத்தாள்களை வெளியிடும்போது அவற்றின் தடிமனை வைத்தே பணத்தை கணக்கிடுகிறது. கணக்கில் வராத தடிமன்னில் பணம் ஏதும் இருந்தால் அதாவது தடிமன் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருந்தால் அவை தனியே ஒதுக்கப்பட்டு பாதுகாக்கப்படும். பராமரிப்பு மற்றும் பணத்தாள்களை வைப்பதற்காக வரும் அதிகாரிகள் அவ்வாறு ஒதுக்கப்பட்ட தாள்கள் சேகரித்து மறு ஆய்வுக்கு எடுத்துச் செல்வர்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5586.39 | 5316.99 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4813.12 | 4627.14 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,076.58 |

உயர்வடைந்த பங்குகள்(ரூ): அமாயா லிசர்(75.00), ஆஸிரி சேர்ஜி(8.00), ஒனாலே(56.90), கீல்ஸ் பூட்(112.00), பின்லேஸ் கொழும்பு(274.70).

சரிவடைந்த பங்குகள்(ரூ): உடப்புசலாவ(21.10), ஈபி கிரேஸி(1000.00), என்வெயர்.றிசோசஸ்(w)(7.30), என்வெயர்.றிசோசஸ்(w)(7.50), லங்கா அசோக்(2201.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## றிச்சர்ட் பீரிஸ் பணிப்பாளர் சபையில் சுனில் லியனகே

றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவராக சுனில் லியனகே நியமிக்கப்பட்டுள்ளார்.

நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டாளராக இணைந்து கொண்ட இவர், தமது அர்ப்பணிப்பான சேவையின் மூலம் இந்த நிர்வாக சபை உறுப்பினராக படிப்படியாக பதவி உயர்ந்துள்ளார்.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனம் வர்த்தகத் துறையில் 80 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது.

றிச்சர்ட் பீரிஸ் குழுமம் இலங்கையில் 42 அங்கத்துவ நிறுவனங்களைக் கொண்டதும், சுமார் 30 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்ட முன்னணி நிறுவனம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 2011-ல் ரூ.3 பில். வழங்கிய செலிங்கோ லைப்

செலிங்கோ லைப் நிறுவனம் 2011 டிசம்பர் 31 இல் முடிபடைந்த காலப் பகுதியில் உரிமை கோரல், முதிர்ச்சி, நலக் கொடுப்பனவுகளாக மூன்று பில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது.

அதாவது 95 வீதத்துக்கும் அதிகமான உரிமை கோரல்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## நம்பர்-1 இடத்தை பிடித்தது நோக்கியா

நோக்கியா மொபைல்போன் விற்பனையில் உலகின் நம்பர் வன் இடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த ஆண்டில் 11 கோடியே 35 லட்சம் விற்பனை செய்து முதல் இடத்தைப் பிடித்துள்ளது நோக்கியா.

வாடிக்கையாளர்கள் மத்தியில் அதிக வரவேற்பைப் பெற்ற சாம்சங் நிறுவனம் மொபைல் தயாரிப்பாளர்களில் 2-வது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்நிறுவனம் 9 கோடியே 76 லட்சம் மொபைல்களை விற்பனை செய்து 22.8 சதவிகிதத்தில் 2-ம் இடத்தை தக்கவைத்திருக்கிறது சாம்சங்.

அப்பிள் நிறுவனம் 3-ம் இடத்தைப் பிடித்துள்ளது.

சென்ற முறை 5-வது இடத்தில் இருந்த அப்பிள் நிறுவனம் இந்த முறை மூன்றாவது இடத்திற்கு வந்திருப்பது மிகப் பெரிய முன்னேற்றம். அப்பிள் நிறுவனம் 3 கோடியே 7 லட்சத்து 4 ஆயிரம் ஐபோன்களை கடந்த ஆண்டில்,அதுவும் 3 மாதத்தில் விற்பனை செய்திருக்கிறது.

அப்பிள் நிறுவனம் தென் கொரியா மற்றும் சீன நிறுவனங்களை முந்திக் கொண்டு மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கிறது.

இன்டர்நஷனல் டேட்டா கார்பரேஷன் மூலம் இந்த புள்ளி விபரங்கள் வெளியாகியுள்ளது.

## த பினான்ஸ் கம்பனியின் யாழ்.கிளை திறந்துவைப்பு




த பினான்ஸ் கம்பனியின் யாழ்.கிளையினை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில்தபினான்ஸ் கம்பனியின் தலைவர் பி.ஜெயசந்தன, யாழ் .மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், த பினான்ஸ் கம்பனி உத்தியோகத்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். இங்கு உரையாற்றிய மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்ததாவது,

யாழ்.மக்களுடைய பொருளாதார வளம் அபிவிருத்தியடைந்து வருகிறது. அத்துடன் அபிவிருத்திக்கும் கல்விக்கும் முடிபில்லாத இடமாக யாழ்ப்பாணம் காணப்படுகிறது.

யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் அபிவிருத்திப் பாதையில் பயணிக்கின்றனர். யாழ்ப்பாண மக்களின் மனங்களில் மகிழ்ச்சியைக் காண்கிறோம்.

சமாதான காலத்தில் யாழ்ப்பாணத்தில் புதிய வங்கிகளின் வருகை அதிகரித்துள்ளது. முதலீடுகளும் அதிகரித்த வண்ணம் உள்ளன.

மக்கள் தங்கள் அன்றாடக் கடமையை மனத்திருப்தியுடன் செய்வதைக் காணமுடிகின்றது.அத்துடன் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைந்து செல்கிறது.

கடந்த 30 வருட காலத்தில் இல்லாத மாற்றங்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கையின் மூலம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது என்றார்.

## ஒன்லைன் விசா மூலம் ரூ.150 மில்லியன் வருமானம்

அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட ஒன்லைன்விசா முறைமூலம் இலங்கை அரசாங்கம் ஜனவரி மாதத்தில் 150 மில்லியன் ரூபாயை வருமானமாகப் பெற்றுள்ளது.

இந்தத் திட்டமானது கடந்த மாதம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், இந்தத் திட்டத்துக்கு சர்வதேச நாடுகளை சேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வரவேற்பு அதிகளவில் காணப்படுகின்றது.

இந்த ஒன்லைன் விசாவைப் பெற்றுக் கொள்ளும்போது சில போலியான இணையத்தளங்கள் இயங்குவதாகவும், இந்த இணையத் தளங்கள் குறித்து அவதானமாகவும் எச்சரிக்கையுடனும் செயற்படுமாறும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.44 | 115.31 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 178.67 | 183.03 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 149.41 | 153.70 |
| சுவிஸ் பிராங் | 123.20 | 127.36 |
| கனேடிய டொலர் | 112.97 | 116.53 |
| அவுஸ்திரேலிய டொலர் | 121.17 | 125.24 |
| சிங்கப்பூர் டொலர் | 90.46 | 93.19 |
| ஜப்பான் யென் | 1.46 | 1.50 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.32 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.11 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## காதலர் தினத்தை முன்னிட்டு ஓரிபிளேம் அறிமுகப்படுத்தும் 2 உ/திகள்




சுவீடனை தலைமையகமாகக் கொண்டியங்கும் அழகுசாதன தயாரிப்பாளராகத் திகழும் ஓரிபிளேம் நிறுவனம் எதிர்வரும் காதலர் தினத்தை முன்னிட்டு இரு உற்பத்திகளை கழிவு விலையில் சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

ட்ரிப்பிள் கோர் எனப்படும் மூன்று சிறப்பம்சங்களைக் கொண்ட உதட்டுச் சாயம் மற்றும் காதணிகளுடன் இணைந்த கரடி பொம்மைகள் ஆகியவை ஓரிபிளேமின் காதலர் தினப் பரிசாக சந்தைக்கு வந்துள்ளன.

அத்துடன் பெப்ரவரி 14 ஆம் திகதி வரை 2500 ரூபாயுக்கு அதிகமான தொகைக்கு ஓரிபிளேம் பொருட்களை கொள்வனவு செய்வோருக்கு காதலர் தின கரடி பொம்மையும் ஒரு சோடி காதணிகளும் மிகக் குறைந்த விலையீல் வழங்கப்படும்.

# இலங்கை அதிபர் சேவை நியமனத்தில் இன விகிதாசாரம் பேணப்பட வேண்டும்

## இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

வழங்கப்படவுள்ள இலங்கை அதிபர்சேவை நியமனத்தில் இன விகிதாசாரம் பேணப்பட வேண்டுமென இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் அரசைக் கோரியுள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் சார்பில் அதன் தலைவர் எம்.அனஸ் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இதனை வலியுறுத்தியுள்ளார்.

பாடசாலைகள் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்றிருப்பதால் அதிபர், ஆசிரியர் நியமனங்களும் கட்டாயமாக இன விகிதாசாரப்படியே வழங்கப்படல் வேண்டுமென்றும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரச நிர்வாக உள்நாட்லுவல்கள் அமைச்சின் 15/1990 மற்றும் 15/1990 (I) இலக்கச் சுற்றறிக்கைகள் அரச நியமனங்களில் இன விகிதாசாரத்தை வலியுறுத்தியுள்ளது.

அது தேசிய மட்டத்தில் வழங்கப்படும் நியமனங்களில் இன விகிதாசாரம் என்ன விகிதத்தில் இருக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்துகின்றது. அதன் பிரகாரம் சிங்களவர்களுக்கு 75 வீதமும் தமிழர்களுக்கு 12.7 வீதமும் முஸ்லிம்களுக்கு 8 வீதமும் ஏனையவர்களுக்கு 4.3 வீத முமாக அமைய வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆயினும் அண்மைக்கால அதிபர் நியமனங்களில் இது மறுக்கப்பட்டு வருவதை எமது சங்கம் அவதானித்து வருகின்றது.

தற்போது வழங்கப்படவுள்ள அதிபர் நியமனங்களிலும் இன விகிதாசாரம் மறுக்கப்படும் நிலையே காணப்படுகின்றது.

2005.09.16 ஆம் திகதி வர்த்தமானியில் கோரப்பட்ட விண்ணப்பித்திற்கமைய 2006.10.30 வரை விண்ணப்பித்தவர்களுக்கு 2007.05.06 ஆம் திகதி நடைபெற்ற போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமையாது பிரமாணக் குறிப்பை மீறி பரீட்சைக்குத் தோற்றிய 14 ஆயிரத்து 305 பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பின் 2008. 12.01 முதல் இன விகிதாசார அடிப்படையில் இறுதியாக வழங்கப்பட்ட நியமனங்கள் நீதிமன்றத் தீர்ப்பினால் இரத்தானது.

பின்னர் 2009.05.04 ஆம் திகதிய நீதிமன்றத் தீர்ப்பிற்கமைய 155-229 புள்ளிகளுக்கு 2009.11.13 முதல் சுற்றறிக்கையை மீறி வழங்கப்பட்ட நியமனங்களில் முதல் முறையாக இன விகிதாசாரம் மறுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே தற்போதும் 2012. 01.26 ஆம் திகதிய நீதிமன்றத் தீர்ப்பிற்கமைய 113-228 புள்ளிகளுக்கு வழங்கப்படவுள்ள நியமனங்களிலும் சுற்றறிக்கையை மீறி இன விகிதாசாரம் மறுக்கப்படும் சாத்தியம் உள்ளது.

2012.02.04 ஆம் திகதி பத்திரிகை விளம்பரத்திற்கமைய 118-154 மற்றும் 82 இற்கு மேல் புள்ளிபெற்ற சகலரும் விண்ணப்பிக்க வேண்டும். ஏனெனில் முன்னர் மீள்பரிசீலனை நேர்முகப் பரீட்சையில் 212 இற்கு மேல் பெற்றவர்களுக்கு மாத்திரமே சத்தியக் கடதாசி விண்ணப்பமின்றி நியமனம் வழங்கப்படவுள்ளது.

அதாவது 155 புள்ளிகளுடன் மீள் பரிசீலனையில் 212-228 புள்ளிகள் பெற்றவர்களுக்கு நேர்முகப்பரீட்சையின்றியும் 113-154 புள்ளிகளுடன் முன்னர் 212-228 புள்ளிகள் பெற்றவர்களுக்கு சத்தியக்கடதாசி விண்ணபத்துடன் மீள்பரிசீலனை நேர்முகப் பரீட்சையின்றியும் 113-154 புள்ளிகளுடன் சத்தியக்கடதாசி விண்ணபத்துடன் மீள் பரிசீலனை நேர்முகப்பரீட்சையில் 212-228 பெறுபவர்களுக்கு தற்போது நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்த வகையில் எழுத்துப் பரீட்சையில் 113-154 புள்ளிபெற்ற 669 பேரும் 212-228 மொத்தப் புள்ளிபெற்ற 131 பேரும் இதில் 113 பெறாத ஒருவரும் முஸ்லிம்களில் உள்ளனர். இவர்களின் விகிதாசாரம் 6.57 ஆகும். 212-228 புள்ளிபெற்ற மொத்தமுள்ள 1993 பேர்களில் 113 பெறாத மொத்தமுள்ள 16 பேர் போக மீதமுள்ள 1977 பேர்களில் சிங்களவர்கள் 60.07 வீதமும் தமிழர்கள் 10.92 வீதமும் ஏனையோர் 2.44 வீதமாக உள்ளனர்.

இதில் இன விகிதாசாரமும் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றது. இங்கு 113-154 இற்குள் 212 பெறாத 8958 பேர்களில் புள்ளிகள் அதிகரிக்கும் போது இந்த வீதம் மேலும் அதிகரித்து இன விகிதாசாரம் உக்கிரமடையும்.

பாடசாலைகள் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்றிருப்பதால் அதிபர், ஆசிரியர் நியமனங்களும் கட்டாயமாக இன விகிதாசாரப்படியே வழங்கப்படவேண்டும்.

ஆதலால் பிரமாணக் குறிப்பை மீறிய நேர்முகப் பரீட்சை நியமனங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது போல் சுற்றறிக்கை மீறிய இன விகிதாசாரமற்ற நியமனங்களுக்கு எதிராகவும் இன, மனித உரிமை மீறல் வழக்குத் தொடரும் நிலைக்கு தொழிற்சங்கங்களை தள்ள வேண்டாம் என சங்கம் அரசை வினயமாகக் கேட்டுக் கொள்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கினால் மாலைதீவில் ஏற்பட்ட நிலையே ஏற்படும்

## கோமின் தயாசிறி எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கேட்பதை போன்று வடக்கு, கிழக்கிற்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கினால் மாலைதீவில் ஏற்பட்ட நிலைதான் இலங்கையிலும் ஏற்படும் என இலங்கையின் மூத்த சட்டவாளரும், தீவிர சிங்களத் தேசியவாதியுமான கோமின் தாயாசிறி அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

வடக்கு, கிழக்கிற்கு பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதால் நாட்டில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகும் எனவும் அவ்வாறு பொலிஸ் அதிகாரங்கள் பற்றி பேசுவதற்கு எந்த ஒரு கட்சிக்கும் அதிகாரம் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமானது மாலைதீவில் நடைபெற்றதை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷீட்டை பொலிஸாரும், இராணுவத்தினருமே துப்பாக்கி முனையில் மிரட்டி பதவியில் இருந்து இராஜனாமா செய்வித்துள்ளதை இலங்கை அரசு உணர்ந்து கொள்ளவேண்டும்.

வடக்கு, கிழக்கிற்கு பொலிஸ் அதிகாரம் வழங்கினால் புனர்வாழ்வு பெற்ற விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீண்டும் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்வர் என்றும் இதனால் பல்வேறு பிரச்சினைகள் நாட்டில் மீண்டும் ஏற்படும் என்றும் கோமின் தாயாசிறி எச்சரித்துள்ளார்.

எனவே, அரசாங்கம் வடக்கு, கிழக்கிற்கு பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது பற்றி சிந்தித்து செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும்எச்சரித்துள்ளார். (அ-2)


## பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் இடங்களுக்கு பிரதேச செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். தகுதியும் ஆர்வமும் உள்ளவர்களிடம் இருந்து (ஆண்கள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- யாழ்ப்பாணம்
- மானிப்பாய்
- சங்கானை
- சித்தங்கேணி
- சண்டிலிப்பாய்
- இளவாலை
- பண்டத்தரிப்பு
- சில்லாலை
- சுன்னாகம்
- ஏழாலை
- இணுவில்
- கொக்குவில்
- தவாடி
- சுதுமலை
- சுழிபுரம்
- வேலணை
- மண்டதீவு
- அல்லைப்பிட்டி
- மண்கும்பான்

முழுப்பெயர், நிரந்தர முகவரி,தற்காலிக முகவரி (இருப்பின்), பிறந்த திகதி, தே.அ.அ.இல, கி.சே.பிரிவு, பிரதேச செயலர் பிரிவு , குடியியல் நிலை, கல்வித் தகைமை, வேறு தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பன உள்ளிட்டதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை

**பிரதம ஆசிரியர்,**
**இல 3,2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.


## உயர்தர பரீட்சை விவகாரம்

# ஜனாதிபதி நிபுணர் குழுவின் சிபார்சுகள் தொடர்பில் அறிக்கை தயாரிப்பு

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் குறித்து நியமிக்கப்பட்ட ஜனாதிபதி நிபுணர் குழுவின் சிபாரிசுகள் தொடர்பான செயற்பாட்டு திட்டங்கள் அடங்கிய அறிக்கையொன்று பரீட்சைகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தில் பரீட்சைகளை நடத்தும் முறைகள், மனித வள அபிவிருத்தி மற்றும் பௌதீக வளங்கள் அபிவிருத்தி ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார குறிப்பிட்டுள்ளார்.

இதன் கீழ் பரீட்சைகள் திணைக்களத்தில் கணனி வலையமைப்பு தொடர்பிலான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு புதிய ஆலோசகர் ஒருவரை நியமிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்கிழமை இதனுடன் தொடர்புடைய அறிக்கை கல்வி அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்

குறுகிய மற்றும் நீண்டகால இலக்குகளின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் திறைசேரி ஊடாக அறிக்கையொன்றை பெற்றுக் கொண்டு, செயற்பாட்டு திட்டங்களுக்கான நிதி பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

(அ-2)

# போலி வைத்தியர் கைது

(கொழும்பு)

தலவாக்கலை நகரில் மருத்துவ நிலையமொன்றை நடத்தி வந்த போலி வைத்தியரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் ஆறு வருட காலமாக குறித்த வைத்திய நிலையத்தினை அவர் நடத்தி வந்துள்ளதாக லிந்துலை, கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜெனத் அபே குணரத்ன குறிப்பிட்டுள்ளார்.

சந்தேக நபர் வழங்கிய பொருட்களை உட்கொண்டதால் பல்வேறு ஒவ்வாமைகள் ஏற்படுவதாக கிடைக்கப்பெற்ற சில முறைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் போது குறித்த போலி வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 60 வயதான குறித்த சந்தேக நபர் தலவாக்கலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# பல்வேறு வகையான பட்சிகள் கட்டுநாயக்கவில் தடுப்பு


வனஜீவராசிகள் சட்டத்தினை மீறும் வகையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுப் பட்சிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பல்வகைமை பாதுகாப்பு பிரிவின் ஆலோசனைக்கு அமைய இந்த வெளிநாட்டுப் பட்சிகள் விமான நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய மிருகங்கள் பாதுகாப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பல்வேறு வகைகளைச் சேர்ந்த சுமார் 55 பட்சிகள் இதில் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. தாய்லாந்திலிருந்து இலங்கையர் ஒருவரால் இவை கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பல்வகைமை பாதுகாப்பு பிரிவின் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# பிரிவினைவாதத்தை தோற்றுவிப்பதே அபிவிருத்தியடைந்த நாடுகளின் நோக்கம்

## பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

நாடுகளுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிப்பதும் பிரிவினை வாதத்தை ஏற்படுத்துவதுமே அபிவிருத்தியடைந்த வல்லரசு நாடுகளின் நோக்கம். அப்படியான ஒன்றை எமது நாட்டிலும் ஏற்படுத்துவதற்காகவே சிலர் முயற்சிக்கின்றனர் என பிரதமர் டி.எம் ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் நாட்டின் சகல பாகங்களிலும் வசிக்கின்றார்கள். ஆனால், வட கிழக்கில் வசிக்கின்றவர்களில் குறிப்பிட்ட சிலரே தனிநாடு கோருகின்றார்கள். எனினும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் ஜனாதிபதி கூறியதற்கிணங்க பாராளுமன்ற தெரிவுக்குழுவின் மூலமே ஆராய்ந்து முன் வைக்கப்படும் என்றார்.

நேற்று முன்தினம் மாலை மருதானை சாஹிரா கல்லூரியில் முஸ்லிம் மீடியா போரத்தின் மீலாத்விழா இடம்பெற்றது. அவ் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்த மதத்தை பின்பற்றினாலும் அதனை முறையாக பின்பற்ற வேண்டும். அத்தோடு ஏனைய மதத்தையும் அதனை சார்ந்தவர்களையும் மதிக்க வேண்டும். அதன் போதே குரோதங்களற்ற ஐக்கியமான ஒரு சமுகத்தை கட்டியெழுப்ப முடியும்.

இன்று உலகளாவிய ரீதியில் பார்க்கின்ற போது பாரிய அழிவுகள், குழப்பங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக மாலைதீவு போன்ற நாடுகளில் இடம்பெறுகின்ற பிரச்சினைகளை குறிப்பிடலாம்.

ஆனால் இலங்கையில் புரையோடிப் போயிருந்த யுத்தமானது முடிபுக்கு கொண்டு வரப்பட்டு தற்போது அமைதியானதொரு சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சக்திமிக்க நாடுகள் இவ்வாறான நாடுகளில் கலவரங்கள் ஏற்படுத்தி அங்கே பிரிவினைவாதங்களை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறான ஒரு நிலைமையை இலங்கையிலும் தோற்றுவிக்க சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதை நாம் காணுகின்றோம்.

அதற்கு இடம்கொடுக்காது எமது தனித்துவத்தை தக்கவைத்துக்கொண்டு நாம் ஐக்கியமாக வாழ்வதற்கான சூழ்நிலையை தோற்றுவிப்பதே எமது நோக்கம் என்றார்.(அ-2)

# இலங்கையில் பொலிஸ் மற்றும் அரசியல் கட்சிகளிலேயே ஊழல்

## கணிப்பீட்டில் தகவல்

இலங்கையில் பொலிஸ் மற்றும் அரசியல் கட்சிகளே அதிக ஊழல் நடைபெறும் நிறுவனங்கள் என இலங்கை மக்களில் ஏறத்தாழ 50 சதவீதமானோர் கருதுவதாக ட்ரான்ஸ்அபரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் நடத்திய கணிப்பீடொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் ஆயிரம் பேரிடம் இந்த கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.பொலிஸாரின் சேவைகளில் மக்கள் மிகக் குறைந்த நம்பிக்கையே கொண்டிருப்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்தியது.அரச திணைக்களங்கள் மீதும் மக்கள் அதிகளவில் அவநம்பிக்கை கொண்டிருப்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்தியது.

பொலிஸாருக்கு அடுத்ததாக வருமான வரி திணைக்களம், சுங்கத்திணைக்களம் மற்றும் கச்சேரிகள், பிரதேச செயலாளர் அலுவலகங்கள், பிரதேச சபைகள், காணிப் பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றில் மக்கள் அதிக அவநம்பிக்கை கொண்டிருப்பதாக ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனலின் பேச்சாளர் ஷான் விஜேதுங்க கூறினார்.

இந்தப்பட்டியலில் அடுத்ததாக நீதித்துறை, கல்வி, சுகாதார சேவைகள் என்பன உள்ளன. கருத்துக்கணிப்பில் பங்குபற்றியவர்களில் 23 சதவீதமானோர் ஒரு குறித்த சேவையைப் பெறுவதற்காக தாம் இலஞ்சம் வழங்கியுள்ளதாகக் கூறினார்.

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் நேபாளம், மாலைதீவு ஆகிய நாடுகளிலும் இக்கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்படி தெற்காசியாவில் அரச நிறுவனங்களில் அதிக ஊழல் நிலவும் நாடாக பங்களாதேஷ் (66 சதவீதம்) உள்ளது. ஊழல் குறைந்த நாடாக மாலைதீவு (6 சதவீதம்) ஆகும். (அ-2)

# 5 முதல் 20 கோடி ஆண்டுக்குள் மிகப்பெரிய கண்டம் உருவாகும்

உலகில் 6 கண்டங்கள் உள்ளன.அவை கடல்களால் சூழப்பட்டுள்ளன.அவை நீர் மற்றும் காற்று போக்கால் இழுத்து ஒன்றுடன் ஒன்று மோதும் சூழ்நிலை உருவாக உள்ளது. அதன்மூலம் அமாசியா என்ற மிகப்பெரிய புதிய கண்டம் உருவாகும் என புவியியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது இன்னும் 5 கோடி முதல் 20 கோடி ஆண்டுகளுக்குள் உருவாகும் என கூறியுள்ளனர். அமெரிக்காவின் யாழ் பல்கலைக்கழகத்தின் புவியியல் நிபுணர்கள் ஒரு ஆய்வு மேற்கொண்டனர்.

அதில் அமெரிக்க மற்றும் ஆசிய கண்டங்களின் வடக்கு பகுதி நீர் மற்றும் காற்றுப் போக்கினால் இணையும்.இதனுடன் ஆர்டிக் கடலும் கரீபியன் கடலும் ஒன்றாக சேரும். இதன்மூலம் மிகப்பெரிய புதிய கண்டம் உருவாகும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பூமியின் அடியில் உள்ள பிளேட்டுகள் தற்போது நகர்ந்தவண்ணம் உள்ளன.இதனால் ஆசிய மற்றும் ஐரோப்பா கண்டங்களின் வடக்கு முனை பூமி பிளேட்டுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதி நொறுங்கும் அபாயம் உள்ளன.

அதுபோன்ற மாற்றங்களில் அவுஸ்திரேலியா கண்டம் இந்தியாவுடன் இணையலாம்.இந்த தகவல்களை ஜோர்னல் நேச்சர் என்ற பத்திரிகையில் யாழ் பல்கலைக்கழக புவியியல் நிபுணர் ரோல் மிட்செல் வெளியிட்டுள்ளார். (அ-2)

# முகாமிட்டுள்ள கள்ளநோட்டு கும்பல்

இந்தியாவின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் கள்ளநோட்டுக்களை பாகிஸ்தான் புழக்கத்தில் விட்டு வருகிறது.கள்ள நோட்டுக்கள் பங்களாதேஷ் எல்லை வழியாக இந்தியாவிற்குள் ஊடுருவியது.

ஆனால் தற்போது இலங்கையில் இருந்து தமிழகத்திற்கும் கேரளாவிற்கும் மிக எளிதாக வந்துகொண்டிருக்கின்றது என்று தேசிய புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது. (அ-2)

# யாழ் திறந்த பல்கலைக்கழகம் பட்டமேற்கல்வி டிப்ளோமா கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பட்டமேற் கல்வி டிப்ளோமா 2011/2012 புதிய கல்வியாண்டிற்கு பதிவு செய்த ஆசிரிய மாணவர்களுக்கான அங்குரார்ப்பணக் கூட்டம் 15.02.2012 அன்று நடைபெறமாட்டாது எனவும் பதிலாக 06.03.2012 செவ்வாய் காலை 9.00 மணிக்கு நடைபெறும் எனவும் பிராந்திய நிலையத்தின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

# பிரி.சபையில் இலங்கை குறித்து விவாதிக்க கையெழுத்து வேட்டை

## குறைந்த அளவே பதிவாகியது

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை இடம்பெறுவதற்கு பிரிட்டிஷ் அரசு ஆதரவளிக்க வேண்டுமென கோரி கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இணையத்தள கோரிக்கை மனுவில் இன்றுவரை 3 ஆயிரத்து 472 பேர் மாத்திரமே கையெழுத்திட்டுள்ளனர். இவ்விண்ணப்பத்தில் ஒரு இலட்சம் பேர் வரை கையெழுத்திட்டிருந்தால் இவ்விடயம் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். பிரித்தானிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இந்த மனு குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற கடைசிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்து ஐ.நா. பொதுச் செயலரின் நிபுணர் குழுவின் அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதைப் போல் சுயாதீனமான சர்வதேச விசாரணை இடம்பெறுவதற்கு பிரித்தானிய அரசின் சுயாதீன ஆதரவு வேண்டுமென கோரப்பட்டுள்ளது.டாக்டர் அர்ஜுன சிவானந்தனால் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி இணையத்தள விண்ணப்பமானது எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திக்தி முடிவடைகிறது.

எனினும் மனுவிலுள்ள விடயம் குறித்து நீதிமன்ற வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தால் அல்லது இதே விடயம் குறித்து நாடாளுமன்ற பொது சபையில் அண்மையில் விவாதம் நடைபெற்றிருந்தால் அல்லது விவாதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தால் இம் மனு தொடர்பாக விசேட விவாதம் நடத்தப்படமாட்டாது.

இவ்விண்ணப்ப நடவடிக்கை போர்க் குற்றம் தொடர்பிலான விவாதத்தை சாத்தியமாக்காமல் போனாலும் இதேதலைப்பில் பிரிட்டிஷ் அரசில் விவாதம் முன்னெடுக்கப்படலாம்.

குறித்த இணையத்தளத்தில் கையொப்பமிடுபவர்களின் மொத்த எண்ணிக்கை காட்சிப்படுத்தப்படும். ஆனால் அதில் கையொப்பமிடுபவர்களின் பெயர் மற்றும் ஏனைய விபரங்கள் வெளியிடப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் அவுஸ்.தனது நிலைப்பாட்டை அறிவிக்கும்

(கொழும்பு)

**இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை குறித்த தங்களது நிலைப்பாட்டை அவுஸ்திரேலிய அரசாங்கம் விரைவில் தெரிவிக்கும் என அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டு அமைச்சர் கெவின் ரூட்டின் பேச்சாளர் ஏஎபி செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.**

அவுஸ்திரேலிய அரசாங்கம் இரு பக்கத்தினாலும் இழைக்கப்பட்ட போர்க்குற்ற முறைப்பாடுகளை விசாரிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை எப்போதும் கேட்டு வந்துள்ளது எனவும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை குறித்து அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டு அமைச்சர் கெவின் ரூட் இதுவரை கருத்தினை வெளியிடாத நிலை குறித்து அவுஸ்திரேலியாவின் பசுமைக் கட்சியின் மேற்சபை உறுப்பினர் லீ ரியான்னன் விமர்சித்திருந்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு படகுகளில் வரும் அகதிகளை தடுப்பதற்காக இலங்கையுடன் ஒத்துழைப்பது இதற்கு ஒரு காரணம் எனவும் மேற்சபை உறுப்பினர் லீ ரியான்னன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்நிலையில் செய்தி வலயம் இது தொடர்பில் செய்திக் குறிப்பொன்றினை வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டு அமைச்சர் ரூட் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை குறித்து கருத்து வெளியிடப்படும் என்று பல தடவைகள் உறுதியளித்த போதும் இதுவரை காலமும் மௌனமாக இருப்பதால் நெருக்கடியைச் சந்தித்துள்ளார்.

மஹிந்தவின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மனித உரிமை அமைப்புகள் இந்த அறிக்கை ஒரு கண்துடைப்பு என்றும் குறிப்பாக புலிகளுக்கு எதிரான 2009 இல் நடத்திய இறுதித்தாக்குதல் பற்றி சுயாதீன தனிப்பட்ட விசாரணை வேண்டுமென வலியுறுத்தி வருகின்றன.

படகுகளில் வரும் அகதிகளை தடுப்பதற்காக இலங்கையுடன் ஒத்துழைப்பது இதற்கு ஒரு காரணம் என்று மேற்சபை உறுப்பினர் லீரியான்னன் நம்புகிறார். ஆனாலும் மென்மையான நடவடிக்கைக்கான காலம் கடந்து விட்டது என்று மேலும் கூறினார்.

எங்களுடைய பிரதேசத்தில் போர்க் குற்றங்களும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்களும் நிகழ்ந்துள்ளன. இவற்றுக்கு எதிராக குரல் கொடுப்பதும் குற்றங்கள் புரிந்துள்ளவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதும் எமது கடமையாகும்.

அவுஸ்திரேலியா அரசாங்கம் அறிக்கை பற்றி இன்னும் மதிப்பீடு செய்து கொண்டிருப்பதாக அண்மையில் கூறியது.

ரூட்டின் பேச்சாளர் அவுஸ்திரேலியா அரசாங்கம் விரைவில் கருத்தை தெரிவிக்கும் என்றார்.

அவுஸ்திரேலியா அரசாங்கம் இரு பக்கத்தினாலும் இழைக்கப்பட்ட போர்க்குற்ற முறைப்பாடுகளை விசாரிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை எப்போதும் கேட்டு வந்துள்ளது என்று பேச்சாளர் கூறினார். (அ-2)

# மஹிந்தவின் தத்துவ ஆசிரியர் அமைச்சர் டளஸ் அழகப்பெரும

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசியல் தத்துவ ஆசிரியராக அமைச்சர் டளஸ் அழகப்பெரும இருந்து வருகின்றார் என்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் அவதானித்து உள்ளது என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமான ஒருவராக தொடர்ந்தும் இருந்து வருகின்றார். இவர் கடந்த 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்கின்றமைக்கு அமெரிக்காவில் இருந்து நாட்டுக்கு வந்தார்.


மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனமான மஹிந்த சிந்தனையை உருவாக்குகின்றமைக்கு மஹிந்தவுக்குபேருதவிகள் செய்தார். மஹிந்தவின் தேர்தல் பேச்சுக்களில் அநேகமானவை இவரால் ஆக்கப்பட்டவை.

பிரதமர் பதவி உட்பட முக்கியமான அமைச்சுப் பதவிகளுக்கு அமைச்சர்களை நியமிக்கின்றமையில் இவரின் செல்வாக்கு அதிகமாக இருந்துள்ளது.

மங்கள சமவீர, ஸ்ரீபதி சூரியாராச்சி ஆகியோர் அரசில் இருந்து நீக்கப்பட்டமைக்கு இவரே காரணம்.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் திகதி அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இராஜதந்திர ஆவணம் ஒன்றில் இருந்து விக்கிலீக்ஸ் மூலம் இத்தகவல்கள் கிடைத்துள்ளன. (அ-2)

# குழந்தைகளுக்கும் இரத்தப்புற்றுநோய்!



## ஆய்வில் தகவல்

குழந்தைகளுக்குக்கூட இரத்தப்புற்றுநோய் ஏற்படுகிறது. இது குறித்து அமெரிக்காவில் உள்ள குழந்தைகள் நல மையம் ஆய்வு மேற்கொண்டது.

அதில் குழந்தை கருவில் இருக்கும் போது பெற்றோர் அதாவது தாயோ, தந்தையோ அதிகளவில் சிகரெட் பிடிப்பதால் இரத்தப் புற்றுநோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு உருவாகிறது.பொதுவாக பெண்களை விட ஆண்கள் தான் சிகரெட் புகைக்கின்றனர். மனைவிக்கு குழந்தை பிறப்பதற்கு முன்பு ஒரு ஆண் நாள் ஒன்றுக்கு 15 சிகரெட்டுக்கு மேல் பிடித்தால் இரத்தப்புற்றுநோய் தாக்கக்கூடிய ஆபத்து ஏற்படும் என்றும் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. (அ-2)

# சேலத்தில் தமிழர்களுக்கு பிறப்புச்சான்றிதழ் முகாம்

## த.ம.உ.இயக்கம் மறியல் போராட்டம்

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் அளிக்கும் சிறப்பு முகாம் நேற்று காலை ஆரம்பமாகியது. இதற்காக சென்னையில் உள்ள இலங்கைத் தூதரக துணை ஆணையர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் 14பேர் கொண்ட குழு சேலம் வந்தனர்.

இவர்களது வருகையை முன்னிட்டு அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இதையும் மீறி தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்க மாநிலத் தலைவர் பூமொழி, காமராஜ் ஆகியோர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தியை முற்றுகையிட்டு இலங்கைப்போரில் அப்பாவி தமிழ்மக்கள் படுகொலை செய்தபோது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்தது ஏனென்று போராட்டத்தில் ஈடுபட்டனர். பொலிஸார் அவர்களை கைது செய்து அழைத்துச் சென்றனர்.இதனால் அவ்விடத்தில் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது. அதன் பின்னர் பிறப்புச்சான்றிதழ் அளிக்கும் பணி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (அ-2)

# வாய்த்தர்க்கம் காயத்தில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

மாமியார் மருமகனுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தில் மாமியாரின் தலையில் மருமகன் இரும்புக்கம்பியால் ஓங்கி அடித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கோண்டாவில் பாரதி லேனில் உள்ள வீடொன்றில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயாரான சுப்பிரமணியம் இராசம்மா (வயது 62) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த வீட்டில் தொடர்ந்தும் இத்தகராறு இடம்பெற்றுவருவதாகவும் நேற்றுக்காலை நடந்த சம்பவம் ஒன்று எல்லைமீறிப் போகவே அருகில் காணப்பட்ட இரும்புக்கம்பியால் குறித்த வயோதிபப் பெண்ணின் தலையில் அடித்துள்ளார்.

சம்பவ இடத்திலேயே குறித்த வயோதிபப் பெண் சுயநினைவற்று இரத்த வெள்ளத்தில் வீழ்ந்துள்ளார். அருகில் உள்ளவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அவரை அனுமதித்தனர்.

யாழ்.பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-4)



ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் இடைவேளை நிகழ்வினையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் வெற்றி பெற்ற இல்லத்திற்கு வெற்றிக்கேடயத்தை வழங்குவதையும் அருகில் கிளி.கரைச்சி பிரதேச செயலாளர் பொ. நாகேஸ்வரன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# திரை விமர்சனம்

# மெரினா

பசங்க எனும் முதல் திரைப்படம் மூலம் தென்னிந்திய புதிய தலைமுறை இயக்குநர்கள் வரிசையில் தனக்கென ஒரு தனி இடத்தை பிடித்து கொண்ட பாண்டியராஜின் மூன்றாவது படைப்பு மெரினா.


அண்மையில் வெளிவந்த இத்திரைப்படம் பற்றி நேர்மறையான விமர்சனங்களுக்கு குறைவில்லை. கூட சமூக அவலங்களை மீண்டும் படம் பிடிக்க முயற்சித்தமைக்கு பாராட்டத்தான் வேண்டும்

பாண்டியராஜிடம் இதைவிட அதிகமாக எதிர்பார்த்தோம் என முணு முணுப்பவர்கள் என்கிறார்கள்.


முதல் படத்திலேயே விருதையும் வசூலையும் பெற்று அனைவரையும் கவனிக்க வைத்த இயக்குநர் பாண்டியராஜ் தன் சொந்த தயாரிப்பான மெரினாவில் பல அறிமுக சிறுவர்களோடு கைகோர்த்து களம் இறங்கியிருக்கிறார்.

பட்டுக்கோட்டையிலிருந்து தப்பி அமரர் ஊர்தியில் சென்னைக்கு வந்து சேரும் அம்பிகாபதி (பக்கடா பாண்டி) மெரினாவில் செட்டில் ஆகிறான். அங்கு அவனைப் போலவே பல சிறுவர்கள் சுண்டல், சங்கு என பலவற்றை விற்று வயிற்றை கழுவிக் கொண்டிருக்கிறார்கள்.

அவனுக்கு முதலில் கைலாசம் நண்பனாக பின்னர் மற்ற சிறுவர் களும் சண்டையை விடுத்து சமாதானமாகி அவனு நண்பர்களா கிறார்கள். இவர் தவிர மெரினாவிலேயே வாழ்க்கை நடத்தும் பிச் டன் களை சைக்கார தாத்தா சிறுவர்களுக்கு குதிரை ஓட்டுபவன், பாட்டு பாடுபவர், ஆங்கிலம் பேசும் பைத்தியக்காரன் ஆதரவு அளிக்கும் போஸ்ட் மேன் மெரினாவிற்கு வரும் காதல் ஜோடிகளான நாதன் (சிவகார்த்திகேயன்), சொப்பனசுந்தரி (ஓவியா) இவர்களை சுற்றி கதை நகர்கிறது.



படத்தின் ஹீரோ பக்கடா பாண்டி தான். மிரள மிரள சென்னையை பார்க்கும் போதும் பிச்சைக்கார தாத்தாவிடம் உறவு கொண்டாடும் போதும் நண்பனை இழந்து வாடும் போதும் நல்ல நடிப்பை வெளிப்படுத்துகிறான். சிறுவர்களை வைத்து படமெடுப்பது பாண்டிராஜ்க்கு கைவந்த கலையாகிவிட்டது போல எல்லாச் சிறுவர்களும் இயல்பாக நடித் திருக்கிறார்கள்.



பல கரக்டர்கள் படத்தில் இருந் தாலும் மருமகள்தொல்லையால்வீட்டிலிருந்து வெளியே வந்து பிச்சை எடுக்கும் தாத்தா மட்டுமே மனதில் நிற்கிறார். பைத்தியக் காரனாக வருபவர் ஆங்காங்கே டைமிங் டயலாக்குளால் சிரிக்க வைத்தாலும் அவர் கரக்டரில் கொஞ்சம் செயற்கை த்தனமே மேலோங்கி நிற்கின்றது.

மெரினாவில் குடியிருக்காவிட்டாலும் படத்தை தொய்வில்லாமல் கொண்டு போவதற்கு அங்கு வரும் காதல் ஜோடிகளான சிவகார்த்திகேயனும் ஓவியாவும் பெரிதும் உதவியிருக்கிறார்கள். இவர்களுடைய ரைம் பாசிங் காதலை நேரம் போவது தெரியாமல் சுவைபட சொல்லியிருக்கிறார் இயக்குநர்.

அடுத்த வீட்டு பையன் போல சிவகார்த்திகேயன் இயல்பாக இருந்தாலும் இவர் பேசும் போது ஏதோ காம்பெயரிங் செய்வது போலவே இருக்கிறது. களவானிக்கு பின்னர் காணாமல் போன ஓவியா இதில் கவனிக்க வைக்கிறார். சிவகார்த்திகேயனின் நண்பனாக வருபவரும் நன்றாக நடித்திருக்கிறார்.

சில நடிகர்களோடு சேர் த்து இசையமைப்பாளர், எடி ட்டர், ஒளிப்பதிவாளர் என பலரை இப்படத்தில் அறிமுக ப்படுத்தியிருக்கிறார் இயக்குநர். "வாழ வைக்கும் சென்னை" பாடலும் "நண்பன்" பாடலும் முணுமுணுக்கவைக்கின்றன. பின்னணி இசை ஏற்கனவே கேட்டது போல இருக்கின்றது. தன் ஒளிப்பதிவால் மெரினாவையே சுத்தமாக காட்டியிருக்கிறார் விஜய். 5 டி கமராவில் படம்பிடித்த விதம் அருமை. மெரினாவை மட்டுமே வைத்துக் கொண்டு முழு படத்தையும் நகர்த்திய விதம் நகைச்சுவை ததும்பும் வசனங்கள். சிறுவர்களுக்கு கல்வியின் அவசியத்தை உணர்த்தும் கதை. ஆதரவற்ற சிறுவர்களின் வாழ்க்கை முறையை கண்முன் நிறுத்திய பாங்கு, தாத்தா போஸ்ட்மன், குதிரைக்காரன் இவர்களுக்கும் சிறுவர்களுக்கும் இடையேயான நட்பு, காதல் என்ற பெயரில் சமுத்திரத்தைஅசுத்தம் செய்யும் (கள்ள) காதல் ஜோடிகள் பற்றி சொன்ன விதம் இவையெல்லாம் மெரினாவின் அழகை ரசிக்க வைக்கின்றன.


## சினிமா உலகம்...

சங்குநாதம்



சிறுவர்கள் பற்றிய பின்னணியை முழுவதும் சொல்லாமல் பிக்னிக் வந்தது போல கிரிக்கெட், ஓட்டப்பந்தயம், குதிரையேற்றம் என ஒவ்வொன்றாக காட்டிக் கொண்டிருப்பது இவ்வளவு கரக்டர்கள் இருந்தும் ஸ்லம் டாக் மில்லினியர் சலாம் பாம்பே போல பெரிய அழுத்தத்தை ஏற்படுத்த தவறியது. என்ன தான் வெளியூரில் இருந்து வந்தவர்கள் சென்னையில் நிறைய பேர் இருந்தாலும் மதுரைக்கு மெரினா வந்து விட்டதா என நினைக்குமளவுக்கு எல்லோரும் ஓவராக மதுரை பாஷை பேசி இயற்கையை கெடுத்தது ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் படம் சுழன்று கொண்டிருப்பது. (உதாரணத்திற்கு ஒரு சீனில் ஹெல்ப் லைன் மூலம் ஸ்கூலில் சேர்ந்து படிக்கும் கிரைண்டர் எனும் சிறுவன் அடுத்த சீனில் சிறுவர்களுடன் பீச்சில் இருப்பது) இவையெல்லாம் மெரினாவின் அழகை கெடுக்கின்றன. ஆதரவின்றி கடலோரம் வாழும் சிறார்களை பற்றிய பிரச்சினைகள் கடல் அளவு இருக்க அதை முழுவதும் இறங்கி அலசாமல் பாடசாலை சுற்றுலா போல சிலவற்றை மட்டும் மேம்போக்காக சொல்லியிருப்பதால் கடற்கரை சென்றும் காலை நனைக்காமல் திரும்ப வந்தது போல ஒரு குறை. இருப்பினும் சினிமாத்தனமான எந்த ஒரு காம்ப்ரமைசும் செய்து கொள்ளாமல் இதுபோன்ற படத்தை எடுத்ததற்காக இயக்குநர் பாண்டியராஜை எவ்வளவு பாராட்டினாலும் தவறில்லை.

## வெளி உலகிற்கு வருகிறார் ஐஸ்!



குழந்தை பிறப்புக்கு பின்னர் மீண்டும் வெளி உலகத்திற்கு வர ஆரம்பித்துள்ளார் முன்னாள் உலக அழகியும் நடிகையுமான ஐஸ்வர்யா ராய்.

நடிகை ஐஸ்வர்யா ராய் கர்ப்பமான பின்னர் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை முற்றிலும் தவிர்த்து வந்தார். கடந்த நவம்பர் மாதம் அவருக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறப்புக்கு பின்னர் ஐஸ்வர்யா பொது நிகழ்ச்சி மற்றும் பத்திரிகையாளர்கள் சந்திப்பு போன்றவற்றை தவிர்த்து குழந்தையே உலகம் என்ற நினைப்போடு வீட்டிலேயே தங்கி ஓய்வு எடுத்து வந்தார். இந்நிலையில் குழந்தை பிறப்புக்கு பின்னர் கிட்டத்தட்ட மூன்று மாத இடைவெளிக்கு பின்னர் மீண்டும் வெளி உலகுக்கு வர ஆரம்பித்துள்ளார்.

சமீபத்தில் மும்பையில் நடந்த ஜெனிலியா-ரித்தேஷ் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் தனது மாமனார் -மாமியாருடன் பங்கேற்றார். பச்சை கலர் சல்வாரும் புளூ கலர் துப்பட்டாவும் அணிந்தபடி ரொம்ப கலர்புல்லா முன்பை விட சற்று உடல் பெருத்து கூடுதல் அழகாக காட்சியளித்தார் ஐஸ்வர்யா.

இப்போது பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஆரம்பித்திருக்கும் ஐஸ்வர்யா ராய் விரைவில் திரையிலும் தோன்றவுள்ளார்.

## கோச்சடையானில் தீபிகா படுகோன்



கோச்சடையான் திரைப்படத்தில் ரஜினிக்கு ஜோடியாக ஹொலிவுட் நடிகை தீபிகா படுகோன் நடிப்பதாக அதிகாரப் பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ரஜினி நடிக்கவிருக்கும் கோச்சடையான் படத்தில் அவருக்கு ஜோடியாக ஏற்கனவே ராணா படத்தில் நடிக்க ஒப்பந்தமான தீபிகா படுகோனே நடிக்க இருப்பதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஈரோஸ் இன்டர்நஷனல் மற்றும் மீடியா ஒன் குளோபல் என்டர்டெயின்மெண்ட் ஆகிய இரு நிறுவனங்கள் இணைந்து நடிகர் ரஜினிகாந்தை வைத்து பிரம்மாண்ட பொருட் செலவில் தயாரிக்கும் படம் கோச்சடையான். இப்படத்தை ரஜினியின் மகள் சௌந்தர்யா இயக்க திரைக்கதை அமைத்து சௌந்தர்யாவுக்கு உதவுகிறார் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார். இப்படத்திற்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கவுள்ளார்.

சமீபத்தில் தான் இப்படத்தின் பூஜை தொடங்கியது. ஆனால் ரஜினிக்கு ஜோடியாக யார் என்பது மட்டும் அறிவிக்கப்படாமல் இருந்தது.

அவருக்கு ஜோடியாக ஹொலிவுட் குயின் கத்ரீனா கயிப்பை நடிக்க வைக்க முயற்சிகள் நடந்தது. இந்நிலையில் ஏற்கனவே ராணாவில் நடிக்க ஒப்பந்தமான தீபிகா படுகோனே இப்படத்திலும் நடிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை இப்படத்தின் இயக்குநரும் ரஜினி மகளுமான சௌந்தர்யா அஸ்வின் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கோச்சடையானில் ஹிந்தி நடிகர் ஜாக்கி ஷெராப், சினேகா உள்ளிட்ட பல நட்சத்திர பட்டாளங்களும் இதில் நடிக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 38



உலகில் முதன்முதலில் சோஷலிசப் புரட்சியை நிகழ்த்தி வெற்றி கண்டவர், சோவியத்யூனியனை (U.S.S.R) ஸ்தாபித்தவர் விளாமிடிர் லெனின் சோவியத்தின் தலைவர்( 1917-1922)

யுத்தத்தின் ஆரம்பக்கட்டம் கற்பித்த பாடங்கள் யாவை? இராணுவத்தின் விழிப்புணர்ச்சியையும் இராணுவத் தயார் நிலையையும் அதிகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தயாரிப்பு நடவடிக்கைகளை யுத்தத்திற்கு முந்தைய காலத்திலேயே மேற்கொண்டிருப்பது அவசியம் என்பது இவற்றில் முக்கியமானதாகும்.

யுத்தத்தின் ஆரம்பக்கட்டம் கற்பித்த பாடங்களில், வானிலும் கடலிலும், ஆதிக்கத்தை வெல்வது உட்பட உடனடிப் போர்த்தந்திர இலட்சியங்களை அடைவதற்காக முதல் தாக்குதலில் அதிகபட்ச சக்திகளையும் சாதனங்களையும் உட்படுத்த ஆக்கிரமிப்பு அரசுகள் காட்டிய நாட்டம். திடீர்த்தாக்குதலுக்காக இராணுவ நடவடிக்கைகளை மட்டுமன்றி அரசியல் மற்றும் இராஜதந்திர நடவடிக்கைகளையும் இவை பயன்படுத்தியது. யுத்தத்தின் ஆரம்பக் கட்டத்தின் தார்மீக-அரசியல் காரணியின் பங்கு பெரிதும் அதிகரித்தது ஆகியவற்றைச் சுட்டுகாட்ட வேண்டும்.


இந்த முடிவுகள் யுத்தத்திற்கு பிந்தைய காலகட்டத்தின் சம்பவங்களால் முற்றிலுமாக ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றன. ஆக்கிரமிப்பு அரசுகள் பிரதேச போர்களில் திடீரெனத் தாக்குவதை பரவலாகப் பயன்படுத்துகின்றன. உதாரணமாக 1967-இல் ஐக்கிய அரேபியக்குடியரசு, சிரியா, ஜார்டனுக்கு எதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு, விமானப்படையின் திடீர்த் தாக்குதல்களுடன் தொடங்கியது. 1945, 1962, 1965 ஆம் ஆண்டுகளில் இந்தோனேஷியாவிற்கு எதிரான பிரிட்டன் கொலண்டின் ஆக்கிரமிப்பு கடல் இறக்குப் படையினரை திடீரென இறக்கியதுடனும் கப்பற்படை நடவடிக்கையோடும் தொடங்கியது. 1960 இல் காங்கோவிற்கு எதிரான அமெரிக்க ஐக்கியநாடு பெல்ஜியத்தின் ஆக்கிரமிப்பும் வான் இறக்குப் படைகளை திடீரென இறக்கியதால் நிறைவேற்றப்பட்டது.

எனவே, அனுபவம் காட்டும்படி,


சோவியத்யூனியனின் பெண்கள் -கெரில்லா அணி

எதிரியின் திடீர் தாக்குதலைத் தவிர்க்க உயர்ந்த நிரந்தர விழிப்புணர்ச்சியும் யுத்தத்தின் ஆரம்பக்கட்டத்தில் இயங்க இராணுவத்திற்கு அவசியமான தயாரிப்பும் மிகச் சிறப்பான வேவுப் பணியும் மற்றும் புதிய படை அமைப்புக்களைக் கொண்டு வந்து குவிப்பதற்கான நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையும் அவசியம்.

இவ்வாறாக, யுத்தத்தின் ஆரம்ப கட்டத்தின் பாசிஸ்டுகள் பைலோ ருஷ்யா, முழுவதையும் லித்துவேனியா, லாத்வியா, எஸ்தோனியா,மல்தாவியா, உக்ரேனின், பல பிரதேசங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றி லெனின் கிராடுக்கு வெகு அருகில் வந்தனர். மரண அபாயம் சோவியத் யூனியனினை எதிர்நோக்கியது. சோவியத் மக்கள் எவ்வளவு மகத்தான வீரத்தை வெளிப்படுத்தியபோதிலும் போர்முனையில் நிலவிய மிகமோசமான சூழ்நிலையை, இதனால், அடிப் படையில் மாற்ற இயலவில்லை. எதிரிக்குத் தக்கபதிலடி தருவதற்காக எல்லா சக்திகளையும் ஒன்று திரட்


சோவியத்யூனியின் பெண்கள்- கொமாண்டோ படை அணி-1941

## 'ஜேர்மனி , ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு
## மின்னல் வேக யுத்தம்' என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி

டக்கூடிய பொது அரசு நடவடிக்கைகள் தேவைப்பட்டன. கம்யூனிஷ்கட்சி, இந்நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியது. இது சிக்கலான, கடினமான சூழ்நிலையில் விரைவாக விடயத்தைக் கிரகித்து தாய்நாட்டைப் பாதுகாக்க சோவியத் மக்களைத் தட்டியெழுப்பியது. நாடு முழுவதும் ஒரே யுத்தமுகமாக மாற்றப்பட்டது. "எல்லாம் போர்முனைக்கே எல்லாம் வெற்றிக்காக" என்ற கட்சியின் கோசம் சோவியத் மக்கள் அனைவருக்கும் கட்டாயச் சட்டமாக மாறியது.

ஜூலை இறுதியில் மொத்தம் 3 இலட்சத்து 28 ஆயிரம் நபர்களையுடைய 1755 சண்டை பட்டாலியன்கள் உருவாக்கப்பட்டன. எதிரி நாசவேலைக்காரர்கள் மற்றும் பாரசூட் படையினருக்கு எதிரான போராட்டத்தில் அவை முக்கிய பங்காற்றின. பின்னால் இந்த பாட்டாலியன்களின் பெரும்பகுதி நிரந்தர இராணுவத்தில் சேர்ந்தது. 1941 ஆம் ஆண்டில் கடுமையான கோடையிலும் இலையுதிர் காலத்திலும் தொழிலாளர்கள் உத்தியோகஸ்தர்கள் மாணவர்களைக் கொண்டு குடிமக்கள் தொண்டர் படையின் 60 டிவிசன்களும் 200தனி ரெஜிமென்ட்களும் ஏராளமான பாட்டாலியன்கள், கம்பெனிகள், பிளாட்டுன்கள் மற்றும் அணிகள் போன்ற படைப் பிரிவுகளும் உருவாக்கப்பட்டன. இவற்றிலிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை சுமாராக 20 இலட்சமாகும். இது தவிர சுமாராக ஒருகோடி பேர் தற்காப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர். பொறியியல் அரண்களைக் கட்டிக் கொண்டிருந்தனர். 1941 இறுதியில் 400க்கும் அதிகமான புதிய செஞ்சேனை டிவிசன்களை உருவாக்க முடிந்தது. யுத்தத்தின் முதல் அரையாண்டில் மட்டும் கம்யூனிஷ்டுக் கட்சி 11 இலட்சத்துக்கும் அதிகமான கம்யூனிஷ்டுகளையும் 20 இலட்சம் கம்சமோல் உறுப்பினர்களையும் 8800 பொறுப்புமிக்க கட்சிப் பணியாளர்களையும் இராணுவத்திற்கு அனுப்பி வைத்தது, பாசிசத்துக்கு எதிராக சோவியத் மக்கள் ஒருமனதோடு போராட எழுந்தது, அவர்களுடைய அரசியல் முதிர்ச்சிக்கும் தமது தேசபக்த மற்றும் சர்வதேசக் கடமையை அவர்கள் எவ்வளவு ஆழமாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதற்கும் சான்று பகர்ந்தது.


ஜோசப் ஸ்ராலின், சோவியத்யூனியனின் தலைவர் (19,யூலை,1941-1953மார்ச்,5) உயர்இராணுவக் கட்டளைத் தளபதி(1943-1953)

யுத்தம் தொடங்கியது, ஹிட்லர் ஜேர்மனிக்கு எதிரான போராட்டம் பற்றிய ஆழ்ந்த விஞ்ஞான பூர்வமான திட்டத்தை கம்யூனிஷ்டுக்கட்சி வகுத்தது. இது சோவியத் யூனியனின் மக்கள் கமிசார்களின் கவுன்சிலும் அகில ருஷ்ய கம்யூனிஷ்டு (போல்ஷ்விக்) கட்சியின் மத்திய கமிட்டியும் 1941 ஆம் ஆண்டு ஜூன் 29 இல் வெளியிட்ட ஆணையில் விவரிக்கப்பட்டிருந்தது. சகலவித சக்திகளையும் சாதனங்களையும் யுத்த நலன்களுக்கு அர்ப்பணிக்குமாறு சோவியத் உள் நாட்டின் பணியை மாற்றியமைக்குமாறும் தேசியப் பொருளாதாரத்தை யுத்த வழிக்கு மாற்றுமாறும் இராணுவத்தை சகல வழிகளிலும் பலப்படுத்துமாறும் எதிரி ஆக்கிரமித்த இடங்களில் கெரில்லா இயக்கத்தை வளர்த்திடுமாறும் சித்தாந்த-அரசியல் பணி முழுவதையும் மாற்றியமைத்திடுமாறும் இந்த ஆணை, கட்சி, சோவியத் மற்றும் சமூக ஸ்தாபனங்களிடம் கோரியது. "ஒரு நிமிடத்தைக்கூட வீணடிக்காது. எதிரியுடனான போராட்டத்தில் ஒருவாய்ப்பைக்கூட நழுவவிடாது விரைவாக ஒழுங்குபடுத்திக் கொண்டு இயங்கும் திறமையைத்தான் இப்போது, எல்லாமே பொறுத்துள்ளது" என்று ஆணையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த ஆணை அப்போது ஒரு மாபெரும் அபாய எச்சரிக்கை மணியாக ஒலித்தது. சோஷலிசத் தாயகம் அபாயத்தில் உள்ளது. என்ற பிரபல லெனினுடைய அறைகூவலின் எதிரொலிகள் இதில் கேட்டன. எல்லாம் போர் முனைக்கே! எல்லாம்


லீட்யா லீற்வ்யாக் (1921-1943)
தாய்நாட்டிற்காக முதன்முதலாக (வயது21) உயிர்த்தியாகம் செய்த- பெண் விமானி

வெற்றிக்கா! எனும் கோசத்தின் மூலம் கட்சி ஒவ்வொரு சோவியத் குடிமகனையும் அபாயத்தை நேரடியாகப் பார்க்குமாறு செய்தது... நமது பலதேசிய அரசின் மக்களினங்கள் அனைத்தும் தமது ஒருமனதான ஆன்மீக ஊக்கத்தால் ஆயுதப் பலத்தைப் பன்மடங்கு பெருக்கி உயர் தேசபக்த இலட்சியத்தின் பொயரால் தமது தாய் நாட்டின் பாதுகாப்பின் பெயரால் எழுந்து நின்றனர் என்று சோவியத் யூனியனின் மார்ஷல் ஜூக்கவ் தன் நினைவுக் குறிப்புக்களில் எழுதினார்.

(தொடரும்)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 45 பேருக்கு 20 இலட்சம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சியில் அண்மையில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 45 நபர்களுக்கு 20 இலட்சம் ரூபாவுக்கு மேல் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் அபராதமாக விதித்துள்ளது.

அண்மையில் கொழும்பில் இருந்து வந்த மின்சார சபையினரும் நெல்லியடி பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட திடீர் சோதனையின் போது 45 பேர் கடந்த 3 ஆம் திகதி பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இதில் அரச அதிகாரிகள், வர்த்தகர்கள், வைத்தியர்கள் என பலரும் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இதில் அதிகூடிய தொகையாக 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இதில் நீதிமன்ற அபராதத்துடன் மின்சார சபைக்கு நஷ்ட ஈட்டையும் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. (அ-3-24)

## வீடுகளில் கோழி உரித்து விற்பனை செய்யத்தடை

### வல்வெட்டி.நகரசபை அறிவிப்பு

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் இறைச்சிக் கோழியை வீடுகளில் வைத்து உரித்து விற்பனை செய்வதற்கு வல்வெட்டித்துறை நகரசபை தடை விதித்துள்ளதாக நகரசபையின் தவிசாளர் நடராஜா அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக எமது பிரதேசத்திற்குட்பட்ட வீட்டு உரிமையாளர்கள் தமது வீடுகளில் இறைச்சிக்கோழியை உரித்து விற்பனை செய்வதாகவும் இதனால் தொற்று நோய்களும் சுகாதார சீர்கேடுகளும் துர்நாற்றங்களும் இடம்பெறுவதை அடுத்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதால் இத்தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இவ் இறைச்சிக்கோழிகளை உரித்து விற்பனை செய்வதற்கான இடம் வல்வெட்டித்துறை நகர சபையின் கட்டடத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-24)

## வடமத்திய மாகாணத்தில் மட்டும் ஆறாயிரம் நோயாளர்கள் மரணம்

### சபையில் திஸாநாயக்க எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தில் மட்டும் இதுவரையில் 6 ஆயிரம் நோயளர்கள் உயிரிழந்துள்ளதாக ஜனநாயக தேசிய முன்னணியின் எம்.பி. அநுரகுமார திஸாநாயக்க சபையில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். இந்த நோய்க்கான காரணிகள் என்னவென்பது தொடர்பில் கண்டறிய அரசாங்கம் நடிவடிக்கைகளை எடுக்கவில்லையென்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட உரையொன்றையாற்றும் போதே அநுர திஸாநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ராஜரட்ட அநுராதபுரத்தில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றது. நீரிழிவு நோய் காரணமாக வடமத்திய மாகாணத்தில் மட்டும் 18 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறுநீரகங்கள் செயற்பாடு இயங்காது போனால் நோயாளர்கள் மரணித்து விடுகின்றனர்.

குடிநீரில் மற்றும் விவசாய நீரில் விஷவாயுக்கள் கலப்பதாலும் விவசாயிகள் பாவிக்கும் ஆசனிக் பசளைகளால் இந்நோய் அதிகரித்துச் செல்கின்றது. ஆனால், சுகாதார அமைச்சு இது தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை. நோய்க்கான காரணி இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.


இது தொடர்பில் தேசிய சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொண்டு இந்நோய்க்கான காரணிகளை கண்டு பிடிப்பதற்கு இதுவரையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. விவசாய நிலமான வடமத்திய மாகாணத்தில் போத்தலில் அடைத்த குடிநீர் பாவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கெப்பிட்டிக்கொலாவ,ஸ்ரீபுர போன்ற பிரதேசங்களில் அந்த நோய் அதிகரித்து காணப்படுகின்றது. ஆனால், நோயாளர்கள் அநுராதபுர தேசிய வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது. சிறுநீரக நோய்களால் பாதிப்புக்குள்ளான விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. சிறுநீரக நோய் பரவுவதற்கான காரணி என்ன? அராங்கம் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். (அ-2)

## வடக்கில் இராணுவ முகாம்களை விரைவில் அகற்ற நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)



வடக்கு மாகாணத்தில் இருக்கும் இராணுவ முகாம்கள் விரைவில் அகற்றப்பட்டுவிடும் என இந்திய ஊடகங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கில் பெரும்பாலான இராணுவ முகாம்களை குறைக்கும் நடவடிக்கையில் வெற்றியடைந்துள்ளதாகவும் பத்தில் இரண்டு பகுதிகள் தான் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றை அகற்றுவதற்கு இன்னும் ஒரு மாதமே தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் சென்னையில் இருந்து சென்ற சில ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். அவர்களிடமே இந்தத் தகவலை குறிப்பிட்டதாக பிரிஜ வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் எந்தப் பகுதியிலும் கடுமையான பாதுகாப்பு நடைமுறையில் இல்லை. இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்து நான் தனியாக எந்த முடிவும் எடுக்க முடியாது. எனினும் இராணுவ முகாம்கள் உள்ளன் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## மாலைதீவில் புத்தர் சிலை உடைக்கப்பட்டது

மாலைதீவில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலைகள் உடைத்து அழிக்கப்பட்ட செயலானது அங்குள்ள பௌத்த எதிர்ப்பாளர்கள் சிலரது நடவடிக்கை என அந்த நாட்டின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மாலைதீவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை பயன்படுத்தி அங்குள்ள முஸ்லிம்கள் சிலர் இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாலைதீவில் உள்ள அருங்காட்சியகம் 2010 ஆம் ஆண்டு சீனாவின் உதவியுடன் சகல இனங்களின் வரலாற்று சிறப்புகள் உள்ளடங்கும் வகையில் கட்டப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அருங்காட்சியகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அங்கு வைக்கப்பட்டிருந்த அனைத்து பௌத்த அடையாளங்களும் திருத்தி அமைக்கப்பட முடியாத வகையில் கடுமையாக சேதப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (அ-2)

## மொஹமட் நஷீடின் குடும்பம் பாதுகாப்பாகவுள்ளது

### அரசாங்கம் தெரிவிப்பு

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீடின் பாரியாரும் குழந்தைகளும் கொழும்பில் பாதுகாப்பாகவுள்ளனர். ஆனால், மாலைதீவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு விவகாரங்களில் இலங்கை தலையிடாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அந்நாட்டின் புதிய ஆட்சியாளர்களுடன் இராஜதந்திர உறவுகளை முன்னெடுப்பது குறித்து அவதானம் செலுத்தப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீடின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் மாலைதீவின் புதிய ஆட்சியாளர்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சரவை பேச்சாளரும் சுற்றாடல் அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-2)

## தமிழகம் சென்ற ஹொக்கி அணியினருக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

பயிற்சிக்காக தமிழகம் சென்ற இலங்கை ஹொக்கி அணியினருக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக அவ் அணி திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஹொக்கி பயிற்சி பெறுவதற்காக நேற்று முன்தினம் இலங்கை ஹொக்கி அணி ஒன்று சென்னை எழும்பூர் விளையாட்டு திடலுக்கு சென்றுள்ளது. அதன் போது அவர்களுக்கு எதிராக தமிழர் அமைப்புகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இதன் காரணமாக பயிற்சி எடுக்க முடியாத நிலையில் குறித்த ஹொக்கி அணி திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நாம் தமிழர் மற்றும் தமிழர் எழுச்சி இயக்கத்தினர் மேற்கொண்டிருந்தனர். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டம் செய்த நூற்றுக்கணக்கானோர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். (அ-2)

## முல்லைத்தீவில் தேர்தல்; பவ்ரல் அமைப்பு விசேட நடவடிக்கை

புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தல் தொடர்பில் விசேட கோரிக்கை ஒன்றை தேர்தல் ஆணையாளருக்கு முன்வைத்ததாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதேச மக்களினுடைய தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை பாதுகாக்கும் நோக்கில் தமது அமைப்பு நடவடிக்கை எடுத்து வருவதாக இவ் அமைப்பின் நிர்வாக இயக்குநர் ரோஹன ஹெட்டியராச்சி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அநேகமானவர்கள் மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் உள்ளனர். அவர்களினதும் வாக்குரிமையை பாதுகாக்கும் நோக்கிலேயே தேர்தல் ஆணையாளரிடம் விசேட கோரிக்கையை முன்வைத்ததாக அவர் தெரிவித்தார்.

இந்த இரண்டு பகுதிகளுக்கும் தேர்தல் ஆணையாளரின் விசேட காரியாலங்களை அமைக்க வேண்டும். இத்துடன் பொலிஸ் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய இரண்டு மத்திய நிலையங்களையும் அமைப்பதன்மூலம் இப்பிரதேசங்களில் தேர்தல்களை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)


## மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு

511 ஆவது படையணித் தலைமையகத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் அச்சுவேலி மத்திய மகா வித்தியாலயத்தில் மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. இதில் இலவச கண் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு 500 மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் சமூக நல நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பாதுகாப்பு படைகளின் தலைமையகம் அறிவித்துள்ளது. (அ)



# சிறுவர் அரங்கம்

08




# பட்டத்து யானை

## அம்புலி மாமா கதைகள்

பிரம்மதத்தன் காசியை ஆண்ட போது காசியிலிருந்து சற்று தூரத்தில் தச்சர்கள் வசிக்கும் ஒரு கிராமம் இருந்தது. அதில் ஐந்நூறு தச்சர்கள் இருந்தார்கள். அவர்கள் சிறு படகுகளில் சென்று ஒரு காட்டிற்குப் போய் மரங்களை வெட்டிப் படகுகளில் ஏற்றிக் கொண்டு ஊர் திரும்புவார்கள்.

அந்தக் காட்டில் ஓரிடத்தில் ஒரு பெண் யானை வசித்து வந்தது. ஒருநாள் அதன் காலில் ஒரு மரச் சிலாம்பு குத்தியது. அதனால் அதன் கால் வீங்கி விட்டது. அந்தச் சிலாம்பை அது தன் துதிக்கையால் எடுக்க முயன்றும் முடியவில்லை. அப்போது காட்டில் தச்சர்கள் மரத்தை வெட்டும் சத்தம் அதன் காதில் விழுந்தது. அது நொண்டியவாறே அவர்கள் இருக்கும் இடத்தை அடைந்தது.

யானை சிரமத்துடன் வருவதைக் கண்டு தச்சர்கள் அந்த யானைக்கு ஏதோ பிரச்சினை என்று அதனைக் கூர்ந்து பார்த்தார்கள். யானையும் அவர்களின் முன் வந்து படுத்துத் தன் காலை நீட்டியது.



தச்சர்களும் தம் உளிகளைக் கொண்டு மெதுவாக யானையின் காலில் குத்திய சிலாம்பை எடுத்து விட்டு காயத்திற்கு பச்சிலை தடவினார்கள்.

ஓரிரண்டு நாட்களில் யானையின் கால் வீக்கம் குறைந்து சரியாகி விட்டது. அது முதல் அந்தயானை தச்சர்களுக்கு உதவி செய்யலாயிற்று. மரங்களை இழுத்து வந்தும் பாதி அறுத்த கிளைகளை ஒடித்துப் போட்டும் அவர்களது வேலைப்பளுவைக் குறைத்தது. இப்படியாக யானைக்கும் தச்சர்களுக்குமிடையே நட்பு வளரலாயிற்று.

சிறிது நாட்களுக்குப் பின் அந்தப் பெண் யானைக்கு ஒரு குட்டி யானை பிறந்தது. அது ஐரா வது இன்த்தைச் சார்ந்தது. அந்தக் குட்டி யானை பால்போல் வெள்ளை நிறத்தில் இருந்தது. பெண் யானை வயதாகி விட்டதால் எங்கும் சென்று இரை தேட முடியவில்லை. ஆதலால் தன் குட்டியைத் தச்சர்களிடம் ஒப்படைத்து விட்டு அது காட்டிற்குள் எங்கோ போய்விட்டது. அன்றிலிருந்து இந்த வெள்ளை யானை தச்சர்களுக்கு மிகவும் உதவி புரிந்தது. அவர்கள் கொடுத்த உணவை உண்டு அவர்களது குழந்தைகளை தன் முதுகின் மீது ஏற்றி விளையாட்டுக் காட்டி நதியில் நீராடி தன் பொழுதை கழித்துவந்தது. தச்சர்களும் அந்த யானையைத் தன் குழந்தைகளுக்கு நிகராக அன்பு செலுத்திவந்தனர்.

காட்டில் ஒரு வெள்ளை யானை இருப்பது தெரிந்து பிரம்மதத்தன் அதனைப் பிடிக்கத் தன் ஆட்களுடன் காட்டிற்கு வந்தான். ஆனால் தச்சர்கள் மன்னன் ஏதோ மாளிகை கட்டுவதற்காக மரங்களை வெட்டுவதற்காக வந்துள்ளான் என்று நினைத்து மன்னனிடம், "மன்னா நீங்கள் ஏன் இவ்வளவு சிரமப்பட்டு இந்தக் காட்டிற்குள் வந்துள்ளீர்கள்? நீங்கள் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நாங்களே மரங்களை வெட்டி அரண்மனைக்கு அனுப்பி வைத்திருப்போமே?" என்றனர். இதைக் கேட்ட மன்னன், "நான் ஒன்றும் மரங்களை வெட்டுவதற்காக வரவில்லை. வெள்ளை யானையை அழைத்துச் செல்லவே வந்துள்ளேன்" என்றான். இதைக் கேட்டதும் தச்சர்கள் மிகவும் வேதனைப்பட்டனர். ஆனால் யானை அவர்களிடம் இருப்பதைவிட மன்னனிடம் இருந்தால் இன்னும் நலமாகவும் புகழோடும் இருக்கும் என்று எண்ணி தங்களது வேதனையை அடக்கிக் கொண்டு யானையை அழைத்துச் செல்ல அனுமதித்தனர்.

ஆனால் எவ்வளவு முயற்சி செய்தும் அரசனால் அந்த யானையை அழைத்துச் செல்ல இயலவில்லை. அப்போது ஒருவீரர் அரசனிடம் "அரசே இதனைத் தாங்கள் பிடித்துச் சென்றால் இந்தத் தச்சர்களுக்கு மாபெரும் இழப்பே ஏற்படும். அதனால் அவர்களுக்கு நஷ்டஈடு கிடைக்கச் செய்ய இது விரும்புகிறது" என்றான்.

அரசனும் அதன் ஒவ்வொரு காலருகிலும் தந்தத்தின் அருகிலும் வாலின் பக்கத்திலும் ஒவ்வொரு இலட்சம் வராகன்கள் வீதம் வைத்து தச்சர்களிடம் அந்த பணத்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறியும் குழந்தைகளுக்கும் மனைவிகளுக்கும் அரசன் பட்டாடைகளும் பரிசும் கொடுத்தான். அதன் பின்னரே அது அரசனோடு தலை நகருக்குச் சென்றது.

அந்த யானையை மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அதற்காகத் தனியாக ஒரு கொட்டகை போட்டார்கள். அது பட்டத்து யானை என்று அறிவிக்கப்பட்டது. அந்த யானை வந்தது முதல் காசி இராச்சியம் செழுமையுடன் விளங்கியது. அது பெரிய நாடாகி பலம் பொருந்தியதாக இருந்தது.

அதன் மீது படையெடுக்க மற்ற மன்னர்கள் அஞ்சினார்கள். சில நாட்களுக்குப் பின் அரசி கர்ப்பவதி ஆனாள். அவளது கர்ப்பத்தில் போதிசத்வர் குழந்தையாக இருந்தார். அந்தக் குழந்தை பிறக்க ஒரு வாரம் இருக்கையில் பிரம்மதத்தன் இறந்து விட்டான். இதேசமயம் கோசல மன்னன் காசி மீது படை எடுத்து வந்துவிட்டான். என்ன செய்வதென காசியின் அமைச்சர்களுக்குத் தெரியவில்லை.

அவர்கள் கலந்து ஆலோசித்து முடிவில் கோசல மன்னனுக்கு தூது அனுப்பினார்கள். "எங்கள் அரசி யார் இன்னும் ஒரு வாரத்திற்குள் குழந்தை பெறப் போகின்றார். அவருக்குப் பெண் குழந்தை பிறந் தால் இந்த நாட்டை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். ஆண் குழந்தை பிறந்தால் எங்கள் நாடு உங்களோடு போர் புரியும்" இதுதான் அவர்கள் விடுத்த செய்தி.

கோசல மன்னனும் அது கேட்டு ஒருவாரம் காத்திருந்தான். வார முடிவில் அரசியின் மகனாக போதிசத்வர் பிறந்தார். காசியின் படை கோசல மன்னனின் படையை எதிர்க்கலாயிற்று. போரில் கோசலப் படையின் கை ஓங்குவது கண்டு காசியின் அமைச்சர்கள் அரசியிடம் போய் "அம்மணி! நம் பட்டத்து யானை? போர்க்களத்திற்குச் சென்றாலே நமக்கு வெற்றி கிடைக்கும். ஆனால் அரசர் இறந்ததிலிருந்து அந்த யானை உணவும் உறக்கமும் இல்லாது துக்கத்தில் கிடக்கிறது" என்றனர்.

அது கேட்டு அரசி தன் குழந்தைக்கு அரச ஆடைகளை அணிவித்து அதனை எடுத்துக் கொண்டு போய் அந்த வெள்ளை யானையின் காலடியில் வைத்து "கஜராஜனே! உன் எஜமானர் இறந்தரே எனக் கவலைப்படாதே. இதோ அவரது மகனான உன் எஜமானன். இவரது எதிரி போர்க்களத்தில் வெற்றி முழக்கம் செய்யப் போகிறான். அவனை வென்று உன் எஜமா னனை காப்பாற்று! அப்படி செய்ய விருப்பம் இல்லாவிட்டால் இப்போதே இக் குழந்தையை மிதித்துக் கொன்றுவிடு" எனக் கூறினாள்.

அதுவரை துயரத்தில் மூழ்கிக் கிடந்த யானை தன் துதிக்கையால் அந்தக் குழந்தையை தடவியது. பிறகு அதனைத் தூக்கி தன் முதுகின் மேல் வைத்துவிட்டுப் பிறகு அரசியிடம் கொடுத்து விட்டு போர்க்களத்திற்கு சென்றது.

அந்த யானையின் தாக்குதலை கோசலப்படையால் சமாளிக்க முடியவில்லை. அது பயந்து சிதறிப் போர் ம்முனையிலிருந்து ஓடிவிட்டது.

வெள்ளை யானை நேராகக் கோசல மன்னரின் முன் போய் அவனைத் தன் துதிக்கையால் சுற்றி எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்து குழந்தையாக உள்ள போதிசத்வரின் முன் போட்டது.

கோசல மன்னனும் அக்குழந்தையிடமும் அரசியிடமும் மன்னிப்பைக் கோரினான். அமைச்சர்களும் அரசியும் அவனை மன்னித்து அவனது நாட்டிற்குப் போக அனுமதித்தார்கள்.

போதிசத்வர் ஏழு வயதாகும் வரை வெள்ளை யானையே காசியைக் காத்தது. அதன் பின் போதிசத்வர் காசி மன்னனாகி அந்த யானையையே தன் பட்டத்து யானையாக்கி நாட்டை ஆண்டு வந்தார்.

# கவிதைத் கலசம்

சங்குநாதம்

## இதுதான் உலகமடா

மாற்று குறையாது பல நெடுங்காலம் காவல் காத்த
வீட்டு நாய் வெளியே பழைய சாக்குகூட இல்லாது
மழைக்குளிரில் வாடியிருக்கையிலே நேற்று வந்த
பொமரேரியன் நெஞ்சிலே தாவி மெத்தையிலே
அணைத்தபடி அழகாய் துயில் கொள்ளுதே!
வாரிசுகள் வாழ்வு வளம்பெறவெனவாழ்ந்து
ஓடாய் தேய்ந்து முதுமையடைந்ததும்
நேற்று வந்தவரது போதனையால் அநாதையாக
பெற்றவரை முதியோரில்லமதில் ஏங்கி வாட
விடுகின்றனரே! நாளை நீவிரும் அங்கு செல்ல
விண்ணப்பம் கொடுத்தாகி விட்டதா
இது தான் உலகமடா

பொ. புனிதன்
வரியப்புலம்

## சுமை

ஓலைக்குடிசையிலே ஆரம்பித்த என் வாழ்வு
போகப் போகச் சரிவருமென நினைத்திருந்தேன்
பெற்றெடுத்த பெற்றோர் விண்ணுலகம் சென்று விட்டனர்
கட்டிய புருஷன் காணாமல் போய்விட்டார்
கைக்குழந்தையுடன் நான் மட்டும் தனித்து நின்றேன்
அப்போது தான் தெரிந்தது வாழ்க்கை என்பது சுமை என்று

தாவடியூர்
(மு.நிக்கி)

## அவரவர் பார்வையில்

### வாழ்க்கை

வீரத்தை நம்பினேன்
உண்ணாத உழைப்பை
நம்பினேன் -நான்
இதையெல்லாம் என் நம்பினோன்
எதற்காக நம்பினோன்
நம்பிதற்கும் நம்பதற்கும்
காரணம் உண்டோ- உண்டு
நம்பிக்கைதான் வாழ்க்கை

ஐ.கணேஸ்
ஜெயபுரம்

## வேதனை வாழ்வு

வீதியே என் வீடு
எச்சில் பண்டமோ!
எமக்கு உணவு
உறவை பிரிந்து
உடைமையை இழந்த
வேதனை வாழ்வு
இனி வேண்டுமோ!



த.சயூதரன்
நாவற்குழி

## சீர் செய்குவோம்

இடமாற்றம் என்றால்
தடுமாற்றம் வரும்
இருந்தாலுமிவ்வுலகில்
மாறாத ஒன்று மாற்றமே!
இது எனது மொழியல்ல எப்போதோ
போதிமரஞானி சொன்ன மொழி

சீர்செய்தால் செயன்முறையில்
சீராக இருந்தாலே சிறப்பு
சீச்சீ வேண்டாமிந்த வேலையென்று
மனஞ் சீரழிதல் பழிப்பு
காணிக்குள் ஓடிய முயல்
காட்டுக்குள் ஓடாதோ என்ன?

உள்ளேயென்றதும் ஊறும் நாவு
வெளியேயென்றதும் காய்வதேனோ
இங்கு செய்தாலென்ன?
அங்கு செய்தாலென்ன?
சேவை ஒன்றுதானே!

தேவையற்றுக் குழம்பியிருந்தால்
சிறு தேர்ர கூட அதட்டிபார்க்கும்
தேராக இல்லாவிடினும் –சிறு
தடியாகவேனும் இருந்து விட்டுப்
போவோமே!
அதற்காய் எம்மை நாமே
சீர் செய்குவோம்

அகியோபி

## இமயம் தொட...

நித்திரைக்குச் செல்லமுன்
அன்று செய்த காரியங்களை
மீள் பார்வை செய்
நன்மையையும் தீமையையும்
வேறு வேறாக்கு
நன்மைகளுக்கு வேர் வை
தீமைகளுக்கு தீ வை
உன்னை உணர்ந்துகொள்ள
உன்னைவிட சிறந்தவர்
இவ்வுலகில் யாருமில்லை

மாவை நா.கஜேந்திரன்

## மரணம்

மண்ணில் பிறந்தோர்க்கு
மரணம் நிச்சயம்– இது
மறுக்க முடியாத
மகத்தான உண்மை
விசனங் கொண்டு
விதியை நொந்து
வீணாய் உன்னை
மாய்ப்பதை விட்டு
முயற்சிப் பாதையை
நோக்கி சென்று
உன் உயர்ச்சி கண்டு
மகிழ்ந்திட முயற்சி

சி.ரமணி
யாழ். பல்கலைக்கழகம்

# மௌனத்தின் தேடல் - 108



## விதி

பிறக்கும் போது பெண்
படிக்கும் போது கெட்டிக்காரி
கன்னிப்பருவமதில் அழகி
குடும்பமானதும் தாய்- இன்று
அன்னை மண்ணில்- கோர
யுத்தத்தால் தன் மனதையே
பறிகொடுத்து விட்டு
மாயுதிந்த தாயுள்ளம்!

அ.புவனா
வடவரணி

## வா புதுமைப் பெண்ணாய்

இளம் தளிரே
பேனாபிடித்த கைகளை -இங்கு
சோகம் முளைக்கவிட்டதார்?
நெஞ்சில் உரம் இழந்து
நேர்மை திறம் மறந்து
வஞ்சனை செய்தவரை
வாட்டி வதைத்திடுவோம்
எழுந்து நிமிர்ந்து வா
புதுமைப் பெண்ணாய்

சி.நிலா

## யார் பொறுப்பு

விலை மதிப்பில்லா தங்கச்
சிலை போலிருந்த இவள் இன்று
தலைவிரி கோலமாக எங்கும்
அலைந்து கைநீட்டிப் பிச்சை வாங்கி
உண்ணுகின்றாள் பசிபோக்க

துரை
தென்மட்டுவில்

## அடிகியின் வாழ்க்கை

வன்னி யுத்தத்தில் அகப்பட்டதால்
எண்ணிய எண்ணம் கலைந்திருக்கும்
கன்னி மனம் பிரண்டிருக்கு
பண்ணிய பாவம் தெரியவில்லை
புண்ணியம் ஏதோதான்
உணவாகுதோ?

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## யுத்தத்தின் பரிசு

சீவமுடியாத தலைமுடி
சிரிப்பை மறந்த முகம்
சிராக்க முடியாத அவள் உள்ளம்
மரத்துப்போன அவள் கால்கள்
சுவையறியாத நாக்கு
மொத்தத்தில் அவள் ஒரு
நடை பிணம்
இவைதான் யுத்தத்தின் பரிசு

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்

## நன்றி

எனது நிழலை படம் வரைந்த
ஓவியர்க்கு நன்றி
அதனை பிரசுரித்த பத்திரிகைக்கு
நன்றி
பார்த்துவிட்டு கவி படைத்த
கவிஞருக்கு நன்றி
வாசித்த வாசகரே
எனை கைவிடாதிருந்தால் நன்றி

நடா
துணவியூர்

## யுத்தத்தின் கொடுமை

துள்ளி திரியும் பள்ளி பருவத்தில்
தூக்கம் மறந்து துன்பப்படுவதோ
யுத்தம் தந்த கொடுமையால்
பிஞ்சு வயதில் குடும்பச் சுமையா?

ஜெய்சரி
யாழ்ப்பாணம்

## போரின் விளைவு

அன்னையின்றி தந்தையின்றி
அரவணைக்க யாருமின்றி
அனைத்தையும் பறிகொடுத்து
அரைவயிற்றுப் போக்க-தினம்
அலைகின்றாள் வீதியில்
இந்த அவலைப் பெண்

திருமதி.அ.மேரிஅல்போன்ஸா
குருநகர்

## திருந்திவிடு

விட்டில்பூச்சி வாழ்க்கையால்
வீதிக்கு வந்துவிட்டேன்
விதியை நினைத்து இங்கு
வேர்க்கடலை உண்ணுகின்றேன்
தமிழ்ச் சமூகமே!
எனைப் பார்த்து திருந்திவிடு!

ந.காயத்திரி
யா/வட்டு ம.க

## போராட்டம்

பசித்துண்ண இருந்துண்ண
கொடுத்துண்ண மகிழ்ந்துண்ண
எமக்கு வேண்டும்
சுதந்திரம்!

பி.தமிழரசன்
வட்டுக்கோட்டை

## ஏழ்மை

இரக்கமில்லா இறைவன்
படைப்பில் நான்
இலங்கைத் தமிழ் தாய் வயிற்றில்
முள்ளிவாய்க்காலுக்குள்
முற்றுப்புள்ளியாகிவிட்ட
என் உறவுகளோடு மூழ்காமல்
ஏன் ஒருவேளை சோற்றுக்கு
கையேந்த விட்டாய் இறைவா!


த.அனிதா
குட்டியப்புலம்

## சாபக்கேடு

எங்களுக்கென்று எழுதப்பட்ட விதி
எட்டப்பன் காலந்தொட்டு வந்த விதி
எட்டப்பன் அழிந்தால் தான்
எங்கள் அன்னையின் பசி தீர்ந்து
என்றென்றும் மானத்துடன் வாழலாம்

க.கமலாதேவி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -109



**அன்பு வாசகர்களே!**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 17.02.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# கெஹலிய ரம்புக்வெலவுக்கு நான்காவது சத்திரசிகிச்சை

அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் உள்ள அல்பேர்ட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு நேற்று முன்தினம் நான்காவது தடவையாகவும் கால்களில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மெல்போர்ன் நகரில் தெற்கு யாராவில் உள்ள கோமா விடுதியின் மூன்றாவது மாடியில் இருந்து தவறி விழுந்த அமைச்சர் கெஹலிய மூன்று தடவைகள் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் நான்காவது தடவையாகவும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமைச்சரின் கால்கள் முறிந்து போயுள்ளதால் அவருக்கு மேலும் பல சிறிய சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வாய்ப்புகள் இரு ப்பதாக அவரது ஊடகச் செயலாளர் சரத் தம்பவின்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாடியிலிருந்து தவறி விழுந்த ரம்புக்வெல நிலத்தில் விழவில்லை எனவும் மலர் படுக்கையின் மீது விழுந்ததால் தலையில் காயம் ஏற்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டு ள்ளார். (அ-2)

# புலிச்சந்தேக நபரை பயங்கரவாத தடை பிரிவினரிடம் ஒப்படைக்க உத்தரவு

(கொழும்பு)

விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலி சந்தேக நபர் ஒருவரை பயங்கரவாத தடைப்பிரிவிற்கு மாற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்கவேல் நிமலன் என்ற விடுதலைப் புலி சந்தேக நபரையே இவ்வாறு பயங்கரவாத தடைப்பிரிவிடம் ஒப்படைக்குமாறு நீதவான் அறிவித்துள்ளார்.

பொது மக்களின் பாதுகாப்பிற்குஅச்சுறுத்தல் ஏற்படக்கூடுமென்ற காரணத்தினால் இவ்வாறு பயங்கரவாத தடைப்பிரிவிற்கு மாற்றுமாறு கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் சுனில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நீதவான் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரை எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ-2)

# குத்துச் சண்டை மாணவன் பலி; பயிற்றுவிப்பாளர்கள் கைது

(கொழும்பு)

குத்துச் சண்டை போட்டிக்காக பயிற்சி பெற்ற மாணவன் மரணமடைந்த சம்பவம் தொடர்பில் குத்துச் சண்டை பயிற்றுவிப்பாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஹோமாகம மேல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை குத்துச் சண்டை பயிற்சியின் போது உயர்தரத்தில் கல்வி பயிலும் இம் மாணவன் தாக்குதலுக்கு இலக்காகி ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை அம் மாணவன் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)




★ 55- ரோமின் முடிக்குரிய இளவரசன் டிபேரியஸ் கிளோடியஸ் சீசர் பிரிட்டானிக்கஸ் மர்மமான முறையில் இறந்தான். இவனது மரணம் நீரோ மன்னனாக வர வாய்ப்பளித்தது.

★ 1502-இந்தியாவுக்கான தனது இரண்டாவது கடற் பயணத்தை வாஸ்கொட காமா லிஸ்பனில் இருந்து ஆரம்பித்தார்.

★ 1733- ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியா ஆங்கிலக் குடியேற்ற நாடாக ஜேம்ஸ் ஒக்லிதோர்ப் என்பவரால் அமைக்கப்பட்டது.

★ 1771-சுவீடன் மன்னன் அடொல்ஃப் பிரெடெரிக் இறந்ததை அடுத்து அவனது மகன் மூன்றாம் குஸ்டாவ் மன்னனானான்.

★ 1818- சிலி ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1832- கலாபகசுத் தீவுகளை எக்குவாடோர் இணைத்துக் கொண்டது.

★ 1832- லண்டனில் காலரா பரவியதில் 3 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ 1873- எமிலியோ காஸ்டெல்லார் ஸ்பெயினின் புதிய குடியரசின் பிரதமராக ஆனார்.

★ 1912- சீனாவின் கடைசி அரசன் க்சுவாண் டொங் முடி துறந்தான்.

★ 1912-சீனக் குடியரசில் கிரெகோரியன் நாட்காட்டி அமுலுக்கு வந்தது.

★ 1927-முதலாவது பிரித்தானியப் படைகள் ஷங்காய் நகரை அடைந்தன.

★ 1934-ஆஸ்திரியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது.

★ 1961- வெனேரா 1 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் வெள்ளிக் கோளை நோக்கி ஏவியது.

★ 2001- நியர் ஷூ மேக்கர் என்ற விண்கலம் 433 ஈரோஸ் என்ற சிறுகோளில் தரையிறங்கியது. சிறுகோள் ஒன்றில் தரையிறங்கிய முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ 2002-யூகொஸ்லாவியாவின் முன்னாள் தலைவர் சிலொபடான் மிலோசெவிச் மீது ஹேக் நகரில் ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைகள் ஆரம்பமாகின.

★ 2002-ஈரானின் விமானம் ஒன்று கோரமபாத் நகரில் வீழ்ந்ததில் 119 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்புக்கள்**

★ 1809-சார்ள்ஸ் டார்வின், ஆங்கிலேய இயற்கையியல் அறிஞர் (இ.1882)

★ 1918-ஜூலியன் ஷ்விங்கர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (இ.1994)

★ 1967-என்.ரவிக்கிரன், சித்திர வீணைக் கலைஞர்

**இறப்புக்கள்**

★ 1804-இம்மானுவேல் கண்ட், ஜேர்மனியைச் சேர்ந்த மெய்யியலாளர் (பி.1724)


★ 1908-ஜி.யு.போப், தமிழ்நாட்டில் தமிழ்ப் பணி புரிந்த அமெரிக்கர் (பி.1820)

★ 2009-புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி, தமிழீழ ஊடகவியலாளர்

★ 2009-முருகதாசன், தீக்குளித்து இறந்த ஈழத்தமிழன் (பி. 1982)

**சிறப்பு நாள்**

★ டார்வின் தினம்.



★ 1809-அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் பிறந்த தினம் (இ.1865)

# ஆணைக்குழுவின் அறிக்கையை சிறப்பாக பயன்படுத்த முடியும்

## இலங்கை மனித உரிமை ஆணையாளர்

(கொழும்பு)

இம்மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வை எதிர்நோக்குவதாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை சிறப்பாக பயன்படுத்த முடியும் என கலாநிதி பிரதீபா மஹானாம ஹேவா தெரிவித்துள்ளார்.

அதன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக எடுத்துக் கூறுவது இலங்கைக்கு பயனுள்ளதாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெப்ரவரி ஒன்பதாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளராக கலாநிதி பிரதீபா மஹானாம ஹேவா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். (அ-2)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு இந்து தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மகாலிங்கம் சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ச.அருந்தவரத்தினமும் பாடசாலையின் பழைய மாணவனும் அச்செழு மெ.மி.த.க. பாடசாலையில் இருந்து இளைப்பாறுகை பெற்ற அதிபருமாகிய க.சின்னராசாவும் கலந்து கொள்வர். (எ-6)

# விசேட அதிரடி படையினருக்கு நாடு தழுவிய இடமாற்றம்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையைச்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு நாடு தழுவிய ரீதியில் இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையின் உயரதிகாரிகளும் ஏனைய கடை உத்தியோகத்தர்களும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

எட்டு ஆண்டுகள் சேவையை பூர்த்தி செய்தவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.


எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இந்த இடமாற்ற உத்தரவு அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரினால் கட்டுப்படுத்த முடியாத குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட அதிரடிப்படையினர் மாவட்ட ரீதியில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

(அ-2)

# அதிசய உலகம்...

## அவுஸ்திரேலியாவில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட எரிமலை



ஆயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த உயிரினங்கள் கூடிய எரிமலை அவுஸ்திரேலிய கடல் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய ஆய்வு விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.


கிரேட் அவுஸ்திரேலியன் பியட் மரைன் பார்க் பெனடிக் படுகப்பு என்னும் கடல் பகுதியில் சுமார் 100 மைல் தொலைவில் 2 ஆயிரம் மீற்றார் ஆழத்தில் ஓர் எரிமலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது கடலுக்கடியிலிருந்து 200 மீற்றர் மேல் எழும்பி உள்ளதாகவும் தற்போது செயற்பாட்டில் இல்லை என்றும் ஆனால் இதில் உயிர் வாழ் பொருட்கள் நிறைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எரிமலையின் மக்மா மேலே வர தொட்ங்கிய முயற்சியால் இந்த எரிமலை உருவாகியிருக்கலாம் என்றும் இந்த கடல் பகுதியில் வாழும் அனைத்து உயிரிகளும் தனி சிறப்பு வாய்ந்தது எனவும் கூறப்படுகிறது.

இப்பகுதியில் எரிமலைகள் நிறைந்து இருந்தபோதிலும் இந்த எரிமலை எந்த வித தொந்தரவுகளும் இல்லாமல் காணப்படுவதே இதன் தனி சிறப்பாகும். இதனாலேயே இதன் உயிர்த்தன்மை பாதுகாக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் மீண்டும் பயணம் செய்து அங்கு உயிர் வாழும் உயிரிகள், தாவரங்கள் மற்றும் உயிர் பொருட்களின் மாதிரிகளை சேகரித்து மேலும் பல ஆராய்ச்சிகள் மேற்கொண்டு இப்பகுதியின் உயிர்பர்வல் எத்தகையது என்பதை கண்டறிவோம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## திரையில்லாத கடிகாரம்



ஜப்பானில் டோக்கியோ பிளாஸ் என்னும் கடிகார வடிவமைப்பு நிறுவனம் அண்மையில் புதியவகை கடிகாரம் ஒன்றினை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

பார்ப்பதற்கு கைச்சங்கிலி போலிருக்கும் கையினை அழகுபடுத்துகின்ற கைச்சங்கிலி என்றே பார்ப்பவர்கள் நினைப்பார்கள். ஆனால் அது கடிகாரமாகவும் செயற்படும். அந்த கைச்சங்கிலியில் இரண்டு பொத்தான்கள் இருக்கின்றன. இதில் ஒருபொத்தானை ஒருதடவை அழுத்தினால் நேரத்தினைகாட்டும். இன்னொருமுறை அழுத்தினால் மாதத்தினையும் திகதியையும் காண்பிக்கும். இதன் விலை 17 ஆயிரம் ரூபாய் ஆகும்.

## இறைச்சியால் வடிவமைக்கப்பட்ட விநோதமான பொருட்கள்



மக்களின் உணவில் இறைச்சி இன்று அதிகமாக சேர்க்கப்படும் ஒன்றாகிவிட்டது. இதனை பல்வேறு சுவைகளில் சமைத்து உண்பவர்களும் உள்ளார்கள். ஆனால் வேறுபட்ட வடிவங்களில் வினோதமான முறையில் இறைச்சிகள் சமைக்கப்படுவதையும் அவற்றின் வடிவத்தினைக் கொண்டு செய்யப்பட்டுள்ளள பொருட்களையும் படத்தில் காணலாம்.

## இராட்சத இராட்டினப் பாதை



ஜப்பானில் புதிதாக திறக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரும் வசதிகளைக் கொண்ட பூங்காவில் இராட்சத இராட்டினப் பாதையொன்றை உருவாக்கியிருக்கிறார்கள். 121 பாகையில் 43 மீற்றர் வீழ்ச்சியைக் கொண்ட புதிய இராட்டினமான (Roller-coaster) இது உலகின் ஆகக்கூடிய குத்துச்சாய்வைக் கொண்ட இராட்டினமாக அமையவுள்ளது.

பியூஜி-கியூ ஹைலன்ட் மகிழ்ச்சிப் பூங்காவில் இந்த புதியவகை இராட்டினம் கடந்தவருடம் ஜூலை 11 ஆம் திகதி தொழிற்படத் தொடங்கியுள்ளது. இந்த இராட்டினமானது ரக்காபிஷா (ஆதிக்கம்) என்னும் பெயரில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் 1 கிலோமீற்றார் ஓடு பாதையும் எழு பிரதான முடக்குகளும் வயிற்றை கலக்கும் குத்து சரிவான வீழ்ச்சிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த இராட்டினத்தில் பயணிப்பவர்கள் மணிக்கு 150 கிலோமீற்றார் என்னும் வேகத்தில் பயணிப்பர். இதனால் இப்பூங்காவிற்கு அருகில் பியூஜி மலையை 112 செக்கன்கள் மாத்திரமே காண முடியும்.இந்த இராட்டினம் குத்துச்சரிவில் விழும்போது நிறையில்லாத அனுபவத்தை ஒரு கணம் அனுபவிப்பர்.

## 100 வகையான கட்டளைகளை செய்யக்கூடிய அதிசய நாய்



7 வயதை உடைய நாய் ஒன்று அதனுடைய எஜமானியால் பிறப்பிக்கப்படும் 100 ற்கு மேற்பட்ட கட்டளைகளை உணர்ந்து செயற்படக் கூடிய திறமையை கொண்டு அனைவரினதும் கவனத்தை ஈர்த்து வருகின்றது.

குறைந்த மாதங்களில் பயிற்சிகளை பெற்ற இந்ந நாய் விஷேடமாக வங்கிகளிலுள்ள காசு இயந்திரம் மூலம் தானாகவே காசை பெற்றுக் கொள்ளும் அளவிற்கு திறனை வளர்த்துள்ளதுடன் கடைகளில் பொருட்களை தெரிவு செய்ததிலிருந்து அனைத்து வேலைகளையும் எஜமானிக்காக செய்து வருகிறது.

இத்தனைக்கும் எஜமானியால் எழுந்து நடக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 34 விரல்களுடன் பிறந்த இந்தியக் குழந்தை – கின்னஸில்



இந்தியாவில் குழந்தையொன்று 34 விரல்களுடன் பிறந்ததன் மூலம் புதிய கின்னஸ் சாதனையை நிலை நாட்டியுள்ளது.


இந்தியாவின் உத்தர பிரதேசத்தை சேர்ந்த அக்ஸாட் சக்ஸேனா என்ற இந்த ஆண் குழந்தைக்கு இப்போது ஒரு வயதாகிறது.

குறித்த குழந்தையின் இரு கைகளிலும் தலா 7 விரல்கள் உள்ளன. இரு கால்களிலும் தலா 10 விரல்கள் உள்ளன. மொத்தமாக 34 விரல்கள் காணப்படுவதாக கின்னஸ் உலக சாதனை நூல் வெளியிட்டு நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த குழந்தை கடந்த வருடம் பெருவிரல்கள் இல்லாமல் பிறந்துள்ளது. இந்நிலையில் மேலதிக விரல்களை அகற்றுவதன் மூலம் பெருவிரல்களை உருவாக்கும் முயற்சியில் வைத்தியர்கள் ஈடுபட்டனர்.

அதுமட்டுமன்றி மரபணுக் கோளாறு காரணமாகவே இவ்வாறு விரல்கள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மென்மையான பாதணி



மென்மையான புல் மீது நடப்பதுபோன்றஉணர்வை தரும் அவுஸ்திரேலியா நிறுவனம் தயாரித்த செருப்புக்கள் தற்போது விற்பனையில் கொடிகட்டி பறக்கின்றது. இந்த சிறப்பான செருப்பு வகைகளை குசா என்ற நிறுவனம் தயாரித்து இருக்கிறது. இதில் பயன்படுத்தும் புல் செயற்கையானவை என்று அந்த நிறுவனம் தெரிவித்து இருக்கிறது.

இந்த நிறுவனத்தின் இணையத்தளத்தில் இந்த வகை செருப்புகள் சூடான கடற்கரை மணலில் நடந்தாலும் வெறும் காலில் புற்கள் மீது நடப்பது போன்ற உணர்வை தரும் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

இந்த வகையான செருப்புகள் உலகம் முழுவதும் விற்பனைக்கு வந்து விட்டது. பஷன் தொழிலில் ஈடுபட்டு வரும் அழகு நங்கையர்களும் இந்த வகை செருப்புகளை அணிந்து கொண்டு மேடையில் வலம் வரத்தொடங்கி விட்டனர்.

# வடக்குக்கிழக்கில் சிவிலியன்களை ஆளுநர்களாக நியமியுங்கள்

## சபையில் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தில் பணிபுரிந்தவர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்படும் நிலையில் நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கு சிவிலியன்கள் ஆளுநர்களாக நியமிக்கப்படுகின்றனர் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சபையில் தெரிவித்துள்ளார்.

ஷெல்ரன் ரணராஜா போன்றவர்களை வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்களாக நியமித்திருந்தால் இம்மாகாணங்கள் பாரிய வளர்ச்சி அடைந்து இருப்பதுடன் சமாதான சூழல் எப்போதோ தோன்றியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஷெல்ரன் ரணராஜா மீதான அனுதாபப் பிரேரணையில் உரையாற்றும் போதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஷெல்ரன் தமிழ் மக்களின் மீது கௌரவமும் நட்புறவும் கொண்டவர். எதிரானவரே கிடையாது.

சிங்களத் தீவிரவாதம் உச்சம் பெற்றிருந்த கால கட்டத்தில் அரசியல்வாதிகள் எல்லாம் கட்டில்களுக்கு கீழே ஒழிந்திருந்த வேளையில் அவர் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு வீதியில் தனியாக சென்று வருவார்.

அந்தளவுக்கு தீவிரவாதிகள் கூட அவரை மதித்தனர். இன்று நாட்டில் ஏனைய மாகாணங்களுக்கு ஆளுநர்களாக சிவிலியன்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களாகவே உள்ளனர்.

ஆனால் தமிழர் பிரதேசங்களான வடக்கு கிழக்கில் இராணுவத்தை சார்ந்தோரே



ஆளுநர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

எமது துரதிர்ஷ்டம் ஷெல்ரன் ரணராஜாவால் வடக்கு கிழக்கு ஆளுநராக வர முடியவில்லை. அவர் வந்திருந்தால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் பாரிய அபிவிருத்தியை கண்டிருக்கும் சமாதான சூழல் எப்போதோ தோன்றியிருக்கும். (அ-2)

# நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வல்வை-நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய விசேட பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆலய பரிபாலன சபைத் தெரிவு இடம்பெற்றது.இதில் சபைத்தலைவராக ச.தர்மலிங்கம், உபதலைவராக ச.சிவகுமார், செயலாளராக கா.றஞ்சனதாஸ், உபசெயலாளராக வே.கண்ணதாசன், பொருளாளராக ச.ஜெயகணேஷ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் ஆறு நிர்வாகசபை உறுப்பினர்களும் இரண்டு கணக்காய்வாளர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (அ-7)

# லூர்த்து அன்னையின் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

லூர்த்து அன்னை பெருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்திலுள்ள லூர்த்து கெபியில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது (அ-7)

# இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்க போராட்டம் நடத்துவேன்!

## தா.பாண்டியன் தெரிவிப்பு

(கொழும்பு)

கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீட்பதற்காக போராட்டம் நடத்தப்போவதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக மாநில செயலர் தா. பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் தமிழகத்திற்கு உரிமையாளர்களை நிலைநாட்ட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட மாநாடு வேலூரில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

அங்கு கருத்து வெளியிட்ட அவர், தமிழக அரசு தெரிவித்துள்ளதற்கு அமைய கச்சதீவை மீட்பதற்காக போராட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இதற்காக மக்களை அணி திரட்டப் போவதாகவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக மாநில செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# அளவுக்கு அதிகமான பெரசிட்டமோல் பாவனை உயிர் ஆபத்தை ஏற்படுத்தும்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

உரிய அளவுக்கு அதிகமாக பெரசிட்டமோல் மருந்து வகையை பயன்படுத்த வேண்டாமென சுகாதார அமைச்சு மக்களிடம் கோரியுள்ளது.

உரிய அளவுக்கு அதிகமான பெரசிட்டமோல் பாவனை உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்துமென தேசிய ஔடதங்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பௌரகம குறிப்பிட்டுள்ளார்.

வைத்தியரின் ஆலோசனையின்றி பல தரப்பட்ட நோயாளர்களுக்கான பெரசிட்டமோல் மருந்து வகை பயன்படுத்துவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது ஒருவகைக் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவும் நிலைமை காணப்படுவதாகவும் இதற்காக பலரும் பெரசிட்டமோல் மருந்தை பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவர்கள், பெரியோர்கள் என்ற வயதெல்லைக்கு அமையவே இந்த மருந்து வகையை பயன்படுத்தவேண்டுமெனவும் அதிகளவில் உட்கொள்ளும் சந்தர்ப்பத்தில் உயிராபத்து ஏற்படக்கூடுமெனவும் தேசிய ஔடதங்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் குறிப்பிட்டார். (அ-2)



பாதணிகள் மற்றும் பதனிடப்பட்ட தோல் உற்பத்தி பொருட்களுக்கான கண்காட்சி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, ரிசாட் பதியுதீன், பிரதியமைச்சர் ஜெயரட்ன ஹேரத் ஆகியோர் இக்கண்காட்சியை பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

# ஜேர்மன் பாராளுமன்றில் இலங்கை குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையில் அமைதி, சட்டம் மற்றும் மனித உரிமைகளின் பங்கு என்ன எனும் தொனிப்பொருளில் ஜேர்மன் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் கருத்துப் பகிர்வொன்று இடம்பெற்றுள்ளது.

இக்கருத்துப் பகிர்வில் கட்சிப் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், மனித உரிமைச்செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் பங்கெடுத்திருந்தனர்.

இக்கருத்தரங்கில் பங்கெடுத்திருந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமைகள் அமைச்சின் ஜேர்மன் பிரதிநிதியான வாசுகி தனராஜா கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கைத் தீவில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதோடு இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை குறித்தும் பேசப்பட்டது.

இலங்கைத்தீவில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவதில் இருந்து இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதாக கருத்துரைத்த ஜேர்மனி நாடாளுமன்ற பிரதிநிதி கிறிஸ்ரோபர் ஸ்ரேயர்சர் சுயாதீன சர்வதேச விசாரணையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

இலங்கையின் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை ஏமாற்றத்தை தருவதாக குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் யூரி கோசி, போருக்கு பிந்திய இலங்கைத்தீவில் தமிழர்களின் நிலைவரம் குறிப்பாக பெண்கள் பெரும் துயரை சுமப்பதாக தெரிவித்தார்.

கருத்தரங்கின் நிறைவாக இலங்கைத் தீவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணையின் அவசியத்தை எல்லோரும் வலியுறுத்தினர். (அ-2)

# அரச காணிகளை ஒதுக்கீடு செய்யும் போது ஆணைக்குழுவின் அனுமதி பெறுவது அவசியம்

அரச காணிகளை ஒதுக்கீடு செய்யும் போது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அனுமதிகளை பெற்றுக் கொள்வது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள் , கூட்டுத்தாபனங்கள் மற்றும் அதிகார சபைகள் என்பனவற்றின் தேவைகளுக்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குரிய காணிகளை வழங்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.


இவ்வாறான கோரிக்கைகளை முன்வைப்பதற்கு முன்பாக காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவுக்கு எழுத்து மூலமாக அறிவித்து அதன் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த போதிலும் அரச காணிகளை அரச தேவைகளுக்காக ஒதுக்கீடு செய்யும் நடவடிக்கைக்காக அமைச்சரவை பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளை உரிமையாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அவ்வாணைக் குழுவின் உடன்பாட்டை பெற்றுக்கொண்டதன் பின்னர் கோரிக்கைகள் முன்வைக்கப்பட வேண்டும் என்று சகல திணைக்கள தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



# அடுத்த தலைவர் யார்?



கருணாநிதி தழுதழுக்கும் குரலில் பேசினார். "அவர்களே...இவர்களே" என்று எவரையும் விளிக்காமல்... "என் உயிரினும் மேலான உடன் பிறப்புக்களே!" என்ற வார்த்தையையும்கூட சொல்லாமல் நேரடியாகவே மனவருத்தத்தைக் கொட்ட ஆரம்பித்தார்.

பொதுக்குழு நிகழ்வுகளில் இடம் பெற்ற ஒருவர் கூறுகையில், "ஒருவர் தன்னுடைய அருமை பெருமைகளை எடுத்துச் சொல்லி மீண்டும் தனக்கே வாக்களிக்கும்படி கேட்கும் வகையில் இருந்தது. தலைவரின் அந்தப் பேச்சு. 'இந்தக் கட்சிக்காகவும் உங்களுக்காகவும் எப்படியெல்லாம் நான் உழைத்தேன். எனக்கு நீங்கள் காட்டுகின்ற நன்றி இதுதானா?' என்று கேட்பது போலத்தான் இருந்தது அந்தப் பேச்சு" என்றார்.

"கொட்டுகிற மழையில் ராபின்சன் பூங்காவில் இந்தக் கட்சியை ஆரம்பித்த காலம்முதல் தொடர்பவர்கள் நானும் பேராசிரியரும். ஊர் ஊராகப் போய் அயராமல் கொடியேற்றி வைத்துக் கட்சி வளர்த்தவன் நான். இந்தக் கட்சிக் காக நான் செலவிட்ட உழைப்பு இன்று இங்கே வந்திருக்கிற பல பேருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், இந்த நாட்டுக்குத் தெரியும். பேரறிஞர் அண்ணாவுக்கு நன்றாகத் தெரியும்.


இப்படிப்பட்ட கட்சியில் பொதுக்குழு சீரோடும் சிறப்போடும் அமைதியாக நடக்கிறதே என்று ஒற்றர்கள் மூலமாகக் கேள்விப்பட்டு அவர்களைவிட்டே சிலரைத்தூண்டிவிட்டு இருக்கிறார்கள். வீரபாண்டி ஆறுமுகம் பேசியதில் தவறு எதுவும் இல்லை. அவர் தி.மு.க. தொண்டர்களுக்குச் சில வேண்டுகோளை வைத்தார். அதைத் திரித்து ஸ்டாலினுக்கு ஆதரவாக இருப்பதைப் போல காட்டிக் கொள்ளக்கூடிய சிலர் கட்சியில் பிளவை ஏற்படுத்த... சில குண்டர்கள் முயற்சித்ததை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இதை யார் தூண்டிவிட்டார்கள். இதைப் பின்னால் இருந்து

**ஜூனியர் விகடன்**

இயக்கியவர்கள் யார் என்பதை என்னுடைய இதயத்தில் எழுதிவைத்துக் கொண்டேன்." என்றபோது கருணாநிதி குரல் கம்மியது. மொத்தக் கூட்டமும் நிசப்தமாக அடுத்துத் தலைவர் என்ன சொல்லப் போகிறரர் என்று கவனித்தது. அவருக்குப் பக்கத்தில் இருந்த ஸ்டாலின் தலையைக் குனிந்தவாறு கம்மென்று உட்கார்ந்திருந்தார்.

கருணாநிதி தொடர்ந்தார்...

"நீங்கள் ஸ்டாலினுக்கு உதவி செய்யவில்லை. அவர் வளர்வதற்கு முன்னால் அவருக்குக் களங்கத்தைக் கற்பித்திருக்கிறீர்கள். தி.மு.க.வில் இதுவரை நடந்த அனைத்து தேர்தல்களும் அமைதியாகத்தான் நடந்துள்ளது. சுமுகமாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துத்தான் நடந்துள்ளது. அப்படித்தான் இனியும் நடக்க வேண்டுமென நான் நினைத்தேன். ஆனால், என்னைப்பற்றி பெருமைகளை எல்லாம் நானே சொல்லி என்னை மீண்டும் தலைவராகத் தேர்ந்து எடுங்கள் என்று என்னால் உங்களிடம் பிச்சை எடுக்க முடியாது. அதை நான் செய்யவும் மாட்டேன். அதுதான் உங்களில் சிலருக்கு விருப்பமாக இருந்தால் அடுத்த பொதுக்குழுவில் தலைமைக் கழக நிர்வாகிகள் தேர்தல் என்று நடத்தி யாருக்கு எவ்வளவு வாக்குகள் என்ற எண்ணிக்கையைப் பார்த்து முடிவு செய்யலாம்...!" என்று கருணாநிதி சொன்னபோது... அதன் ஆழ-அகல பரிமாணங்களைப் புரிந்து அதிர்ந்து போனது



பொதுக்குழு.

கருணாநிதியின் கையைப் பேராசிரியர் அன்பழகன் தொட்டு அமுக்கினார். இதற்கு மேல் எதுவும் பேசவேண்டாம்! என்று அவர்

## கருணாநிதி சவால்... ஸ்டாலின் ஏற்பாரா?

நிதானப்படுத்துவதுபோல இருந்தது. அதைப்புரிந்து கொண்ட கருணாநிதி சட்டென உணர்வுகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து... காங்கிரஸ் கூட்டணி குறித்து பதில் சொல்வதற்கு சில நிமிடங்கள் எடுத்துக் கொண்டார்.

அதைச் சொல்லிவிட்டு பேச்சை முடிக்க நினைத்தாலும்... நடந்த சம்பவங்களின் வேதனை முழுதுமாக ஆற்றமுடியாமல் இருந்ததோ என்னவோ... பொதுக்குழு உறுப்பினர்களை நோக்கி, வருமாறு கிண்டலடித்தார் தலைவர்:-

"நீங்கள் எல்லாம் நல்ல சிந்தனையாளர்கள்தான். இல்லாவிட்டால் ஒரு பொதுக்குழு இந்த அளவுக்கு அமைதியாக நடப்பதற்கு இந்த அளவுக்கு ஒத்துழைப்பு கொடுத்திருக்கமாட்டீர்கள். நாளைக்கு இதுதான் எல்லாப் பத்திரிகைகளிலும் வரும். நம்மை இருட்டடிப்புச் செய்ய நினைக்கிற பத்திரிகையாளர்கள் கூட இருட்டடிப்புச் செய்யமுடியாது! உங்களுடைய அருமையான ஆதங்கமற்ற அன்பான மேடையை நோக்கிப் பாய்ந்து தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தையே திக்குமுக்காடச் செய்கின்ற வேகம் வரவேற்கத்தக்கது. அப்போதுதானே தி.மு.க.வுக்கு நல்ல விளம்பரம் கிடைக்கும்! அந்த விளம்பரத்தைக் காசில்லாமல் உண்டாக்கிய உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுக்குழுவைப் பற்றி- இப்போதுள்ள தி.மு.க. பற்றி எனக்கு புரிய வைத்தமைக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்" என்று சொல்லிவிட்டு விடை பெற்றார் கருணாநிதி.

இந்த மாதிரியான கூட்டம் நடந்து முடிந்து, கருணாநிதி பத்திரிகையாளர்களைச் சந்திக்கும் போதெல்லாம் ஸ்டாலின் உடன் இருப்பார். ஆனால், அன்று அவர் இல்லை தனியாகப் போய் நின்று கொண்டார். அவரைக் கருணாநிதி தன் அருகில் அழைக்கவும் இல்லை.

"அரசியலில் இருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்... ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று என்னுடைய மனைவிகள் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், என்னால்தான் ஓய்வு பெறமுடியவில்லை" என்று கிண்டலாகச் சொல்லிச் சென்றார். பத்திரிகையாளர்கள் சந்திப்பு முடிந்த பிறகே கருணாநிதிக்குப் பக்கத்தில் வந்தார் ஸ்டாலின். "வீட்டுக்குத்தானே..? நானும் வர்றேன்! என்றார் ஸ்டாலின்.



வீட்டுக்குப் போகலைப்பா... ஆபீசுக்குப் போறன்" என்று எங்கேயோ பார்த்துக் கொண்டு பதிலளித்தார் கருணாநிதி.

பொதுக்குழு நடத்த கலைஞர் அரங்கத்தில் இருந்த அறிவாலயத்தில் தன்னுடைய அலுவலக அறைக்கு வந்தவர், அரைமணி நேரத்துக்கும் மேலாக அங்கேயே உட்கார்ந்து சக தலைவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். ஸ்டாலினுடன் பயணிக்கும் சில நிமிடங்கள் அன்றைக்குத் தவிர்க்க நினைத்தாரோ என்னவோ...!

"கூச்சல் போட்டவர்களுக்கும் ஸ்டாலினுக்கும் சம்பந்தமில்லை என்றால் உடனே மைக் அருகில் வந்து அவர்களை ஸ்டாலின் கண்டித்திருக்க வேண்டும். கூச்சல் போட்டவர்களை வீரபாண்டி ஆறுமுகத்திடம் மன்னிப்புக் கேட்கும்படி செய்திருக்க வேண்டும். அதைச் செய்யாமல் அவர், வேடிக்கை

**ப.திமாவேலன்,**
**இரா. தமிழ்கனல்**

பார்த்தது சரியில்லை" என்பது பொதுக்குழு உறுப்பினர் ஒருவரின் கருத்து "இதைத் தூண்டிவிட்டவர்கள் யார் என்று என்மனதுக்குள் எழுதி வைத்து விட்டேன் என்று தலைவர் சொல்வது ஸ்டாலினை மனதில் வைத்துத்தான்! தலைவர் பதவிக்கான தேர்தலில் அடுத்த முறை போட்டி இருக்கட்டும். நான் போட்டிபோடுகிறேன். யார் அடுத்த தலைரவர் என்று பார்த்துவிடலாம் என்ற தொனியில் தலைவர் பேசியது பகிரங்கமாக ஸ்டாலினுக்கு விடுக்கப்பட்ட சவால்" என்றும் சொல்கிறார் அவர்.

அதிரடியான அழகிரி நல்ல பிள்ளை என்று பெயர் எடுக்க... அமைதியான ஸ்டாலின் சர்ச்சையில் சிக்கியது தி.மு.க. வில் ஏதோ ஒன்று நடக்கப்போவதற்கான அறிகுறி!

முந்தைய நாள் நடந்த கட்சியின் உயர்நிலை செயல்திட்டக் கூட்டத்துக்கு வந்து கடைசி வரிசையில் உட்கார்ந்த அழகிரி... மறுநாள் நடந்த பொதுக்குழுவுக்கு காலையில் வந்து முன்வரிசையில் அமர்ந்தார். அவருடன் தயாநிதிமாறன், மன்னன், மூர்த்தி, எஸ்ஸார் கோபி ஆகியோரும் வந்தார்கள். காலை நிகழ்வுகள் முடிந்ததும் மதிய சாப்பாட்டுக்காக கிளம்பிப்போன அழகிரி பிறகு மதியம் வரவில்லை.

எனவே வீரபாண்டி ஆறுமுகத் தின் பேச்சு, அதன்பிறகு நடந்த வற்றை அழகிரி பார்க்க வாய்ப்பு கிடைக்கவில்லை. "சும்மா அங்கே போய் வேடிக்கை பார்க்கிறத்துக்கு எதுக்குப் போகணும்?" என்று ஆதரவாளர்களிடம் சொன்னாராம் அழகிரி.

"அவர் வந்திருந்தால் கதையே வேறுமாதிரிப் போயிருக்குமோ...? என்று கேட்டுக் கொண்டு கலைந்தார்கள் பொதுக்குழுவில் சிலர்!

(முற்றும்)

# லசந்த கொலையின் சந்தேக நபரின் உரிமைமீறல் மனு விசாரணைக்கு

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ..கைது செய்யப்பட்ட நபரின் அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

லசந்த கொலையுடன் தொடர்புபடுத்தி கைது செய்தமை மற்றும் பல மாதங்களாக தடுத்து வைத்துள்ளமை சட்டவிரோதமானது எனத் தெரிவித்து குறித்த சந்தேகநபர் நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு தொடர்பான கோரிக்கையை பரிசீலனை செய்த நீதிமன்றம் விசாரணை நடத்த அனுமதி அளித்துள்ளது.

மேலும், இந்த மனுவில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பிரதிவாதிகளை அழைத்து விசாரணை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 30 ஆம் திகதி இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பிரதிவாதிகள் ஏதேனும் ஆட்சேபம் தெரிவிக்க விரும்பினால் அது தொடர்பில் ஆறு வாரங்களுக்குள் நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

லசந்த கொலையுடன் தமக்கு எவ்வித தொடர்பும் கிடையாது என சந்தேகநபர் தெரிவித்துள்ளார். பிரதிப் பொலிஸ்மா அதிபர் சீ. என். வீரக்கொடி, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.ஹெட்டிஹேவா, பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் போகமுவ மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரும் மனுவின் ஏனைய பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிரதிவாதிகளிடமிருந்து நியாயமான அளவு நட்டஈட்டை பெற்றுத்தருமாறு மனுதாரர் நீதிமன்றில் கோரியுள்ளார். (அ-2)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் ம. சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ச. அருந்தவ ரத்தினம், பாடசாலையின் பழைய மாணவனும் ஓய்வுபெற்ற அதிபருமான க. சின்னராசன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி சம்பியன்

(கரவெட்டி)


வடமராட்சி கல்வி வலய பெண்கள் உதைபந்தாட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணி சம்பியனாகியுள்ளது.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற உதைபந்தாட்டஇறுதிப்போட்டியில் பருத்தித்துறை சென் தோமஸ் றோ.க.த.க அணியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணி மோதியது.

இதில் பனால்டி உதைமூலம் 4:3 என்ற கோல்கணக்கில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணி சம்பியனாகியது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் .நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை 2:0 என்ற கோல்க்கணக்கில் வட இந்து மகளிர் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (அ-3-24)

## நாட்டின் சகல மாவட்டங்களிலும் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்படுவர்



### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் சகல மாவட்டங்களிலும் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்படுவர் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பாராளுமன்றின் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடியின் ஊடாக ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சகல மாவட்டங்களிலும் இராணுவத்தினரை நிலை நிறுத்துவது தொடர்பான அறிவிப்பு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடியினால் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 12 ஆம் சரத்தின் அடிப்படையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.சிவில் கிளர்ச்சிகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இவ்வாறு இராணுவத்தினர் சகல மாவட்டங்களிலும் நிலைநிறுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் இந்த அறிவிப்பு விடுவிக்கப்படுவதாகவும் இது வழமையான அறிவிப்பு எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## சூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு

### அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

தென் மற்றும் மேல் மாகாண கரையோர பகுதிகளை கடந்த வருடம் நவம்பர் மாதம் தாக்கிய சூறாவளியால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இழப்பீடு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது பதில் அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா இதனைக் கூறியுள்ளார்.

இதற்கமைய உயிரிழந்த மற்றும் காணாமற்போன 28 மீனவர்களுக்காக அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் இழப்பீடு வழங்கப்படவுள்ளது.

குறித்த சூறாவளிக் காற்றினால் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்த 17 மீனவர்கள் உயிரிழந்ததுடன் மேலும் 11 பேர் காணாமல் போயிருந்தனர்.

சூறாவளி காற்றினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் மீனவர்களுக்காக உயிர் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்படவுள்ளதுடன் அதற்காக 40 மில்லியன் ரூபாயை செலவிடவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ-2)

## புதிய கட்டடம் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட வடமராட்சிகிழக்குப் பிரதேசத்தில் உள்ள பருத்தித்துறை பிரதேச சபையின் மருதங்கேணி உபஅலுவலகம் மருதங்கேணியில் உள்ள பிரதேச சபைக்கட்டடத்தில் நேற்றுமுன்தினம் தொடக்கம் மீள பொதுமக்களின் சேவைக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இவ் உபஅலுவலகத்தின் பொறுப்பதிகாரியாக திருமதி கோசலா லோரன்ஸ் பிரதேச சபை நிர்வாகத்தினரால் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும்,அவ் உபஅலுவலகத்திற்கு பருத்தித்துறை பிரதேச சபையினால் மூன்று உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

## மக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் கண்டு வருகின்றது

### மத்திய வங்கி ஆளுநர் கூறுகின்றார்

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் பொருளாதார அபிவிருத்திக்காகவும் கல்வி முன்னேற்றத்திற்காகவும் வங்கிகளின் ஊடாக பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

த் பினாஸ் கம்பனி பி எல்சியின் யாழ்ப்பாணக் கிளை நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் இடம்பெற்ற நீண்டகாலம் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மக்களின் வாழ்வாதாரமும் முன்னேற்றம் கண்டு வருகின்றது.

யுத்தத்தால் அதிகளவில் பாதிக்கப்பட்ட மாகாணமாக வடமாகாணம் காணப்பட்ட போதும் பொருளாதார ரீதியில் தற்போது முன்னேற்றம் கண்டுவருகின்றது.

கல்வி முன்னேற்றத்திற்காகவும், விவசாயம், சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றது.

இந்த அபிவிருத்திட்டங்களுக்கு வங்கிகளின் பங்களிப்பும் உண்டு. பல மில்லியன் ரூபா நிதியை வங்கிகள் ஒதுக்கீடு செய்துள்ளன.

இதுதவிர மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக கடன் உதவிகளையும் மாணவர்களின் கல்வியறிவை வளர்த்தெடுப்பதற்கான உதவிகளையும் வங்கிகள் வழங்கி வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## பிக்குவின் சடலம் மீட்பு


ரித்திகல ஆரண்ய குளத்திலிருந்து 8 வயதான பிக்கு ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சடலம் நேற்று முன்தினம் மாலை கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடந்த வியாழக்கிழமை முதல் குறித்த சிறுவன் காணாமற்போயிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. (அ-2)

# ஜனநாயகத்தின் பிளசே[+] இங்கு தேவைப்படுகிறது

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

தேசியப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சகல கட்சிகளும் ஆர்வம் காட்ட வேண்டும் என்பதுடன் மாலைதீவு பிரச்சினைக்கு சார்க் மற்றும் பொதுநலவாய நாடுகளின் அமையம் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதினேன். அரசாங்கமே இந்த ஆணைக்குழுவை நியமித்தது. இதற்கு பூரண ஆதரவை வழங்கினோம். அந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் ஆக்க பூர்வமான சிபாரிசுகளும் முன் வைக்கப்பட்டுள்ளன.

சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பது முக்கியமானதாகும். சிலர் 13+ என்கிறனர். சிலரோ 13- என்கின்றனர். எனினும் ஜனநாயகத்தின் பிளஸே இங்கு தேவைப்படுகின்றது. அதனை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாலைதீவு விடயம் தொடர்பில் ரவி கருணாநாயக்க எம்.பி.ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடியுள்ளார். இங்கு சுமுகமான நிலையொன்று உருவாக வேண்டும். மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடினேன்.

மாலைதீவு சார்க் உலக நாடுகள் மற்றும் பொதுநலவாய அமையத்தில் அங்கம் வகிக்கும் நாடு என்ற வகையிலே அந்நாட்டின் பிரச்சினைக்கு இவ்விரு அமைப்புக்களும் சுமுகமான தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றார்.

அத்துடன் தன்னால் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கவிருந்த கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பிலான ஐ.தே.க.வின் நிலைப்பாடு மற்றும் பரிந்துரைகள் அடங்கிய பிரதியை சபை முதல்வர், ஆளும் கட்சியின் பிரதம கொறடா ஆகியோருக்கு சபை உதவியாளரின் ஊடாக அனுப்பி வைத்ததுடன் சம்பந்தன், சுனில் ஹந்துநெத்தி ஆகிய எம்.பி.க்களுக்கு நேரடியாக கையளித்தார். (அ-2)

## பொலிஸாரால் குற்றப்பணம் அறவீடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரப்பகுதியில் ஒரு வழிப் பாதை பொலிஸாரினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கான சமிக்ஞைகளும் சந்திகளில் நிறுவப்பட்டுள்ளன. பருத்தித்துறை பகுதியில் மீண்டும் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து இந் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய ஒரு வழிப்பாதை நடைமுறையை கடைப்பிடிக்க தவறுவோர் மீது பொலிஸார் 500 ரூபா குற்றப்பணம் அறவிட்டு வருகின்றனர். (அ-3-10)

## 16 வர்த்தகர்களுக்கு எதிரான வழக்கில் 51 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

### சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் 16 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 51 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரி ந.சிவசீலன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி, கொடிகாமம், வரணி, மந்துவில் ஆகிய பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே விலையினை அதிகரித்து பொருட்களை விற்பனை செய்த 8 வர்த்தகர்களும் கலாவதியான பொருட்களை விற்பனை செய்த 5 வர்த்தகர்களும் விலைப் பட்டியல் இன்றி பொருட்களை விற்பனை செய்த 3 வர்த்தகர்களுமாக மொத்தம் 16 வர்த்தகர்கள் இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்ட போது காலாவதிப் பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு தலா 4 ஆயிரத்து 500 ரூபாவும் பொருட்களின் விலைகளை அதிகரித்து விற்ற வர்த்தகர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபாவும் விலைப்பட்டியல் இன்றி பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதித்து நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா தீர்ப்பளித்தார் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## புதிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினரால் என்.வி.கியூ அடிப்படையிலான புதிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன. தொழிற்பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி சு.கிரிதாஸ் அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறிகளானது பாடசாலைக் கல்வியை விட்டு இடை விலகிய மாணவர்கள் மற்றும் உயர்கல்வியினை தொடர முடியாத மாணவர்களின் நிலைமையை கருத்திற் கொண்டே நடத்தப்படவுள்ளன.

இதில் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம், கட்டட நிர்மாணம், மின்னியல், மோட்டார் திருத்துதல், தையல், மரவேலை தொழில் நுட்பம் போன்ற கற்கை நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறிகளை பின்பற்றவிரும்புவோர் தமது சுயவிபரக்கோவையினை எதிர் வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் காரைநகர் வலந்தலை சந்தியிலுள்ள அலுவலகத்திலோ அல்லது இல.375 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப் பாணம் என்னும் மாவட்டக் காரியாலயத்திற்கோ நேரடியாக அல்லது கடித மூலமாக அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## வடமராட்சியில் நவீன வசதி கொண்ட மைதானம் அமைக்க தீர்மானம்

### நகரசபை நடவடிக்கை

(கரவெட்டி)

வடமராட்சியில் நவீன வசதிகள் கொண்ட மைதானம் அமைப்பதற்கு வல்வெட்டித்துறை நகரசபை தீர்மானித்துள்ளதாக நகரசபைத் தவிசாளர் நடராஜா அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

நெற்கொழு கழுகு மைதானத்தை உரிமையாளர்களிடம் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது நடைபெற்று வருவதாகவும் இம்மைதானத்தை வடமாகாணத்தில் சிறந்த விளையாட்டு மைதானமாக உருவாக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக நகரசபை நிதியில் இருந்து 20 இலட்சம் ரூபாவையும் பின் புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற மக்களிடம் இருந்தும் மற்றும் உள்ளூர் மக்களிடம் இருந்தும் நிதியை சேகரித்து இம் மைதானம் தரம் உயர்த்தப்படவுள்ளது.

அத்துடன் வடமாகாணத்தில் எப்பிரதேச வீரர்களுடனும் சம உரிமையுடன் போட்டியில் பங்கு கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-24)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

யா/பெரியபுலம் மகா வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் செ.இளங்கோ தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக அச்சுவேலி யூனியன் வங்கி முகாமையாளரும் பாடசாலை பழைய மாணவருமான ந.சச்சிதானந்தம் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன், சுஜீவா வைத்தியசாலை வைத்திய கலாநிதி ஜெ.ஜெயலன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2)

* * * * * * *

யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பெருமாள் கோயில் முன்றலில் பாடசாலை அதிபர் மி.விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, சிறப்பு விருந்தினராக பிசி பரடைஸ் இயக்குநர் கு.ரமேஸ் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி கௌரியம்பாள் மாணிக்கராஜா வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பர். (அ-2)

## சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் கண்பரிசோதனை இடம்பெறாமையால் மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் மாதத்தில் இரண்டாவது புதன்கிழமைகளில் கண் பரிசோதனை நடைபெறுமென சுகாதாரத் திணைக்களத்தினால் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் அத்தினத்தில் கண்பரிசோதனை நடைபெறாமையால் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள நான்கு ஆதார வைத்தியசாலைகளில் சுகாதார அமைச்சின் விஷன் 2020 செயற்றிட்டத்தின் கீழ் கண் பரிசோதனை புதன்கிழமைகளில் நடைபெறுமென பத்திரிகைகள் வாயிலாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இரண்டாவது புதன்கிழமை சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் கண் பரிசோதனை அறிவிக்கப்பட்டதையடுத்து தென்மராட்சி, கிளிநொச்சி, பூநகரி, வடமராட்சி கிழக்கு, பளை போன்ற பிரதேச மக்கள் கண் பரிசோதனைக்காக வந்திருந்தனர்.

அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் நோயாளர்கள் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் தொடர்பு கொண்டு வினவியபோது தமக்கு அப்படியொரு அறிவித்தலும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். (அ-3-29)

## தபால் தலைமையகத்திற்கு முன் எதிர்ப்புப் போராட்டம்

(கொழும்பு)

ஒருநாள் சேவையின் கீழ் தபால் அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக வந்திருந்த குழுவினர் தபால் தலைமையகத்தின் முன்னால் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தபால் அடையாள அட்டைகளை வழங்குவதில் தாமதம் நிலவுவதாக தெரிவித்தே அவர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் விண்ணப்பங்களை சமர்ப்பித்தபோதிலும் இதுவரையில் தபால் அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லையென அவர்கள் சுட்டிக்காட்டினளளர்.

இந்த விடயம் தொடர்பில் தபால் சேவைகள் அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ தெரிவிக்கையில், சம்பவம் தொடர்பில் தபால் அதிபருக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அவர் குறிப்பிட்டார். (அ-2)

# சிரியாவின் போராட்டத்தில் குழந்தைகளும் தவறவில்லை

(டமாஸ்கஸ்)

சிரியாவில் கடந்த 11 மாதங்களாக நடைபெற்ற தாக்குதலில் 400 குழந்தைகள் வரை கொல்லப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

சிரியா[illegible] ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் பதவி விலக கோரி கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் போராட்டக்காரர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களுடன் பொது மக்களும் இணைந்து போராடி வருவதால் அவர்களை ஒடுக்குவதற்காக ஜனாதிபதி இராணுவத்தை ஏவி விட்டுள்ளார்.


இராணுவம் நுழைந்து கண்மூடித்தனமாக தாக்கி வருகிறது. ஹமாஸ் நகரில் இராணுவத்தினர் பீரங்கி மற்றும் ரொக்கெட் குண்டுகள் மூலம் கடுமையான தாக்குதல் நடத்தினார்கள்.

இது தவிர கடந்த 11 மாதங்களில் மட்டும் 400 குழந்தைகள் வரை கொல்லப்பட்டுள்ளதாக யுனிசெப் கணக்கெடுப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

சிரியாவில் இராணுவத்தினர் வெறியாட்டம் அதிகரித்து வருவதனால் அந்நாட்டிற்கு 3 ஆம் எண் எச்சரிக்கையை பிலிப்பைன்ஸ் அறிவித்துள்ளது. சிரியாவில் மக்கள் போராட்டம் தொடங்கி இதுவரை 7 ஆயிரம் பேர் கொல்லப்பட்டு இருக்கின்றனர். கடந்த வியாழக்கிழமை மட்டுமே ஒரேநாளில் 100 பேர் உயிரிழந்து இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# பாகிஸ்தான் பேரணியில் வெடிகுண்டு தாக்குதல்

## ஒருவர் பலி;10 இற்கும் அதிகமானோர் காயம்



பாகிஸ்தான் இம்ரான் கான் தலைமையில் நடந்த பேரணியில் வெடிகுண்டுகள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஒருவர் பலியானார். பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். பாகிஸ்தான் முன் னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் தெரிக் இன்சாப் என்ற அரசியல் கட்சி நடத்தி வருகிறார். அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிட முடிபு செய்துள்ளார்.

மேலும் பிரதமர் கிலானி, ஜனாதிபதி சர்தாரி உட்பட அரசியல்வாதிகள் ஊழலில் திளைத்து வருகின்றனர். பாகிஸ்தானில் சட்டம் , ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதென்று தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகின்றார்.

இந்நிலையில் ஹைபர் பக்துன்ஹவா மாகாணத்தில் தெரிக் இ இன்சாப் கட்சி சார்பில் பிரமாண்ட பேரணி நடந்தது. இதற்கு இம்ரான்கான் தலைமைவகித்தார்.

அப்போது பொலிஸ் வாகனங்கள் மீது வெடிகுண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அதிர்ஷ்டவசமாக இம்ரான் உயிர்தப்பினார். எனினும் ஒருவர் பலியானார்.

பொலிஸார் 4 பேர் உட்பட 10 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். உடனடியாக பொலிஸார் அந்த இடத்திற்கு சீல்வைத்தனர் வெடிகுண்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு தீவிர சோதனை நடத்தப்பட்டது. வெடிகுண்டுத் தாக்குதலுக்கு இம்ரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (அ-2)

# சாவுகள் மலிந்துவிட்ட மயான பூமியாக சிரியா

சிரியா நாட்டில் ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிராக நடைபெறும் போராட்டத்தில் தினமும் பலர் உயிரிழந்து வருகின்றார்கள்.

இந்நிலையில் 2 ஆவது பெரிய நகரமாக அலெபோ நகரில் உள்ள பொலிஸ் நிலையம் மீது கார் குண்டு வெடிக்கச் செய்து தாக்குதல் நடந்தது.

அந்த பகுதியில் அடுத்தடுத்து 2 முறை குண்டுகள் வெடித்தன.

இதில் 25 பேர் பலியானார்கள். இவர்களில் பலர் பாதுகாப்பு படையைச் சேர்ந்த இராணுவத்தினர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் 175 பேர் படுகாயம் அடைந்தனர். (அ-2)

# அழுகிய நிலையில் 15 சடலங்கள் மீட்பு

(ரியோடிஜெனிரோ)

பிரேசில் நாட்டில் உள்ள அகாய்கான் என்ற இடத்தில் 2 பிரிவினர் இடையே நீண்ட நாட்களாக மோதல் நடந்து வருகின்றது. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அங்குள்ள காட்டுப் பகுதியில் ஒரே இடத்தில் 15 பேர் கொன்று புதைக்கப்பட்டு இருந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

அனைத்து உடல்களும் அழுகி சிதைந்து இருந்தன. பிணங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அந்த பகுதியில் பதற்றம் ஏற்பட்டு உள்ளது. (அ-2)

# ஒபாமாவை கொல்ல சதித்திட்டம் தீட்டினார்

## அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு

(பிர்மங்ஹாம்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக உஸ்பெகிஸ்தான் நாட்டைசேர்ந்த மாணவரை குற்றவாளி என அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்க பொலிஸார் நடத்திய அதிரடி சோதனையில் அவன் கைது செய்யப்படான். அவனிடம் இருந்து பெருமளவான வெடி பொருட்கள் மற்றும் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட உஸ்பெகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 22 வயதான உலக்பெக் கோடிரோவ் என்றும் அவன் பயங்கரவாத செயல்களுக்கு உதவி புரிந்து ஜனாதிபதியை கொல்ல சதித்திட்டதம் தீட்டியது மற்றும் ஆயுதங்களை சட்டத்திற்கு புறம்பாக வைத்திருந்தது தொடர்பான வழக்குகள் அவன் மீது பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)






சிரியா பிரச்சினையில் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து வரும் சீனா, ரஷ்ய கொடிகளை லெபனானில் வசித்து வரும் முஸ்லிம் மக்கள் சீன ரஷ்ய தேசிய கொடிகளை எரித்தனர். இச்சம்பவம் லெபனானின் கடற்கரை நகரமான சிடானில் நடைபெற்றதைப் படத்தில் காணலாம்.

# கேளிக்கைத்திருவிழா கேள்விக்குறியாகுமா?



பிரேசில் நாட்டின் ரியோடி ஜெனிரோ நகரில் வருடந்தோறும் கேளிக்கை திருவிழா சிறப்பாக நடைபெறும். இதில் இடம்பெறும் பெண்களின் சம்பா நடனம் மிகவும் புகழ் பெற்றது.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள இந்த திருவிழாவை காண உலகம் முழுவதிலும் இருந்து இலட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை தரவுள்ளனர்.

இந்நிலையில் இந்நகரில் சம்பள உயர்வு கோரிக்கையை வலியுறுத்தி தீயணைப்பு படையினர் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கைதிகளின் பாதுகாப்பு படையினர் ஆகியோர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தவிர நாட்டின் மூன்றாவது பெரிய நகரமான சல்வடோரில் பொலிஸார் ஏற்கனவே போர்ாட்டம் நடத்தி வருகின்றனர்.

இதன் காரணமாக தலைநகர் மற்றும் சல்வடோர் ஆகிய இடங்களில் குற்றச்செயல்கள் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படலாம் என்றும் அடுத்த வாரம் நடக்க இருக்கும் கேளிக்கை திருவிழாவின் போது பாதுகாப்பு பிரச்சினை ஏற்படலாம் என்றும் அஞ்சப்படுகின்றது. எனவே பாதுகாப்பு பணியில் 14 ஆயிரம் இராணுவ் வீரர்களை ஈடுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது. (அ-2)

# போப்பாண்டவரை கொலை செய்வதற்கு சதித்திட்டம்

கிறிஸ்தவர்களின் மத குருவான போப்பாண்டவரை கொல்ல சதி நடப்பதாக இத்தாலியில் இருந்து வெளிவரும் பிரபல பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

இச்செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது,

கடந்தாண்டு டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி கொலம்பியாவைச் சேர்ந்த கார்டினல் டைரோகாஸ்ரிலோன் ஹையோன் என்பவர் போப்பை சந்தித்து பேசினார்.

அப்போது அவரை கொல்ல சில அமைப்புக்கள் சதித்திட்டம் தீட்டியுள்ளதாகவும் எதிர்வரும் நவம்பர் மாதம் சீனா செல்லும் போது இதை நிறைவேற்றவுள்ளதாகவும் அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கு வாடிகன் வட்டாரம் மறுப்புத் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வாடிகன் செய்தித் தொடர்பாளர் பெர்டரிக்கோ லோம்பர்டி கூறுகையில் ,

பொப்பாண்டவரை கொல்ல சதித்திட்டம் தீட்டுவது குறித்து எந்த ஒரு தகவலும் எங்களுக்கு 'வரவில்லை. அடிப்படை ஆதாரமற்றது என்றார்.

இந்நிலையில் பொப்பாண்டவர் நம்பிக்கைக்குரிய டார்ஜீஸோ பெர்டோன் என்பவர் வாடிகன் நிர்வாகத்தின் வெளிவிவகார செயலராக உள்ளார். இவரை பதவி நீக்கம் செய்ய போப் நடவடிக்கை எடுக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகிய நிலையில்தான் இப்படி ஒரு வதந்தி கிளம்பியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (அ-2)

# இலங்கை-ஈரான் உறவை அமெரிக்கா உட்பட எந்தத் தரப்பினராலும் தடுக்க முடியாது

## ஈரான் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவித அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் இலங்கை மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவில் பாதிப்பு ஏற்படாது என இலங்கைக்கான ஈரானிய தூதுவர் கலாநிதி நபி ஹசனி பேர் தெரிவித்துள்ளார்.

இந்த உறவினை அமெரிக்கா மற்றும் இலங்கையின் எதிர்க்கட்சி உள்ளிட்ட எந்தவொரு தரப்பினராலும் கூட தடுக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானில் இஸ்லாமிய புரட்சி ஏற்பட்டு 33 ஆண்டுகள் நிறைவு மற்றும் தேசியதினம் ஆகியவற்றினை நேற்றையதினம் ஈரான் கொண்டாடியுள்ளது. இந்நிலையில் உலக நாடுகளுக்கு அமெரிக்காவினால் ஈரானிய எண்ணெய் தொடர்பில் தற்போது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடை தொடர்பில் இலங்கைக்கான ஈரான் தூதுவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஒருதலைப்புட்சமான இந்த தடையின் ஊடாக சிறிய நாடுகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறான பொருளாதார தடைகளினை ஐக்கிய நாடுகள் மாத்திரமே விதிக்க முடியும் என அவர் தெரிவித்தார். அமெரிக்கா போன்ற ஏனைய நாடுகள் இவ்வாறான ஒருதலைப்பட்சமான தடைகளை விதிப்பது சட்டவிரோதமான செயலாகும் எனவும் ஈரான் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளினால் பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டுவது இன்று நேற்றல்ல. கடந்த 50 வருடங்களாக பொருளாதாரத் தடை விதிப்பு இடம்பெற்று வருகின்றது. ஆனால், குறித்த பொருளாதார தடைகளுக்கு மாற்றீடான வழிகளை ஈரான் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இது போன்றே தற்போது ஈரான் தொடர்பில் உலக நாடுகளுக்கு அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைக்கும் மாற்று வழி காணப்படும் என அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்த தடைகளுக்கு மத்தியில் எரிபொருள் மற்றும் தேயிலை ஆகியன தொடர்ச்சியாக இரு நாடுகளுக்குமிடையில் பரிமாறப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டார். சுமார் 32 வருட நெருங்கிய உறவினை கொண்ட இலங்கை மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவு தொடர்

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சி.தர்மரத்தினம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன், சிறப்பு விருந்தினராக எச். எஸ்.பி.சி. வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர், சி.அரவிந்தன், கௌரவ விருந்தினராக சுஜி தளபாடத் தொழிலக உரிமையாளர் மு.தங்கராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# சர்வதேச சவால்களுக்கு மத்தியிலும் சீனா இலங்கைக்கு ஆதரவளிக்கும்

## சீனா உறுதியளிப்பு

சர்வதேச ரீதியாக ஏற்படும் எந்தவொரு சவால்களுக்கு மத்தியிலும் இலங்கைக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என சீனா மீண்டும் வலியுறுத்தி கூறியுள்ளது.

சீனாவின் ஷெங்ஷி பிராந்தியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் மட்ட குழுவின் செயலாளர் யுஆன்சுங்கின், இலங்கை பிரதமர் டி.எம். ஜயரட்ணவை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடிய போது தமது ஆதரவை உறுதிப்படுத்தி யுள்ளார்.

யுஆனுடன் 14,பேர் கொண்ட தூதுக் குழுவினரும் இலங்கை பிரதமரை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இலங்கையுடன் கைகோர்த்து செயற்படுவதே சீனாவின் பிரதான நோக்கம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பலவற்றுக்கும் சீனா தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கி வருகின்றமையும் இதன் போது நினைவு கூரப்பட்டது.

அதனை மேலும் விரிவுபடுத்திக் கொள்வது சீனாவின் நோக்கம் என யுஆன் உள்ளிட்ட சீன தூதுக்குழுவினர் தெரிவித்திருந்தனர். (அ-2)

# கடந்த வருடத்தின் தபால்மூல வாக்குகள் எண்ணப்படும்

## அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

புதுக்குடியிருப்பு,மரிச்சியம்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் கடந்த வருடம் ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னர் அளிக்கப்பட்ட தபால் மூல வாக்குகளும் எதிர்வரும் மார்ச் 24ஆம் திகதி நடைபெறவுள்ள இப்பிரதேச சபைகளுக்கானதேர்தலின் போது பயன்படுத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம்முறை தேர்தலுக்கு கடந்த 2011 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவு பயன்படுத்தப்படும் என மேலதிக தேர்தல் ஆணையாளர் ஆர். எம். ஏ.எல் ரட்ணாயக்க கூறினார்.

தபால்மூலவாக்குகளுக்குகடந்த2009ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவுப்பட்டியல் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் 44 ஆயிரத்து 682 வாக்காளர்கள் உள்ளனர். (அ-2)

# மாணவர்களின் கல்வியில் பெற்றோருக்கும் பங்குண்டு

(யாழ்ப்பாணம்)

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பரீட்சையில் சித்தி எய்தாத மாணவர்களையும் மதித்து அவர்களோடு இணைந்து மேலும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும் என தேசிய மத்திய வங்கியின் முகாமையாளர் திரு.அருளானந்தன் தெரிவித்தார்.

வடமாகாண மக்கள் வங்கியின் ஓய்வூதிய நலன்புரிச் சங்கத்தினரால் 2010, 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் வங்கியியல் கற்கைநெறியை பூர்த்தி செய்த பட்டம்பெற்ற ஊழியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ். கன்னாதிட்டிச் சந்தியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து விட்டோம் என்று கர்வமடையாமல் இவ்வாறான மகிழ்ச்சிகளில் இருந்து விடுபட்டு மேலும் மேலும் பட்டங்கள் பெற்று உயர்வடைவதால் தான் நாம் வாழ்க்கையில் முன்னேற முடியும். அத்துடன் கல்வியிலும் முன்னேறலாம்.

தாய், தந்தை இருவரும் இணைந்தே பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் கவனமெடுக்க வேண்டும்.

மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கையை வளர்த்துக் கொள்வதற்கு மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் பதக்கங்கள், தேடயங்கள், புகைப்படங்களை அவர்களின் அறையிலோ அல்லது தாம் அடிக்கடி பார்க்கும் இடங்களிலோ மாட்டிக் கொள்ளல் வேண்டும்.

இதனால் அப்படங்களைப் பார்க்கும் ஒவ்வொரு தடவையும் மாணவர்களுக்குள்ளே சாதனை தொடர்ந்தும் படைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்.

மேலும் வடமாகாணத்திலே சிறந்த வங்கியாகவும் ஏனையவற்றை விட அதிக கிளைகள் கொண்ட வங்கியாகவும் இவ் வங்கி விளங்குகின்றது.

தொடர்ந்தும் இலங்கை மக்கள் வங்கியில் பணிபுரியும் ஊழியர்கள் வங்கியில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வங்கித் துறையில் சேவையாற்ற வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தனர். (அ-4)

# பூந்தமல்லி முகாமில் உள்ளவர்களை மத்திய அரசு விடுவிக்க வேண்டும்

## சீமான் வேண்டுகோள்

(சென்னை)

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பூந்தமல்லி முகாமில் உள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டு மென நாம் தமிழர் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 2 ஆண் டுகளாக பூந்தமல்லி சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தங்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று விசாரணைக்கு உட் படுத்தாமல் பிணைய விடுதலை உள்ளிட்ட சட்ட ரீதியான எந்த வழியையும் நாடவிடாமல் தங் களை கியூ பிரிவு பொலிஸார் தடுக்கின்றனர் என்று கூறி உண்ணாவிரத போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அவர்கள் தங்களை விடுவித்து ஏனைய முகாம்களில் உள்ள தங்கள் உறவுகளுடன் சேர்ந்து வாழ அனுமதித்திட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த 10 நாட்களாக உண் ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்தில் அவர்கள் ஈடுபடும் போதெல்லாம் விரைவில் உங்களை விடுதலை செய்கிறோம் என்று மாவட்ட நிர்வாகம் அவர்களுக்கு உறுதியளித்து போராட்டத்தை கைவிடுமாறு செய்கிறது. அவர்கள் போராட்டத்தை கைவிட்ட பின்னர் அளித்த உறுதி மொழியை மறந்து விடுகின்றனர்.

இப்படி தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வந்த இவர்கள் இப்போது மீண்டும் உண்ணாவிரத போராட்டம் நடத்தி வருகின்றனர். எனவே, தமிழக அரசு அவர்களின் நியாயமான சட்டபூர்வ மான கோரிக்கையை மனிதாபிமானத்தோடு பரிசீலித்து அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி கேட்டுக் கொள்கின்றது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# ஏணி மீது ஏறி சறுக்கி விழுந்ததில் குடும்பஸ்தர் சுயநினைவு இழந்தார்

(யாழ்ப்பாணம்)

தண்ணீர் தாங்கியொன்றை துப்புரவு செய்வதற்காக அதில் சாத்தப்பட்டிருந்த ஏணியில் ஏறியபோது ஏணி பின்பக்கமாக வீழ்ந்ததில் தலையில் படுகாயத்துடன் சுயநினைவை குடும்பஸ்தர் ஒருவர் இழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் சுன்னாகம் பூதராஜர் வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் 4 பிள்ளைகளின் தந்தையான பொன்னன் ராசதுரை(வயது-56) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

தனது வீட்டிலுள்ள தண்ணீர் தாங்கியினை கழுவுவதன் பொருட்டு தண்ணீர் தாங்கியோடு ஏணியை சாத்திவிட்டு ஏறியுள்ளார்.

ஏணியில் ஏறிக் கொண்டிருக்கும் போது ஏணி பின்பக்கமாக சரிந்துள்ளது. இதனால் குறித்த நபரின் தலை பலமாக நிலத்திலுள்ள கல்லோடு அடிப்பட்டதனால் சம்பவ இடத்திலேயே சுயநினைவை இழந்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-4)

# மட்டு. காத்தான்குடியில் போதைப் பொருள் மீட்பு

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவில் மூன்று கிலோ 750 கிராம் கஞ்சா நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி, டீன் வீதியிலுள்ள வீடொன்றிலிருந்தே இந்த கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொண்ட சோதனையின் போது குறித்த வீதியின் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே பொலிஸார் இதனைக் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி கே.அமரசிறி தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-2)

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல். – பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஏழை மாணவர்களுக்கு உதவ முன் வாருங்கள்

கொடிது கொடிது இளைமையில் வறுமை கொடிது என்றார் ஒளவைப்பாட்டி. இளைமையில் வறுமை இருக்குமாயின் அதனால் ஒரு மனிதனின் பூரணத்துவம் என்பது தொக்கி நிற்கும்.

போசாக்கான உணவு, கல்வி, சமூக அந்தஸ்து போன்றவை இதனால் பாதிப்படையும். இத்தகைய பாதிப்பு பிள்ளைகளின் தன்நம்பிக்கை, சுய கௌரவம், மனநிலை ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தி விட, அந்தத்தாக்கம் வாழ்நாள் முழுவதும் பாதகமாக–மனக்குறையுடையதாக இருந்து விடுகின்றது.

இதன்காரணமாகவே இளமையில் வறுமை கொடிது என்றார் ஒளவையார்.

அதேநேரம் ஒரு கவிஞன் 'நீ ஏழையாகப் பிறந்தால் அது உன் தவறன்று. ஆனால் நீ ஏழையாக இறந்தால் அது உன் தவறு' என்று தன் கவிதை வரிகளில் குறிப்பிட்டிருப்பதும் இங்கு நோக்குதற்குரியது.

எதுவாயினும் மிகக் கொடியது எது என்று யாரேனும் நம்மிடம் கேட்பார்களாக இருந்தால்,

ஒரு மாணவன் கெட்டிக்காரன் எனினும் அவனிடம் இருந்த வறுமை காரணமாக அவனால் உயர் கல்வியைத் தொடர முடியவில்லை என்ற நிலை இருக்குமாயின் அதுவே மிகப்பெரும் கொடுமை என்போம்.

கற்கவேண்டிய நேரத்தில் கற்றல் என்பது மிகவும் முக்கியமானது. சில மாணவர்கள் ஆர்வத்தோடு கற்பதற்குத் தயார் இல்லை.

இன்னும் சில மாணவர்கள் கற்பதில் ஆர்வம் முடையவராக இருக்கின்ற போதிலும், அவர்களின் பொருளாதர சூழ்நிலை அதற்குத்தடை விதிக்கின்றது.

நேற்றுக் கூட, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் அலுவலகத்துக்கு வந்தார்.

பகுதிநேரமாக வேலைசெய்ய வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார். வேலை செய்து படிப்பது என்ற அவரின் முடிவு நியாயமானதுதான்.

அதேநேரம் படித்தல்–வேலைசெய்தல் என்ற இரண்டு விடயமும் ஒன்றுக்கொன்று எதிர்வினையுடையது.

அந்த மாணவனுக்கு யாரேனும் உதவ முடிந்தால் நன்றாக இருக்கும் என்று ஒரு கணம் நினைத்துப்பார்த்தோம். நம் நினைப்பில் வான் உயர்ந்த கோபுரங்கள், மகா குடமுழுக்குகள், பட்டாடைத் தோரணங்கள், தட்சணையாக வழங்கப்படும் இலட்சோப இலட்சங்கள் என்ற காட்சிகள் தென்பட்டன.

மறுபுறத்தில், இறுதி ஊர்வலங்கள், சந்தியில் வைத்து வெடிக்கப்படும் பட்டாசுகள், கூடவே குளிர்பானம் வழங்கும் புதுப்பண்பாடுகள் இவற்றைத் தொடர்ந்து கல்வெட்டுக்கலாசாரங்கள், அதில் திருமுறைகளைப் பிழையாக அச்சடிக்கும் அஞ்சாமைகள், அவற்றை வீதியில் போட்டுவிட்டுச் செல்லும் வழமைகள்.

ஓ! இறைவா, முன்பெல்லாம் நிலக்கிழார்கள் தங்கள் காணிகளை கோயிலுக்குத் தானமாகக் கொடுத்தார்கள்.

கோயில்கள் அவற்றை காணியில்லாதவர்களுக்குக் குடியிருக்கக் கொடுத்தன.

கூடவே கோயில் காணியில் குடியிருப்பவர்கள் காலாகாலமாக அதில் குடி இருக்க முடியும் என்ற தேசவழமையையும் வகுத்துச்சென்றார்கள்.

அன்று ஆலயத்தினூடாக எத்துணை சமூகப் பணி. மக்கள் தொண்டில் மகேசனைக் காணும் அற்புதம்.

இன்றோ அது மலையேறிப்போய் இப்போது கோடியைக்கொட்டிக் கோபுரம் கட்டுவதே மன்றெடுத்த சேவடியானுக்குச்செய்யும்பணியென்று ஆகிவிட்டது.

புண்ணியங்கள் வேறு; பகட்டுகள்வேறு; புண்ணியம் செய்தல் என்பது அந்த ஏழை மாணவனுக்கு உதவுவதுதான்.

# சர்வதேச நாணய நிதியத்தின் எஞ்சிய கடனும் பெறப்படும்

## நிலைப்பாட்டை மாற்றியது அரசு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் அங்கீகரித்த 2.6 பில்லியன் டொலர் கடனின் கடைசிக் கொடுப்பனவான 800 மில்லியன் டொலரை இலங்கை பெற்றுக் கொள்ளாது என இலங்கை மத்திய வங்கி முன்னர் தெரிவித்திருந்த போதிலும் இத்தொகையை பெற்றுக்கொள்வதற்கு விருப்பம் தெரிவிப்பதற்கான கடிதம் ஒன்றை அடுத்தமாதம் அனுப்பவுள்ளதாக சர்வதேச நாணய ஒத்துழைப்புக்கு பொறுப்பான சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

சர்வதேச நாணயநிதியத்தின் மேலதிக ஒத்துழைப்பு இன்றி பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள முடியும் என அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருப்பதாக மத்தியவங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கடந்தமாதம் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஆரோக்கியமான உறவை பேணுவதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளதாக கலாநிதி அமுனுகம தெரிவித்தார்.

முழுமையான கடனைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையிலிருந்து அரசாங்கம் முற்றாக விலகவில்லை. எஞ்சிய தொகையை நாம் பெறுவது என்றால் அடுத்த மாதம் நாம் தனியான கடிதம் ஒன்றில் கையெழுத்திட வேண்டியிருக்கும்.

வெளிநாட்டு நாணய கையிருப்பு அடிப்படை தொடர்பாக அரசாங்கம் தீர்மானம் மேற்கொள்ளும் என அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான 2.6 பில்லியன் டொலர் கடனை சர்வதேச நாணய நிதியம் 24.06.2009ஆம் திகதி அங்கீகரித்தது. இவற்றில் 1.8 பில்லியன் டொலரை 7 கட்டங்களில் இலங்கை ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந–8,11)

# இலவச மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு, பிரதேச இளைஞர் கழக சம்மேளன ஆண்டு விழாவினை முன்னிட்டு மானிப்பாய் பரிஷ்லியோ கழகத்துடன் இணைந்து நடத்தப்படும் இலவச கண் மற்றும் பொது மருத்துவமுகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப. 8 மணிமுதல் 12 மணி வரை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஆண்கள் விடுதிச்சாலையில் நடைபெறவுள்ளது என இளைஞர் கழக சம்மேளனம் அறிவித்துள்ளது.

இம்மருத்துவ முகாமில் மாவட்டத்தின் பிரபல வைத்தியர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன் இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# முன்பள்ளி பாலர் பாடசாலைகளை

## உறுதிப்படுத்திக்கொள்ள கோரிக்கை


நாட்டிலுள்ள முன்பள்ளி மற்றும் பாலர் பாடசாலைகள் பல பதிவு செய்யப்படாமல் உள்ளதால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இவ்வாறான நிறுவனங்களில் சேர்க்கும் போது அவற்றின் தரத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும் என சிறுவர் செயலகம் ஆலோசனை வழங்கியுள்ளது.

பதிவுசெய்யப்படாத முன்பள்ளி நிறுவனங்களை நடத்துவோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு சட்டத்தில் இடமில்லாததால் தம்மால் இது தொடர்பாகஎதுவும்செய்யமுடியாதிருப்பதாக சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சின் சிறுவர் செயலகத்தின் பிரதிப்பணிப்பாளர் ஜயந்த பீரிஸ் கூறியுள்ளார்.

முன்பள்ளிகளின் ஆசிரியர் தராதரங்கள், கற்பிக்கும்சுற்றாடல்நிலைமைகள் நிறுவனத்தின் ஏனைய தராதரங்களை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென பெற்றோர்களிடம் நாம் கோருகிறோம். இதனால் பாதிக்கப்படுவது பிள்ளைகள் தான் என அவர் கூறியுள்ளார். (அ–2)

# தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

## என் குருபர புங்கவ சிங்கமே



கசடு தீர்த்தறங் கற்றிட வேண்டுமே
கல்வி யாற்பயன் பெற்றிட வேண்டுமே
அசடர் நட்பை அகற்றிட வேண்டுமே
அந்தி சந்தி அடிதொழ வேண்டுமே
நிசசொ ரூபம றிந்திட வேண்டுமே
நீங்கா தென்று மிருந்திட வேண்டுமே
அசலு னக்கிலை யென்ற குருபர!
ஆண்மை விஞ்சிடும் அற்புதச் சிங்கமே!

# நோயாளர் மட்டில் இயேசுவின் மனநிலையை கொண்டிருப்போம்

நோயினாலும், வயோதிபத்தினாலும் துன்பப்படுவோர் நமது சமுதாயத்தில் அதிகம். குழந்தைகள் தொடக்கம் பெரியவர்கள் வரை ஏராளமானவர்களைப் பாதிப்பதை நாம் வாழ்வில் காணுகின்றோம். நோயினால் பாதிக்கப்பட்டோரை பராமரிப்பது என்பது எளிதான காரியமல்ல. ஆனால் அவர்கள் மட்டில் மானிடர்களாகிய எமக்கு இருக்கவேண்டிய மனித நேயப் பண்புகள் எவை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. 'மருத்துவன் நோயற்றவருக்கன்று நோயுற்றுவருக்கே தேவை' என்ற இயேசு நோயாளர் மட்டில் தனது செயற்பாடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தினார் என்பதை இயேசுவின் பகிரங்கப் பணிவாழ்வு எமக்கு கற்பிக்கிறது.

## பரமபிதா காட்டிய பாதை

நோயாளிகளை நாம் எவ்வாறு கவனிக்க வேண்டும் என்பதை இன்றைய நற்செய்தியில் இயேசு தெளிவாகக் காட்டுகிறார்.நீர் விரும்பினால் எனது நோயைக் குணமாக்க உம்மால் முடியும் (மாற் 1: 40) என மன்றாடிய நோயாளிக்கு இறைமகன் இயேசு வாழ்வு கொடுக்கிறார்.


சமூகத்தில் வாழ வேண்டிய மனிதர் வியாதியினால் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகிறார். உறவினர்களுடன் குடும்பத்திலிருந்து மகிழ வேண்டியவர் குடும்பத்திலிருந்து தள்ளிவைக்கப் பட்டுத் தனிமரமாக, தீட்டுடைய வராக ஊருக்குவெளியேநிற்கிறார் (லேவி 13:46).

இயேசுவும் நோயாளியின் குரலில் வெளிப்படும் அவலநிலையை அறிகிறார். சக மனிதருடன் சேர்ந்து வாழ வேண்டியவன் சேரியில் நசுக்கப்பட்டவராக வாழும் நிலை: நோயைக் காரணம் காட்டி சமூகம் இவரை பிரிந்து விட்ட நிலை, இவரது இறைச்சாயலின் சிதைவுக்கு காரணம் அவர் வாழும் சமூகமே என்பதனை நன்குணர்ந்த இயேசு அவருக்கு வாழ்வு கொடுப்பதை நாம் அவதானிக்க முடிகிறது.

சமூகத்தின் இப்போக்கிற்கும் இயேசுவின் மனநிலைக்கும் இடையேயான வித்தியாசம் என்ன? இயேசுவின் மனநிலை நோயாளிகளைத் தொடக் கூடியவை, சுடும் நெஞ்சில் குளிர்ந்த நீரோடையாய் ஓடக்கூடியவை. நோயாளியின் எதிர்பார்ப்பு, தேவைகளை நிறைவு செய்யக் கூடியவை. பரிவுகொள்ளுதல், கையை நீட்டுதல், தொடுதல், பேசுதல் போன்ற அன்பு, பரிவு நிறைந்த செயல்களால் நோயாளிக்கு உள்ளத்திலும், உடலிலும் குணமளிக்கிறது.

உண்மையான இறையாட்சிப் பணியையும், மனிதநேயப் பணியையும் எமக்கு புலப்படுத்துகிறார்.

நாம் எமது உடலாலும், உறவாலும் எமது இல்லங்ளிலும் குடும்பங்களிலும் வாழ்ந்தாலும் எமது உற்றார் நோய்களால் பீடிக்கப்படும் போதுபரிவு அன்பு, கூட்டொ ருமைப்பாடு என்பவை இல் லாததால் அவர்களை



பொதுவாக நாம் தொலைவில் வைத்துக் கொள்வது வெளிப்படையுண்மை.


வாழ்வதைவிட சாவதே மேல் என்று நினைத்து இறைவன் அழைப்பதற்கு முன்னதாகவே தமது வாழ்க்கையை முடித்துக்கொள்ள நினைக்கிறார்கள். இதற்கு குடும்பங்களில் உள்ளவர்களின் பரிவற்ற போக்கும், கடினமன

அருட்சகோதரர் றமேஸ் அ.ம.தி

முமே காரணம். எனவே நோயாளிகள்மட்டில் இயேசு வின் மனநிலையை நாமும் பின்பற்று வோம்.

இறைவனின் வழியில் மனித நேயம் காத்து இறை யாட்சியை மலரச்செய்ய புறப்படுவோம்.

# மன்னார் வளைகுடாப் பகுதியில் கடலோர தன்மை குறித்து ஆய்வு


(மதுரை)


மன்னார் வளைகுடா பகுதியில் 7 தீவுகளில் கடல் நீர் நச்சுத்தன்மை குறித்து ஆய்வு செய்த மதுரை காமராஜ் பல்கலை சுற்றுச் சூழல் துறை அறிக்கையை மத்திய அரசிடம் தாக்கல் செய்துள்ளது. தமிழக தென்பகுதியில் மன்னார் வளைகுடா, மண்டபம், இராமேஸ்வரம் கடல் பகுதியில் உள்ள குருசடை, சிங்கில், மணாலி, மணாலிபுட்டி, பூமரிச்சான், முயல்தீவு, புள்ளிவாசல் ஆகிய தீவுகளில் ஏராளமான மீன் இனங்கள் உள்ளன.

இப்பகுதிகளில் மீன் இனப் பெருக்கத்துக்கு முக்கிய காரணமான பவளப் பாறைகளும் பல்வேறு வகையான கடல் வளங்களும் உள்ளன. இப்பகுதியில் கடல் நீரில் நச்சுத் தன்மை அதிகரித்தால் மீன் இனப் பெருக்கமும் பவளப்பாறைகள் கடல் வளங்களுக்கு பாதிப்பு ஏற்படும்.

தென்பகுதி தூத்துக்குடி பகுதி தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகள் கடல் நீரில் கலக்கின்றன. இராமேஸ்வரம், கீழக்கரை, திருச்செந்தூர் போன்ற கடலோர கிராமங்கள் மற்றும் நகர்ப்பகுதி யில் இருந்து கழிவுகள், நச்சுப் பொருட்கள், திடக்கழிவுகள் போன்றவையும் கடலில் கொட்டப்பட்டு வருகின்றன. இவற்றால் கடல் நீரில் நச்சுத் தன்மை ஏற்பட்டு வருவது கண்டறியப்பட்டது.

இது குறித்து பேராசிரியர் குமரகுரு கூறியதாவது, கடலோர நீரின் நச்சுத் தன்மை குறித்து அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அங்குகடலோர நீரின் மாசுத்தன்மை குறித்தும் அளவிடப்பட்டுள்ளது. அதேபோல் இந்தியாவில் முதன் முறையாக மன்னார் வளைகுடா பகுதியில் இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதன் அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# மாலைதீவில் அரசியல் குழப்ப நிலையை ஆராய இந்திய சிறப்புத் தூதர் விரைவு



மாலைதீவில் தற்போது நிலவும் அரசியல் குழப்பநிலை குறித்து ஆராய. பிரதமர் மன் மோகன் சிங் சிறப்புத்தூதரை அனுப்பியுள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதி இருந்த முகமது நஷீத் நீதிபதியை கைதுசெய்த விவகாரத்தால் அங்கு எதிர்க்கட்சியினர் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். மாலைதீவில் நிலவும் அரசியல் சூழல் குறித்து ஆராய அமெரிக்க துணை அமைச்சர் நேற்று மாலை சென்றுள்ளார். இந்நிலையில் பிரதமர் மன்மோகன் சிங் தன் சார்பில் வெளியுறவுத்துறை செயலர் எம்.கணபதியை சிறப்பு தூதராக மாலேவுக்கு அனுப்பியுள்ளார். மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி நஷீத்தையும் தற்போதைய ஜனாதிபதி வாகீத்தையும் கணபதி சந்தித்து தேச ஒற்றுமை மிக்க அரசு அமைய இந்தியா விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

எந்த உதவி தேவைப்பட்டாலும் இந்தியாவை தொடர்பு கொள்வதாக நஷீத் இந்திய ஹைகமிஷனரிடம் தெரிவித்துள்ளார். (அ-2)

# மும்பை குண்டுவெடிப்பு விவகாரம் குற்றவாளிகளுக்கு தண்டனை

## மும்பை உயர் நீதிமன்றம் உறுதி

கடந்த 2003 ஆம் ஆண்டு மும்பையில் நடந்த இரட்டை குண்டு வெடிப்பில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மரணதண்டனையை விதித்து மும்பை உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

இந்த வழக்கின் விசாரணை முடிந்து கடந்த 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மரண தண்டனை விதித்து சிறப்பு பயங்கரவாத தடுப்பு சட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால்,இந்த தீர்ப்பை எதிர்த்து மும்பை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். இந்த மனுவினை விசாரித்து வந்த உயர் நிதிமன்றம் அந்த மனு மீதான இறுதி தீர்ப்பை நேற்றைய தினம் அறிவித்தது. அதன் படி நேற்றைய தினம் மும்பை உயர் நீதிமன்றம் இவர்களின் மரணதண்டனை மீதான தீர்ப்பை உறுதி செய்து உத்தரவிட்டுள்ளது.

தீவிரவாத குற்றத்துக்கு திருமண தம்பதியருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.(அ-2)




# காரில் யானைத்தந்தம் கடத்தல்;4 பேர் கைது

தமிழ் நாட்டில் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வனப்பகுதியில் யானை தந்தம் கடத்திய நான்கு பேரை அதிரடிப்படை மற்றும் வனத்துறையினர் கைது செய்தனர்.

கம்பனூர் என்ற இடத்தில் வனப் பகுதிக்குள் ஒரு கறுப்பு நிற கார் வந்தது. அந்த காரை ரோந்து குழுவினர் நிறுத்தி சோதனை செய்தனர். காருக்குள் கோணிப்பையில் யானை தந்தங்கள் 4 இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அதில் பயணித்த நான்கு பேரையும் வனத்துறையினர் கைது செய்து விசாரித்தனர். அவர்கள் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 4 பேர் எனத் தெரியவந்தது.

அவர்களிடம் இருந்த யானை தந்தத்தினை பறிமுதல் செய்தனர். (அ-2)

# விஷ சாராயம் குடித்து 30 பேர் பலி; பலருக்கு கண் பறிபோகும் நிலை

## ஒரிசாவில் துயரம்

ஒரிசா மாநிலத்தில் விஷ சாராயம் குடித்து 30 பேர் பலியானதை அடுத்து மேலும் சிகிச்சை பெற்று வருபவர்களில் பலருக்கு கண்பார்வை பறிபோய் வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரிசாவில் அண்மையில் கட்டாக் மற்றும் குர்தா மாவட்டங்களில் விஷ சாராயம் குடித்த 30 பேர் பலியாகினர். விஷ சாராயம் குடித்த பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இவர்களில் 6 பேர் தங்களின் கண்பார்வை பறிபோனதாகக் கூறினர். இதையடுத்து அவர்கள் வைத்தியசாலையில் கண் சிகிச்சை பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்களின் கண்கள் பரிசோதனை நடத்தப்பட்டது.பரிசோதனையில் 6 பேரின் கண்களும் பாதிப்படைந்து இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். இதனால் பலரின் கண்கள் பறிபோகும் அபாயம் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-2)

# உலகிலேயே மிகவும் மகிழ்ச்சியாக இருப்போரின் பட்டியலில் இந்தியர்களும்

## கருத்து கணிப்பில் தகவல்

இயற்கை பேரிடர்கள், ஊழல் விவகாரங்கள், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, மின்வெட்டு பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகளால் மக்கள் அவதிப்பட்டு இருந்த போதிலும் உலகத்திலேயே மிகவும் மகிழ்ச்சியானவர்கள் பட்டியலில் இந்தியர்களும் இடம்பெற்றுள்ளது கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

கடந்த 2007 அம் ஆண்டு ஆரம்பமாகி இது வரை 24 நாடுகளில் சுமார் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களிடம் நடத்திய கருத்துக் கணிப்பின் படி இம் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளதாக கருத்துக் கணிப்பு நடத்திய நிறுவனமான இப்சோஸ் குளோபல் நிறுவனத்தின் மூத்த துணை தலைவர் ஜான் ரைட் கூறியுள்ளார். இதன் படி உலகிலேயே மகிழ்ச்சியான மக்கள் வாழும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் இந்தோனேசியாவும் 2 ஆம் இடத்தில் இந்தியாவும் 3ஆம் இடத்தில் மெக்சிக்கோவும் உள்ளது. முறையே 4 ஆம் மற்றும் 5 ஆம் இடத்தில் பிரேசில் மற்றும் துருக்கி நாடுகள் உள்ளன. மகிழ்ச்சி குறைவாக உள்ள மக்கள் உள்ள நாடுகள் பட்டியலில் ஹங்கேரி, தென்கொரியா, ரஷ்யா, ஸ்பெயின் இத்தாலி உள்ளிட்ட நாடுகள் உள்ளதாக ஜான் ரைட் கூறினார். (அ-2)

# விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுவெட்டு போலியானது

## திருமாவளவன் தெரிவிப்பு



விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு போலியான குறுந்தகடை வெளியிட்டுள்ளது என்று திரு மாவளவன் பேட்டியளித்துள்ளார்.


விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறுகையில்,கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் ஒரு மணி நேரம் மட்டும் தான் மின்வெட்டு இருந்தது.

ஆனால் இப்போது பல மணி நேரம் மின்வெட்டு உள்ளது. அப்போது மின்வெட்டு குறித்து கேள்வி எழுப்பியவர்கள் இப்போது எதிர்க் கட்சிகள் வரிசையில் உள்ளனர்.

எனினும் மின்வெட்டு குறித்து வாய் திறக்காமல் உள்ளனர் என்றார். மேலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு போலியான குறுந்தகடு ஒன்றை வெளியிட்டுள்ளது.ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் ஒன்றை கொண்டு வர உள்ளது. அந்த குற்றச்சாட்டில் இருந்து தப்பிக்கவே இவ்வாறு இலங்கை அரசு பொய் பிரசாரம் செய்து வருகிறது என்று தெரிவித்து ள்ளார். (அ-2)

# 2ஜி ஊழலுடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்

## அத்வானி ஆவேசம்



2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ராசா மட்டும் இவ்வளவு பெரிய ஊழலைசெய்திருக்கமுடியாது எனவே, இந்தஊழலில்தொடர்புடையஅனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று பா.ஜ. க. மூத்த தலைவர் எல்.கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் 1.76 இலட்சம் கோடி இமாலய ஊழல் நடைபெற்று இருந்தது அம்பலமானது. இதையடுத்து தி.மு.க. முன்னாள் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ஆ.ராசா கைது செய்யப்பட்டு திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவருடன் தி.மு.க தலைவர் கருணாநிதியின் மகள் கனிமொழி எம்.பி., சன்டி.வியின் நிர்வாக இயக்குநர் சரத்குமார் மற்றும் தொலைத் தொடர்பு துறையைச் சேர்ந்த அதிகாரிகள் பலர் மீது வழக்கு வழக்கு தொடரப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில் இது குறித்து கருத்து தெரிவித்த பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே.அத்வானி 2 ஜி ஊழல் வழக்கில் அப்போதைய மத்திய அமைச்சர் ஆ.ராசா மட்டும்தான் பொறுப்பு என்பது போல் காங்கிரஸ் கட்சிகூறிவருவது அதிர்ச்சி அளிக்கும் வகையில் உள்ளது. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போ க்கு கூட்டணி ஊழல்களின் பல்கலை க்கழகமாக உள்ளது. வாக்குக்கு பணம் கொடுத்தால் 2 ஜி அலைக் கற்றை முறைகேடு, கொமன்வெல்த் போட்டி முறைகேடு, குவாட்ரோச்சி விவகாரம், ஆதர்ஷ் ஊழல், மத்திய கண்காணிப்பு ஆணையராக ஊழல், கறை படிந்த தாமஸ் நியமனம் , வெளிநாட்டு வங்கிகளில் கறுப்பு பணம் குவிப்பு, ஹசன் அலி வரி ஏய்ப்பு உட்பட பல்வேறு சாதனைகளை காங்கிரஸ் கட்சி செய்துள்ளது.

2 ஜி அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் ஆ.ராசா மட்டுமே இவ்வளவு பெரிய ஊழலை செய்திருக்க முடியும் என்பதை நம்ப முடியவில்லை. இந்த முறைகேட்டில் கூட்டணியில் உள்ள அனைவருக்கும் பங்கு உள்ளது. இவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இவ்வாறு எல்.கே. அத் வானி தெரிவித்துள்ளார்.

(அ-2)

# முக்கியத்துவம் வாய்ந்த போட்டியில் பாக்கிடம் தோல்வியுற்றது ஆப்கான்

சார்ஜாவில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற ஆப்கானிஸ்தான் அணியுடனான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட் டுகளால் வெற்றியீட்டியுள்ளது.

இங்கிலாந்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ஒரு நாள் சுற்றுப்போட்டி எதிர் வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் சார்ஜாவில் ஆப்கானிஸ்தானுடன் ஒரு நாள் சர்வதேச போட்டியில் பாகிஸ்தான் அணி பங்குபற்றியது.

ஆப்கானிஸ்தானைப் பொறுத்தவரை அவ் வணியின் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு போட்டி இதுவாகும்.

ஏற்கெனவே ஐ.சி.சி இணை அங்கத்துவ முடைய நாடுகளுடன் 18 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆப்கானிஸ்தான் அணி பங்கு பற்றியுள்ளது.

எனினும் டெஸ்ட் அந்தஸ்துடைய அணி ஒன்றுடன் ஆப்கான் அணி பங்குபற்றியுள் ளது. எனினும் டெஸ்ட் அந்தஸ்துடைய அணி யொன்றுடன் ஆப்கானிஸ்தான் அணி ஒரு நாள் சர்வதேச போட்டியொன்றில் மோதி யமை இதுவே முதல் தடவை.

## இலங்கையின்...

கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்படும் சந்தர்ப்பத்தில் அதனை ஆதரிப்பதான முடிபை இந்தியா எடுப்பதற்கான வாய்ப்பு அதிகரித்து வரு வதாகவும் இந்திய ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந)


## மாலைதீவு...

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். சிகிச்சைக் காக தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு வந்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

19 வருடங்களின் பின்னராவது இந் நாட்டை அழகான நாடாக உருவாக்குவேன்; உருவாக்கித் தருவேன். கடந்த 8ஆம் திகதி என்னை விடுதலை செய்வதற்காக போராட் டங்களை நடத்திய அனைவருக்கும் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களின் போராட்டம் வெற்றியடைந்து அது தற்போது தெற்காசியாவை நோக்கியும் வந்துள்ளது. இந்த மக்கள் போராட்டம் இலங் கைக்கு வரும் காலம் வெகு தொலைவில் இல்லை எனவும் பொன்சேகா அங்கு தெரி வித்தார். (ந-8,11)

# கலங்க வைக்கும் யுவராஜ் படம்



(பாஸ்டன்)

புற்றுநோய் பாதிப்பில் இருந்து விரைவாக மீள, கீமோதெரபி சிகிச்சை மேற் கொண்டு வருகிறார் யுவராஜ் சிங். இதன்பக்க விளைவு காரணமாக தலைமுடியை இழந்து, உடல் மெலிந்து காணப்படும் தனது தற்போ தைய படத்தை வெளியிட் டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி யின் அதிரடி துடுப்பாட்ட வீரர் யுவராஜ். இவரது நுரையீர லுக்கு இடையில் கோல்ப் பந்து அளவுக்கு சிறிய புற்று நோய் கட்டி இருப்பது கண்டறியப்பட்டது. இதற்காக அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் புற்றுநோய் ஆய்வு மையத்தில் கீமோதெரபி சிகிச்சை பெற்று வருகின்றார். இந்த சிகிச்சையில் பக்கவிளைவுகள்தான் அதிகம். இதன்காரணமாக தலைமுடி இழப்பு, உடல் மெலிவது வழக்கம். யுவராஜும் தலைமுடியை முழுமையாக இழந்து, ஆளே மாறிப் போயிருக்கின்றார்.

தனது டுவிட்டர் இணையத்தளத்தில் தற்போதைய புகைப்படத்தை வெளியிட்டுள்ள யுவராஜ் விடுத்துள்ள செய்தியில், இறுதியில் எனது தலைமுடி போய்விட்டது. ஆனாலும் வலிமையாக இருக்கின்றேன். தேசமே எனக்காக பிரார்த்திக்கும் நிலையில், மிகவும் துணிச்சலாகப் போராடி, வலுவான வீரராக மீண்டு வருவேன். இந்திய கிரிக்கெட் அணியின் உடை, தொப்பி அணிந்து நாட்டுக்காக மீண்டும் விளையாட ஒவ்வொரு நாளும் ஆசைப் படுகின்றேன்.

வைத்தியசாலையில் உள்ள ஜிம் சென்று, 20 நிமிடங்களுக்கு சைக்கிள் பயிற்சி செய்தேன். இது உடலுக்கு நன்றாக இருந்தது. 'புற்றுநோய்க்கு எதிராக போராடி வெற்றி பெறுவோம்' என்பதை வலியுறுத்தி, எனக்காக அமுல் நிறுவனம் பிரத்தியேகமாக வெளியிட்ட விளம்பரம் மிகவும் சிறப்பாக இருந்தது. இவ்வாறு யுவராஜ் தெரிவித்துள்ளார்.

# ஆஸி-இந்தியா இன்று மோதல்

இந்தியா–அவுஸ்திரேலியா– இலங்கை ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணி களுடன் தலா 4 முறை மோத வேண்டும்.

புள்ளிகள் அடிப்படையில் முதல் 2 இடங் களை பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும். கடந்த 5-ம் திகதி நடந்த தொட க்க ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 65 ஓட்டங் களில் இந்தியாவைத் தோற்கடித்தது.

8-ம் திகதி நடந்த 2-வது ஆட்டத்தில் இந் தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை யை வீழ்த்தியது

நேற்று முன்தினம் நடந்த 3-வது லீக் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 5 ஓட்டங்களில் இலங்கையை தோற்கடித்தது. 4- வது லீக் ஆட்டம் அடிலய்டில் நடக்கிறது.

இதில் இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் மீண்டும் மோதுகின்றன.

## பாக்.ஜனாதிபதி...

மூன்று உடன்படிக்கைகள் கைச் சாத்தாகி யுள்ளன.

இது தவிர, இரண்டு நாடுகளுக்கிடையே யான நிரந்தர பொருளாதாரத்தை தொடர்ந் தும் தக்கவைத்து கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனிடையே, இலங்கையின் விவசாய, பெருந்தெருக்கள், தாதிய சேவை, உள்ளிட்ட பல்வேறுதுறைகளுக்கு பாகிஸ்தான் உதவி யளிக்கத் தயார் என பாகிஸ்தான பிரதமர் யூசுப் ரசா கிலானி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் உறுதியளித்துள்ளார்.

விசேடமாக இலங்கையில் வீதி அபிவி ருத்திக்கு பாகிஸ்தான் புதிய தொழில் நுட்பத் தை பயன்படுத்தும் திட்டமொன்றுக்கு இணக் கம் எட்டப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கலந்துரையாடல்களின் பின்னர் இடம் பெற்ற விசேட விருந்துபசாரத்தில் இரண்டு நாட்டு ஜனாதிபதிகளும் கலந்து கொண்டனர்.

இருநாடுகளினதும் கலாசாரங்களை வெளிப்படுத்தும் நிகழ்வுகளும் அங்கு இடம் பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தகவல் கள் தெரிவிக்கின்றன. (ந-8,11)


# மரண அறிவித்தல்

## கந்தர் சின்னத்தம்பி

கண்டாவளையைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாளை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் சின்னத்தம்பி அவர்கள் 11.02.2012 வவுனியாவில் காலமானார்.

அன்னார் வசந்தாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தர் குஞ்சுப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு நாகரட்ணம் ஆகியோரின் மருமகனும், அஜந்தா(வவுனியா வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர்), ரஜிதரன்(பிரான்ஸ்), விஜிகரன்(விசுவமடு), விஸ்ணுகா (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னம்மா, அமரர் சுப்பிர மணியம், கந்தசாமி, ரத்தினம், கனகரட்ணம் (கணேசு) (கட்டிடத் திணைக் களம்-வவுனியா ),நவரத்தினம்(சோமு) (ப.நோ.கூ.சங்கம்- பரந்தன்) ஆகி யோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.02.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2மணியளவில் இல.43,3-ம் ஒழுங்கை, வேப்பங்குளம் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தச்சனாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கனகரத்தினம்(கணேசு)
(கட்டிடத் திணைக்களம்-வவுனியா)

(சி-5836)


## வெள்ளைக் கொடியுடன் ...

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது சர்வதேச மனிதவுரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதி ரான வகையில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட் டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர் மானம் ஒன்றைக் கொண்டுவரவுள்ள நிலை யில், இத்தகவல் வெளிவந்துள்ளது.

இப் போரின்போது விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் வெள்ளைக் கொடியுடன் படைத்தரப்பினரிடம் சரணடைவது தொடர் பில் பசில் ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் சபைக் கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதி நிதி பாலித்த ஹோகன மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு இடையில் பரிமாறப் பட்ட கைத்தொலைபேசி குறுந் தகவல்கள் ஏற்கெனவே வெளிவந்திருந்தன.

அத்துடன், இவ்விவகாரம் தொடர்பில் பசில் ராஜபக்ஷ முக்கிய பங்காற்றியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவுக்கு வாக்கு மூலம் அளித்திருந்தார்.

அதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா கடந்த மாத நடுப் பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய் வதற்கு முன்னதாக இலங்கை மீது அழுத் தங்களை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா முயற்சிகள் மேற்கொண்டிருந்ததாக கூறப் படுகின்றது.

ஆயினும் பொறுப்புக் கூறுவது தொடர் பான சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற் றுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அர சியல் விருப்புக் கொண்டுள்ளாரா என்பதை அறிவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு இறுதியாக ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறு இந்தியா அமெரிக்காவிடம் கோரியதாக தெரிய வருகின்றது.

இவ்விடயம் தொடர்பில் அமெரிக்கா கொண்டுள்ள கவலை குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணா தெளிவாக எடுத்துக் கூறியதாகவும் அறியக் கிடைக்கின்றது.

அத்துடன் இவ்விவகாரம் தொடர்பில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண் டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணா உறுதிபடக் கூறியுள்ளார்.

இத்தகையதொரு பின்னணியிலேயே அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் போர்க் குற்ற விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் ஸ்ரீபன் ரப் மற்றும் அமெரிக் காவின் தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் மற்றும் அமெரிக்க இரா ஜாங்கத் திணைக்களத்தின் இரண்டாம் நிலைச் செயலாளர் மரியா ஒட்டேரோ ஆகியோரின் இலங்கை விஜயங்கள் அமைந்துள்ளன.

இவர்கள் தமது பயண நிகழ்ச்சி நிரலில் மாற்றங்களை ஏற்படுத்தி இலங்கைக்கான விஜயத்தை அவசரமாக மேற்கொண்டுள்ள நிலையில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் பல்வேறு தரப் பினருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவர்களின் இவ்விஜயத்தின் போது அரசாங்கத்தின் மீதான சர்வதேச அழுத்தங்கள் தொடர்பில் தெளிவானதொரு செய்தி தெரியப்படுத்தப்படவுள்ளதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

இதனிடையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணா இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர் தமிழ்த் தேசிய கூட்ட மைப்புக்கும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக் கும் இடையிலான இரகசிய சந்திப்பு ஒன்று இலங்கைக்கான இந்தியத் தூதுவரின் ஏற் பாட்டில் இடம்பெற்றுள்ளது.

இந்தியத் தூதுவரும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அரசாங்கத்தரப்பில் அமைச் சர்களான ஜி.எல்.பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைகான அரசியல்தீர்வு தொடர்பில் வீதிவரைவு ஒன்றை உருவாக்கி அதன்படி விடயதானங்களை நடைமுறைப்படுத்தும்படி இந்தியா வலியுறுத் தியிருந்த போதிலும் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ அதனை நிராகரித்துள்ளார்.

அத்துடன் தனது சகோதரரும் படைத் துறை செயலாளருமான கோத்தபாய ராஜ பக்ஷ நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த் தையின் போது காணப்பட்ட இணக்கப் பாடுகள் தொடர்பில் எந்தவொரு உடன்பாட் டிலும் தான் கையெழுத்திடமாட்டேன் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள் ளார்.

இந்நிலையிலேயே வெளிவிவகார அமை ச்சர் ஜி.எல்.பீரிஸை வாஷிங்டனுக்கு பேச்சு வார்த்தைக்கு வருமாறு அமெரிக்க இரா ஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக கூறப்படுகின்து.

அத்துடன் நல்லிணக்கம் பொறுப்புக் கூறும் கடப்பாடு தொடர்பில் இலங்கை அரசின் நிலைப்பாடு என்ன என இக்கடிதத் தில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் கேள்வி எழுப்பியிருந் தார்.

அதேவேளை அமெரிக்காவின்மூத்த அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்யும் போது இலங்கையின் முக்கிய அமைச்சர்கள் அவர்களை சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியும் ஹிலாரி கிளின்டன் இக் கடிதத்தில் பீரிஸுக்கு அறிவித்துள்ளார்.

இந்நிலையில், தனது சகோதரர்களுடன் பல இரவுகள் நடத்திய பேச்சுவார்த்தைக ளைத் தொடர்ந்து ஒரு கால அட்டவணை யின்படி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சிலவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரி வித்துள்ளதாக தெரியவருகிறது.

இந்நிலையில் ஜெனிவாவில் எதிர்வரும் 27ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு உரை யாற்றலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-8,11)

# CHEC

Colombo Higher Education Consultancy

## இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

- யாழ். வண்ணை நாச்சிமார் கோவில் ஸ்ரீ காமாட்சி அம்பாள் மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (18.02.2012) அன்று (10.00am-4.00pm)வரை
- உயர்தர கல்விச்சேவையை நாடளாவிய ரீதியில் பன்முகப்படுத்தும் 'COLOMBO HIGHER EDUCATION CONSULTANCY' யின் அனுசரணையில்
- வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் உயர்கல்வியை தொடர இருக்கும் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமையும் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு.
- UK, AUSTRALIA, FRANCE, GERMANY, ITALY, MOLTA, CYPRUS, POLAND ஆகிய நாடுகளிற்கான Student Visa
- எதுவித முற்பணமும் இல்லாமல்- விசா கிடைத்த பின்னரான பணப்பரி மாற்றம் (Full package method)
- இவ்வாறான விரும்பத்தகுந்த நம்பிக்கை கூடிய வழிகாட்டல் முறையை காலம் காலமாக நாமே செய்கின்றோம்.
- 'நம்பிக்கை, விசா உத்தரவாதம் இவற்றையடுத்து தான் நாணயம், இதுவே நமது இலட்சியம்.'

(மாணவர்கள்,பெற்றோர்கள், உத்தியோகத்தர்கள் ,ஆசிரியர்கள் யாவரும் கலந்து உங்கள் சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள முடியும்)

**COLOMBO HIGHER EDUCATION CONSULTANCY (CHEC)**

No:26, Jeyawardana Ave,Dehiwala.

Jaffna co- ordinater HOTLINE

0779265447

(7477)


# அமைச்சர் ஆறுமுகன்...

ஆறுமுகன்தொண்டமான் மற்றொரு நண்பரை சந்திக்க கோவைக்குச் சென்றிருந்தார். கோவை பந்தயத்திடலில் உள்ள நட்சத்திர விடுதி உதவியாளர்களுடன் தங்கியிருந்தார்.

நள்ளிரவு மதுபோதையில் விடுதி வரவேற்பாளர் பகுதிக்குச் சென்ற ஆறுமுகன் தொண்டமான் அங்கிருந்த பெண் பணியாளர்களிடம் தரக்குறைவாகப் பேசியதாகப் கூறப்படுகிறது.

விடுதிப்பணியாளர்கள் அவரை சமாதானப்படுத்தி அறைக்கு அனுப்ப முயன்றனர். அதற்கு அவர் என்னை ஒன்றும் செய்ய முடியாது நான் இந்திய அரசின் விருந்தினர் என்று கூறி அறைக்குத்திரும்ப மறுத்துள்ளார். ஆறுமுகன் தொண்டமானின் குழப்பம் நீடிக்கவே அது பற்றி பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் ஆறுமுகன் தொண்டமானைச் சமாதானப்படுத்தினர். எனினும் அவர்தொடர்ந்துவாக்குவாதம்செய்யவே பொலிஸார் அவரைத் தூக்கிச் சென்று அவரது அறையில் தள்ளி பூட்டினர் இதனால் அங்கு பரபரப்பு நிலவியது. (ந-8)


## வீடு விற்பனைக்கு

அளவெட்டி அலுக்கைச் சந்தியி லிருந்து 50 யார் தூரத்திலும், 768 பஸ் செல்லும் றோட்டிற்கரு கிலுள்ள 5 1/4 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0114949234 (7470)

## வீடு விற்பனைக்கு

சுழிபுரம் மத்தியில் வீடு விற்பனைக் குண்டு. விலை நேரில் பேசி தீர்மானிக் கப் படும். 20/02, 21/02இல் நேரில் பார்வையிடலாம்.

தொடர்பு: - 077 3301041 (7473)


## துயர் பகிர்கின்றோம்

பெஹலியகொட ஸ்ரீ பூமாரி அம்மன் ஆலய முன்னைநாள் தலைவர்

**பாலுச்சாமி** அவர்கள்

இறைபதம் எய்தியமை அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் மறைவால் துயரடைந்திருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவாச்சாரியார் ஜெகநாதக்குருக்கள், முழங்காவில் மக்கள்

செல்வயோக சித்தி விநாயகர் ஆலயம், முழங்காவில்.


யாழ் நகரில் புதிய உதயம்

# jet D Express
Courier Service

விரைவு பாதுகாப்பு உத்தரவாதம்



உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய

DHL WORLDWIDE EXPRESS Available

| | |
|---|---|
| Swiss Over 10kg | - 850/= |
| Germany Over 10kg | - 700/= |
| France Over 10kg | - 750/= |
| UK Over 5kg | - 900/= |
| UK Over 10kg | - 650/= |

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு விசேட கட்டணச்சலுகையுடன் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும்

Note : • கடலுணவு வகைகள், எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும்
• வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறிவிடப்படமாட்டாது

இல 27, முதலாம் மாடி,
நவீன சந்தை,
(குனம் றெக்ஸ் மேல்)
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150,0772187 301

No.77E,Manning Place,
Wellawatta,Colombo 6,
T.P:- 0112363873
0776509909



## Kokuvil Valarmathy Munnetra Kalagamum Sanasamuga Nilayamum

### VICKRAM - RAJAN - GANGU CRICKET TOURNAMENT - 2012

Final

President : Mr.R. Sivashankar

Chief Guest : Mr.T. Chandrakumar (BOC Manager, Thirunelvely Branch)

**University S.C Vs Jollystars S.C**

Venue : Kokuvil Hindu College Ground

Date : 12th February 2012, Sunday.

Time : 8.30 a.m

(7478)



உள்நாடு வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை விஸ்தரிக்கும் முகமாக DHL யாழ்.குடாநாட்டுகளில் நம்பமுடியாத கட்டணங்கள் இப்பொழுது வழங்கப்படுகின்றது...

உள்நாட்டுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை 24 மணிநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு

அதிரடி விசேட சலுகை...!

கனடா - 1 kg - 500/= சுவிஸ் - 1 kg - 400/=



## திருமுருகன் கொம் நெற்

இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2 தொ.பே.:021 222 7835



## விற்பனைப் பிரதிநிதி தேவை

இலங்கையின் முதற்தர சிக்கனான பிறிமா சிக்கனுக்கு யாழ். மாவட்டத்துக்கான விற்பனைப் பிரதிநிதி தேவை.

**தகைமைகள்:**

- ⇨ க.பொ.த. உயர்தரம்
- ⇨ ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழி அறிவு மேலதிக தகைமைகள்.
- ⇨ சிறந்த சந்தைப்படுத்தலுக்கான திறமையும் அனுபவமும்.

நேர்முகம்: 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் நடைபெறும்.

தொடர்புகளுக்கு: தேவா 0771566661 மனோஜன் 0777755482

(7476)



## GTV ENTERPRISES PVT LTD

Maharaja Food Products, Vijeya Enterprises, SriLankan Airlines Cargo Agent

மகாராஜா Food இன் மற்றுமொரு முயற்சி

வீட்டுப் பொருட்கள் மற்றும் வர்தகப் பொருட்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் விரைவாகவும் , பாதுகாப்பாகவும் உரியவர்களின் முகவரிக்கு கையளிக்கப்படும்.







➤ G.T.V Transport

NO. 225, Kasthuriyar Road, Jaffna. Tel-021 222 4338

NO. 18/3, Dr.E.A. Cooray Mawatha Wellawatte, Colombo. Tel-021 236 0926

No.272, K.K.S. Road, Jaffna. Tel-021 222 4825


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.